விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து இரண்டு

Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 கார்த்திகை 28 ஞாயிற்றுக்கிழமை (14.12.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 360

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# அதிகாரத்தை ஒப்படைப்பேன்

# கத்தோலிக்க திருச்சபையிடம் ஜனாதிபதி மகிந்த உறுதி

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் தான் தோல்வி அடைந்தால், எவ்வித தயக்கமுமின்றி அதிகாரத்தை ஒப்படைத்து விடுவேன் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கத்தோலிக்கத் திருச்சபைக்கு தெரிவித்துள்ளார்.

21 ஆம் பக்கம் பார்க்க....



## றோ தலைவருக்கு திடீர் இடமாற்றம்

(டில்லி)

இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் உள்ள இந்திய புலனாய்வுப் பிரிவான றோ அமைப்பின் கொழும்பு பணியகத்தின் தலைவராக பணியாற்றிவந்த கே. இளங்கோ உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் புதுடெல்லியில் உள்ள தலைமையகத்திற்கு மாற்றப்பட்டுள்ளார்.

கொழும்பில் உள்ள றோ பணி

22 ஆம் பக்கம் பார்க்க...

## ஜூன் மாதமளவில் நாடாளுமன்றத் தேர்தல்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனவரி மாதம் 8 ஆம் திகதி நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் பிரதான வேட்பாளர்களில் யார் வெற்றி பெற்றாலும் எதிர்வரும் ஜூன் மாதம் பொதுத் தேர்தலை நடத்துவது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

21 ஆம் பக்கம் பார்க்க..

## இந்துக்களை பந்தாடிவிட்டு திருப்பதியில் வழிபாடா?

### மனோ கணேசன் கேள்வி

(கொழும்பு)

திருப்பதி வெங்கடாசலபதி ஆலயம் உலக வாழ் இந்துக்களின் புனித ஸ்தலம். கிறிஸ்தவர்களுக்கு வத்திகானும், இஸ்லாமியர்களுக்கு மக்காவும் எப்படியோ, அப்படியே இந்துக்களுக்கு திருப்பதி ஆகும். இந்நிலையில் இங்கே வாழும் இந்துக்களை பந்தாடிவிட்டு, உலக இந்துக்களின் கடவுள் திருப்பதி வெங்கடாசலபதியின் திரு

21 ஆம் பக்கம் பார்க்க....



## புதிய ஆலோசகர் நியமிப்பு

(கொழும்பு)

காணாமல்போனவர்கள் தொடர்பான விசாரணைகளை நடத்தி வரும் ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு ஆலோசனை வழங்க மற்றுமொரு வெளிநாட்டு நிபுணர் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜப்பானை சேர்ந்த விசேட நிபுணரான மோதோ நயூச் புதிய ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த நியமனத்தை வழங்கியுள்ளார்.

21 ஆம் பக்கம் பார்க்க....

## முஸ்லிம் காங்கிரஸிலிருந்து மைத்திரிக்கு ஆதரவு?

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை ஆதரிக்க வேண்டும் என தீர்மானித்துள்ளனர்.

இது சம்பந்தமான இறுதி தீர்மானத்தை எடுக்கும் அதிகாரம் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரான அமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் வழங்கப்பட்டுள்ளதுடன் அவர் இன்று அல்லது நாளை தனது இறுதி முடிவை அறிவிக்க உள்ளதாக அந்த கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது குறித்து பல நாட்களாக கூடி கலந்துரையாடியதுடன, பெரும்பாலான உறுப்பினர்கள் மகிந்த ராஜபக்ஷவுக்கு பதிலாக மைத்திரிபால சிறிசேனவை ஆதரிக்க வேண்டும் எனற நிலைப்பாட்டில் இருப்பதாகவும்

21 ஆம் பக்கம் பார்க்க....

## காணி அபகரிப்பு நடவடிக்கையை அரசியலூடாகவே தீர்க்க முடியும்

### மனித உரிமைக்குழு தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கில் இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற காணி அபகரிப்பு தொடர்பில் மனிதவுரிமை ஆணைக்குழு நடவடிக்கை எடுக்க முடியாதெனவும் அதனை அரசியல் ரீதியாகவே கையாள முடியுமெனவும் மனிதவுரிமை ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளரும் சிரேஷ்ட சட்ட விரிவுரையாளருமான என்.செல்வக்குமரன் தெரிவித்தார்.

மனிதவுரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய காரியாலயத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட சிவில் சமூக உறுப்பினர்களிற்கான மனிதவுரிமைகள் தொடர்பிலான பயிற்சி கிறீன் கிராஸ் ஹோட்டலில் நேற்றுக் காலை 9.30 மணிமுதல் பி.ப 4 மணிவரை நடைபெற்றது.

இப் பயிற்சி பட்டறை நிகழ்வில் கலந்து கொண்டவர்களினால், வடக்கு மாகாணத்தில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படுகின்ற காணி அபகரிப்புக்கள் தொடர்பில் மனிதவுரிமை ஆணைக்குழு நடவடிக்கை எடுக்க முடியாதா? என்ற கேள்வி முன்வைக்கப்பட்டது.

இக்கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கில் இடம் பெறுகின்ற காணி சுவீகரிப்பு பொதுத் தேவை என்ற நோக்கத்தினைக் காரணம் காட்டியே இடம்பெறுவதனாலும் அரசியலமைப்பில் இவ்வாறு தனிநபர் காணி

21 ஆம் பக்கம் பார்க்க....

## மாட மாளிகையிலிருந்து ஆட்சி செய்யப் போவதில்லை

### எதிரணி வேட்பாளர் உறுதி

(கொழும்பு)

மன்னர்களைப் போன்று மாட மாளிகையிலிருந்து எனது ஆட்சியைத் தொடரப் போவதில்லை. அலரி மாளிகைக்கோ காலடி எடுத்துவைக்கப் போவதுமில்லை.

மாறாக ஜனாதிபதி செயலகத்தினூடாகவே நாட்டு மக்களின் பணியைத் தொடர்வேன். இவ்வாறு பொது எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

மேலும் ஊழல் மோசடிகள் அற்ற

21 ஆம் பக்கம் பார்க்க....



SISIL WORLD
உங்கள் கண்களுக்கு விருந்தளிக்க 40% வரை மின்சார சேமிப்புடன் கூடிய
LED,3D LED
தொலைக்காட்சி பெட்டிகள்
இப்பொழுது எம்மிடமிருந்து!



- வட்டி இன்றிய கொடுப்பனவு
- விசேட விலைக் கழிவுகள்
- 3வருட நீடித்த உத்திரவாதம்
- பண்டமாற்று கொடுப்பனவு
- விசேட பரிசுப்பொருட்கள்

இல-106,கே.கே.எஸ் வீதி,யாழ்ப்பாணம் 021-2219291.
இல-125,கே.கே.எஸ் வீதி,சுன்னாகம் 021-2242335
இல-17/3,கண்டி வீதி,கிளிநொச்சி 021-2283755

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2 மணித்தியாலத்தில்
கணினி திருத்தம்
உங்கள் வீடுகளுக்கும் வந்து கணினிகள்
திருத்தி தருகிறோம் அழையுங்கள்
0779086737 Computer Repair
GUNAA BEST PC 52, Hospital Road Jaffna.

## கௌரவிப்பு விழாவும் நூல் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

சிவஸ்ரீ நா.ஞானசம்பந்தக் குருக்கள் தம்பதிகளின் கௌரவிப்பு விழாவும் நூல்களின் வெளியீட்டு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் சிவன் கோவில் மண்டபத்தில் வாழ்நாள் போராசிரியர் இலக்கிய காலாநிதி பிரம்ம ஸ்ரீ ப.கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் நடைபெறவுள்ளது. (எ-11)

தொடர்ந்தும் உங்கள் சேவையில்....
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
☛ கடிதங்கள் ☛ அன்பளிப்பு பொருட்கள் ☛ உடுபுடவைகள்
☛ CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392
WESTERN UNION MONEY TRANSFER
(சி/9331)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

# யாழ்ப்பாணத்தை படம் பிடிக்கும் கூகுள்

(கொழும்பு)

இலங்கையின் வீதி தோற்ற விபரங்களை சேகரிக்கும் நடவடிக்கையை கூகுள் நிறுவனம் ஆரம்பித்துள்ளது.

இந்த திட்டத்தின் மூலம் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய கமெராக்கள் பொருத்தப்பட்ட கார்கள் மூலம் இலங்கையின் வீதிகள் படம் பிடிக்கப்படும்.

இதன்மூலம், இலங்கையிலுள்ள எந்தவொரு இடத்தையும் கூகுள் இணையத்தளத்தில் தத்ரூபமாக பார்வையிடக் கூடிய வசதி கிடைக்கிறது.

கூகுள் ஸ்ட்ரீட் வியூ என்ற சேவையில் 63 நாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவற்றில் இலங்கையும் இணைந்துள்ளது.

இலங்கையில் யாழ்ப்பாணம், மாத்தறை, அருகம்பை முதலான பிரதேசங்களில் ஆரம்பிக்கப்படும் தரவு சேகரிப்பு திட்டம் விரைவில் முழு இலங்கையையும் உள்ளடக்கும் வகையில் விஸ்தரிக்கப்படவுள்ளதென கூகுள் நிறுவனத்தின் பணிப்பாளர்களில் ஒருவரான ஆன்லின் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் கருத்து வெளியிட்டார்.

இந்த வசதி மூலம் இலங்கையின் இயற்கை அழகை முழு உலகமும் பார்க்கக் கூடியதாக இருக்கும் என சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தின் பணிப்பாளர் நாயகம் டீ.எஸ்.ஜயவீர தெரிவித்தார்.

உள்ளூர் சுற்றுலா பயணிகளும் இணையத்தின் ஊடாக பல இடங்களை பார்க்கக் கூடியதாக இருக்கும் என அவர் கூறினார். (எ-11)

UNIVERSITY OF CAMBRIDGE CAMBRIDGE ENGLISH
GET A CERTIFICATE THAT IS ACCEPTED GLOBALLY

Cambridge - Prelimnary English Test (PET)
★ இது ஓர் Intermediate B1, Level பரீட்சையாகும். U.K இல் பல கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் இதனை ஏற்றுக்கொள்கின்றன.
★ நீங்கள் UK இல் திருமணம் செய்வீர்களானால் UK Border Agency அங்கீகரிக்கும் A1 பரீட்சைக்குப் பதிலாக PET Certificate இனை நீங்கள் எப்பொழுது வேண்டுமானாலும் ஒப்படைக்கமுடியும் PET=B1
★ நீங்கள் IELTS பரீட்சை எடுப்பதற்கு விரும்புவீர்களானல், போதிய ஆங்கில அறிவு உங்களிடம் இல்லையேல் முதலில் PET பாட நெறியைப் பின்பற்றிய பின் IELTS வகுப்பில் கற்க இலகுவாக இருக்கும்

Cambridge First Certificate in English (FCE)
FCE is an upper intermediate level Exam. It tests the ability to deal confidently with a range of written and spoken communication. FCE is the most widely taken of the general English exams, with over 250,000 candidates every year. This exam is at CEFR Level B2.
UK இல் பெரும்பாலான பல்கலைக்கழகங்கள் IELTS இற்குப் பதிலாக FCE யினை ஏற்றுக் கொள்கின்றனர்

Cambridge Certificate in Advanced English (CAE)
CAE is an advanced exam. CAE tests the ability to communicate with confidence in English for work or study purposes. This exam is at CEFR Level C1


Subjects: Reading, Writing, Listening, Speaking, Use of English

நீங்கள் ஆங்கிலத்தில் வாழ்நாள் முழு வதும் எழுத, வாசிக்க, பேச இந்த சர்வதேச தரம் வாய்ந்த பாட நெறி உதவும்.

புதிய வகுப்புக்கள் 15.12.2014 ஆரம்பம்
(சி/9330)

Course Schedule
Mon,Tuse,Wed,Thur | Saturday & Sunday
Duaration 10Week
Time 10.00 - 12.00 | 03.00 - 05.00
03.00 - 05.00 | Exam Date :- March & June

BRITISH COLLEGE OF ENGLISH
No. 192, NAVALAR ROAD, JAFFNA. (பெருமாள் கோயிலுக்குச் சமீபமாக)
Tel : 021 222 0384 , 077 880 3887

மனோதத்துவ வைத்தியம்
(General Psychotheraphy)
பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr.P.ஆறுமுகம்

T.P.: 0719315664 , 0777569205

மீண்டும் யாழில்
23.12.2014 முதல் 29.12.2014 வரை 6 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.
பதிவுக் கட்டணம் ரூபா: 300/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப்படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

நாதன் இன்
(பழைய கமால் லொஜ்) 392/A, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (சிவதர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்)
(பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்)
(C-9376)

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி சிற்றம்பலம் வள்ளியம்மை

கிளி/முருகானந்தா கல்லூரியின் பணியாளரான சி.கிருஷ்ணபிள்ளை அவர்களுடைய தாயார் திருமதி சிற்றம்பலம் வள்ளியம்மை 13.12.2014 ஆம் திகதி (நேற்று) இறைபதமடைந்துள்ளார்.

அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கல்லூரிச் சமூகம்
கிளி/முருகானந்தா கல்லூரி
(சி-9374)

## நீங்காத நினைவலைகள்

### அமரர் வயிரமுத்து தேவராசா



அன்பர் தேவாவுடன் இளமையில் பூநகரியில்
பழகிய நாட்களை நினைத்துப் பார்க்கின்றேன்
அளவளவான உறவினர்
ஆலோசனையில் நண்பனாய் மந்திரி
மூத்த மகன் முகுந்தன் பூநகரிக்கு
முதற் கலாநிதியாக உன் புகழ்பேச பஞ்ச பாண்டவர்
இளமையில் பசுமையான நினைவுகளான-நீ
லண்டனில் இன்று அடங்குகின்றாய்-எது நிலையானது
ஆரம்பமானால் முடிவுண்டு எதுவும் நிலையில்லை-இறப்பு
நிச்சயம் உணர்த்திச் செல்கின்றாய் அன்பரே!
ஆத்ம சாந்திக்காக வேண்டுகின்றோம் இறைவனை.

பலம் - [illegible]
முன்னாள் பிரதேச [illegible]
பூநகரி (0776960063)
(8751)

14.12.2014

புதிய மாணவர்களுக்கான அனுமதி - 2015
01 - 05 வயது வரையான பாலகர்களுக்கு

சிறுவர் பாடசாலை
தினப் பராமரித்தல் சேவை
Play, Learn, Creating, 5S & Grow...!
சேவை நேரம் : திங்கள் முதல் வெள்ளி
மு.ப 8.00 முதல் பி.ப 04.30 மணிவரை
முன்னோக்கு சிறுவர் பாடசாலை மற்றும் தினப்பராமரித்தல் சேவை
இல.40, வைமன் வீதி, நல்லூர்.
தொலைபேசி இல
021 320 2545
077 884 1375

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:

021 321 0815, 021 567 1532



## பசு விற்பனைக்கு

தைமாதம் முதற்கிழமையில் கன்று ஈனும் நிலையில் இருக்கும் ஜெசி பசு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-077 4206 382

(சி-8727)



## தேவை

கொழும்பை அண்மித்த பிரதேசங்களிலுள்ள கட்டட நிர்மாணத்துறைகளில் பல வெற்றிடம் மேசன்/பெயின்டர்/செடலின்பாஸ்/இலற்சீசன் (1200/=,1500/=) கையுதவியாளர் (1000/=, 1100/=, தினமும் கைசெலவு/ தங்குமிடமுண்டு.

(சி-9362) தொடர்பு:-077 788 9185


## மாற்றுவலுவுடையோர் தினம்

சிறப்புக் குழந்தைகள் பாதுகாப்பு நிதியத்தின் மாற்றுவலுவுள்ளோர் தினம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாலயத்தில் சிறப்புக் குழந்தைகள் பாதுகாப்பு நிதியத் தலைவர் பிரம்மஸ்ரீ இ.வாசுதேவன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் க.சிவராஜா கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)


விசேட

## மலிவு விற்பனை

எதிர்வரும் கிறிஸ்மஸ், புதுவருடத்தை முன்னிட்டு அனைத்துத் துணி வகைகளுக்கும், பாடசாலை சீருடை துணிகளுக்கும் விசேட விலைக்கழிவு வழங்கப்படுகின்றது. 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் திறக்கப்படும்

01.12.2014 - 31.12.2014

**லைடன்**

புடவை நிலையம்

410, ஆஸ்பத்திரி வீதி, (பஸ் நிலையம் முன்)

யாழ்ப்பாணம்.

(C-9312)



வாழ்க்கையில் **வெறுப்பா?**

பிரச்சினை எதுவானாலும், எம்முடன் தொலைபேசியில் அல்லது நேரில் பேசுங்கள். இரகசியங்களைப் பேணுவோம்.

காலை 9.00 – பி.ப 1.00

**கைகொடுக்கும் நண்பர்கள்**

104, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

021 222 8117, 0779008776

(C-9351)



## தொழில் வாய்ப்பு

கொழும்பை அண்மித்த பிரபல்யமான கம்பனிகளில் ஜேம்/ கோடியல்/பால்மா/சவர்க்காரம்/Jewellary/ Ice-cream/ யோகட்/ மற்றும் பல உற்பத்தி நிறுவனங்களில் நிரந்தர வேலைவாய்ப்பு ஆண், பெண் 17-55 வயது தமிழ், முஸ்லிம் விசேடம். சம்பளம் 18000/=, 32000/=, தொழில் அடிப்படையில் சிங்களம் தெரியாத, தெரிந்த நண்பர், குழுவினர், தம்பதியினர் ஒரே தொழிற்சாலைகளில் தமிழில் தொடர்பு கொள்ளவும்.

(சி-9359)

தொடர்புக்கு:-077 8430 179


# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்

கடந்த 2014.11.14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவி

## அமரர் திருமதி சிவஞானம் தங்கம்மா

(8244)



வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (14.12.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை.

இங்ஙனம்
குடும்பத்தினர்.

# இராசி பலன்

14.12.2014

(கார்த்திகை 28, ஞாயிற்றுக்கிழமை)

உதயம் காலை- 6.13 மணிக்கு

அட்டமி பின்னிரவு - 6.05 மணிவரை

பூரம் பிற்பகல் -2.09 மணிவரை

இராகுகாலம் 4.51-6.21மணிவரை

சுபநேரம் 9.21-10.51 மணிவரை

வளவன்

**மீனம்** தேக நலனில் ஏற்பட்ட பாதிப்புகள் அகலும், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், காரிய அனுகூலமுண்டு, சுவாரஸ்யமான நாள்.

**மேடம்** இல்லம் தேடி சுப தகவல்கள் வந்து சேரலாம், புதிய தொழில் தொடங்கும் சிந்தனை மேலோங்கும், வழிபாடு மகத்துவம் தரும், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படுவீர்கள்.

**இடபம்** தாய்வழி உறவினர்களால் அனுகூலமுண்டு, நண்பர்கள் சந்திப்பால் பெருமையடைவீர்கள், வழிபாடு காரிய வெற்றி தரும், சுபதகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பொதுப்பணிகளிலில் ஆர்வம் காட்டுவீர்கள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

**கும்பம்** சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.

**கடகம்** குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், எதிர்பார்த்த காரியங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, வார்த்தைகளில் நிதானம் தேவை.

**மகரம்** சிலர் பாராட்டுவது போல விமர்சிக்கலாம், வேலைகளில் சில தாமதங்கள் ஏற்படலாம், பயணத்தின் போது பொருட்களில் கவனம் தேவை, தேவையற்ற செலவுகள் கூடும்.

**சிம்மம்** சிந்தனை மிகுதியான நாள், விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், போசன சுகமுண்டு.

**தனுசு** குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் குறையும், தன்நம்பிக்கையோடு பணியாற்றி முன்னேற் றம் காண்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம் பெறலாம்.

**விருச்சிகம்** உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், சுப காரியப் பேச்சுகளில் முன்னேற்றம் காண்பீர்கள், ஆரோக்கியமான நாள்.

**துலாம்** எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவி செய்ய முன்வரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பொது வாழ்வில் மதிப்பும், மரியாதையும் உயரும்.

**கன்னி** சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள், தொழிலில் ஆர்வத்துடன் செயற்படுவீர்கள், பயணங்களால் மனச் சோர்வு ஏற்படலாம், சயனசுகக் குறைவான நாள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,021 567 1532


## வேலை ஆட்கள் தேவை

எமது ஸ்தாபனத்திற்கு கொழும்பில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு விற்பனையாளர் உடன்தேவை. மாத வேதனமாக ரூபா 21 000 /= வழங்கப்படும். இலவச தங்குமிடமும் வழங்கப்படும்.

எமது யாழ்ப்பாணக் கிளைக்கும் விற்பனையாளர் தேவை. வேதனமாக ரூபா 12000/= வழங்கப்படும்.

வயது 18 தொடக்கம் 25 வரை

15.12.2014 திங்கட்கிழமையிலிருந்து தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:- கிங்ஸ் எலெற்ரோனிக்ஸ், இல. 11-A. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். TP: 021 222 3857

(8746)


## ஆறுமுக நாவலர் குருபூசை நிகழ்வு

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை நிகழ்வு காரைநகர் கிழவன் காடு கலாமன்றத் தலைவர் தலைமையில் இன்று முற்பகல் 9 மணிக்கு நடைபெற வுள்ளது.

இந்நிகழ் வில் சிறப்புச்சொற்பொழிவு, சிறப்புக் கவிதை மற்றும்போட்டிகளில்வெற்றியீட்டிய மாணவர் களதுநிகழ்ச்சிகள்என்பன இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

## யெகோவாவின் வட்டார மாநாடு

சமாதானமாக இருக்க தொடர்ந்து முயற்சி செய்யுங்கள் என்ற தொனிப்பொருளுடைய ஒருநாள் வட்டார மாநாடு கிளிநொச்சி கூட்டுறவு கலாசார மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.40 இற்கு ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து கடவுள் தரும் சமாதானம் நம் சிந்தனையை விட உயர்வானது எப்படி? மற்றும் சமாதானத்தை விரும்பும் மக்களையே யெகோவா ஏற்றுக்கொள்கிறார் என்ற தொனிப் பொருளில் முக்கிய உரைகளும் இடம்பெறவுள்ளன. (இ)

## மரண அறிவித்தல்

### சின்னப்பு அல்பிறட்



சென்.செபஸ்ரியார் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு அல்பிறட் 11.12. 2014 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - பிரகாசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், அமரர் றோஸ் குயினின் அன்புக் கணவரும், அமரர் சிமியோன், ஞானஉதயம், திருச்செல்வம் (ஜேர்மனி), எட்விசம்மா (ஜேர்மனி), சிறிகரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுஜாதா, அமரர் றுஸ்கின், சல்பிகா (இந்தியா), சாள்ஸ், டெனிசன், நிதர்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மதீஸ்வரன், ரவிக்குமார் (இந்தியா) ஆகியோரின் அன்பு மாமனும், சுதர்சிகா, ஜெஸ்ரின், றீகன், சுலக்ஷனா, மதுஸ்ரன், மெலீனா, சரோன் (இந்தியா) ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (14.12.2014) ஞாயிற்றுக்கிழமை கோண்டாவில் புனித செபஸ்ரியார் ஆலயத்தில் இடம்பெற்று பூதவுடல் கொட்டைக்காடு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :
0774832514, 0776590751 (சி-9373)

தகவல் :
- குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி

### சின்னப்பு அல்பிறட்



வலம்புரிக் குடும்பத்தைச்
சேர்ந்த அ. சாள்ஸ் அவர்களின்
அன்புத் தந்தை
**திரு.சின்னப்பு அல்பிறட்**
அவர்களின் இறப்பால்
துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய ஆண்டவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!

**வலம்புரிக் குடும்பம்**


## Astron Limited இன் அதிர்ஷ்டசாலிகள்



2014 ஜனவரி மாதம் நடைபெற்ற சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் Astron நிறுவனத்தினரால் Protinex கொள்வனவாளர்களிடையே நடத்தப்பட்ட சீட்டிழுப்பில் அதிர்ஷ்டசாலிகளாகத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான பரிசு வழங்கும் வைபவம் கடந்த 19.11.2014 Ratnam பார்மஸியில் நடைபெற்றது.

பரிசு பெற்றவர்கள்:
1 ஆவது பரிசு- Mobile Phone (SAMSUNG S3)-J. தம்பையா- திருநெல்வேலி
2 ஆவது பரிசு-Televison-S. சிவசுப்பிரமணியம்- கைதடி
3 ஆவது பரிசு- Blue Ray DVD Player -செல்வி S. காயத்திரி- அளவெட்டி

அதிர்ஷ்டசாலிகளுடன் எமது வியாபார மேம்பாட்டுக்குழு-Ratnam Pharmacy Proprietor V. சிவசுதன், City Medicals Manager S. ரஞ்சித் மற்றும் Astron நிறுவன Brand Manager றுவந்த நாணயக்கார, Field Development Co.Ordinator வி.குணாளன் Nutrition Advisor S. சறோன் சாம், Marketing Representative இ.பிரசாத்

Astron
Astron Limited 688, Galle Road, Ratmalana.
Tel:- 011 263 6741, 5566741
Fax:- 011 263 6173
Email: astron@astron.lk, web: www.astron.lk

## புரோட்டினெக்ஸ்®

"நாள்தோறும் இழக்கும் சக்தியை மீட்டுத்தருகின்றது"

100% தாவரப்புரதம்
கொலஸ்ரோல் அற்றது
விட்டமின்கள் கனியுப்புக்கள் அடங்கியது

புரோட்டினெக்ஸ் ஆனது கொலஸ்ரோல் அற்ற 100% தாவரப்புரதம் செறிந்த விட்டமின்கள் கனியுப்புக்கள் அடங்கிய போசனை உணவாகும். இதில் உள்ள தாவரப்புரதம் முற்சமிபாடு அடைந்துள்ளதனால் இலகுவில் அகத்துறிஞ்சப்படக்கூடியது.




Astron
Astron Limited, 688, Galle Road, Ratmalana.
Tel : 011 2636741, 5566741 Fax : 011 2636173
E-mail : astron@astron.lk Web : www.astron.lk

(சி-9360)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நேஷன் லங்கா பினான்ஸ் பி.எல்.சி

**பலம், ஸ்திரம், கீர்த்தி, நாமம்**

அதிகாரம் பெற்ற பொதுக்கம்பனி 2011 ஆம் ஆண்டு நிதி.வணிகச் சட்டத்தின் 42 ஆவது பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

## உங்கள் வியாபார விருத்திக்கு நேஷன் லங்காவின் புதிய அறிமுகம்

## Nation Biz Cash வியாபாரக் கடன்

- அனைத்து பதிவு செய்யப்பட்ட வியாபார மற்றும் தொழில் நிறுவனங்களுக்குமான கடன் வசதி
- இலகுவான மீள் செலுத்தும் தவணை முறை
- விரைவான சேவை (4 நாட்கள்)
- குறைந்தளவு ஆவணங்கள்

தொடர்புகளுக்கு:-

**த.மகிந்தன் 0776751134,**

**ஹீ.முகுந்தன் 0779952024,**

**வீ.சரத்குமார் 0771987736**

**நேஷன் லங்கா பினான்ஸ் பி.எல்.சி**
**இல-181, யாழ் வீதி,**
**நெல்லியடி.**

(8749) **தொ.இல:- 021 4923508**

### மேலும் எமது சேவைகள்

**விரைவான லீசிங்**

- ஒரு மணித்தியாலயத்தில் லீசிங் வசதி
- மிகக் குறைந்த ஆரம்பக் கட்டணம்
- குறைந்தளவு ஆவவாடிக்கையாளர் தேவைக்கேற்ப மாற்றி அமைக்கும் மாதாந்த தவணைக் கட்டண முறை

**வாடகைக் கொள்வனவு (Hire Purchase)**

- பதிவு செய்யப்பட்ட (2nd Hand) மோட்டார் சைக்கிளிற்கான லீசிங்
- பதிவு செய்யப்பட்ட வாகனங்களிற்கான லீசிங் வசதி
- இலகுவான தவணைக் கட்டண முறை

**ரன் லங்கா அடகு சேவை**

- அதி கூடிய முற்பணத் தொகை
- முன்னறிவித்தலின்றி நகையினை மீட்டுக் கொள்ளும் வசதி
- பகுதியாக நகைகளை மீட்டுக் கொள்ளும் வசதி

**உதும் சிறுவர் சேமிப்பு**

**நிலையான வைப்பு**

**கடன் வசதிகள்**

**நுண் நிதிக் கடன் வசதிகள்**

## நிரந்தர தொழில் வாய்ப்புக்கள்

19000/=, 25000/=,35000/=, (17-50 ஆண்-பெண்) இருபாலாருக்கும் உணவு+தங்குமிடம் குறைந்த விலைகளுடன் கொழும்பை அண்மித்த பிரதான தொழிற்சாலைகளான ஜேம்/ பால்மா/ யோகட்/ PVC/ கிளவுஸ்/ பெயின்ட்/ கண்ணாடி/ கீல்ஸ்/ சொக்லேட்... (மற்றும் பல) போன்றவற்றுக்கு உற்பத்தி, லேபல், பொதியிடல், தரம்பிரித்தல், Delivery boy மற்றும் தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (JSO/LSO/SSO/ OIC) பல வெற்றிடம். வருகை தரும் நாளிலே வேலை வாயப்பு (நண்பர்/ குழு/ தம்பதியினர்) மேலதிக விபரங்களுக்கு (சி-9361)

**தொடர்பு கொழும்பு:- 077 7889 185**

## கூட்டம்

யாழ்ப்பாணம், வலி.வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வுச் சங்கத்தின் நிர்வாக சபைக்கூட்டம் இன்று முற்பகல் 10 மணிக்கு மல்லாகம் பிரதேச சபைக் கட்டடத்தில் நடைபெறவுள்ளது.இ

## விசேட சலுகை

**வலம்புரியின் 15 ஆவது ஆண்டு நிறைவினையொட்டி எமது வாடிக்கையாளர்கள் 01.11.2014 முதல் 31.12.2014 வரை மாபெரும் விசேட விலைக் கழிவுடன் தங்களது விளம்பரங்களை எமது பத்திரிகையில் பிரசுரிக்க முடியும் என்பதனை அறியத் தருகின்றோம்.**

*முழுப்பக்கம், அரைப்பக்கங்களிற்கு மாத்திரமே இவ் விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்.*

**மேலதிக விபரங்களுக்கு இன்றே வலம்புரி காரியாலயத்தை நாடுங்கள்...**

**தொடர்புகளுக்கு:- 021 2217 603**
**021 5671 532**

Valampuriijaffna@gmail.com

## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 25 1/4<br>உயரம்: 154cm<br>தகைமை/தொழில்: BSC/ அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>தொ.இ: B/2161 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 81 1/4 செவ் 7 இல்<br>தகைமை/தொழில்: O/L/ சொந்த தொழில்<br>தொ.இ: G/3252 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 19 1/4<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BSC/ பொறியியலாளர் (சிங்கப்பூர்)<br>தொ.இ: B/2165 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 39<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/3253 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 35 சூரிசெவ் 4 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: A/L (பிரான்ஸ் NOT PR)<br>தொ.இ: B/2166 | பிறப்பு: 1986 இந்<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 37 1/2 செவ் 4 இல்<br>உயரம்: 163cm<br>தகைமை/தொழில்: BSC/ பொறியியளாளர்<br>தொ.இ: G/3254 |
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 24 1/2<br>தகைமை/தொழில்: O/L/ தனியார் தொழில்<br>தொ.இ: B/2167 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 12 1/2<br>உயரம்: 5'3"தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/3256 |

## கல்யாண மாலை

**(சர்வதேச திருமண சேவை)**
**இல. 144, பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்**

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

**தொடர்பு:- 021 720 1005**

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வெள்ளி விழாவும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.உரும்பிராய் வடக்கு இலக்குமி சமூக அபிவிருத்தி சேமிப்பு கழகத்தின் வெள்ளி விழாவும் நிர்வாகத் தெரிவும் நேற்று சனிக் கிழமை பிற்பகல் 2 மணியளவில் கழகத்தின் உபதலைவி வி.மகேஸ்வரி தலைமையில் சரஸ்வதி கலையரங்கில் இடம்பெற்றது.

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம் படுத்தும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட இக் கழகம் ஆரம்பத்தில் விவசாயிகளுக்கு விதை தானியம், உரம் மற்றும் விவசாய உபகர ணங்கள் வழங்கப்பட்டதுடன் சேமிப்பு பழக் கத்தையும் ஊக்குவித்தது.

இன்று 25 வருடங்களை எட்டியுள்ள நிலை யில் பல கடன் திட்டங்களையும் வழங்கி வருகின்றது. அத்துடன் 200 இற்கு மேற்பட்ட அங்கத்தவர்களையும் இலட்சக்கணக்கில் பணத்தையும் சேமித்ததுடன் அங்கத்தவர் களின் நலனைக் கருத்திற்கொண்டு பல கடன் திட்டங்களையும் வழங்கி வருவதுடன் பரீட்சை களில் சித்தியடைந்த மாணவர்களை கௌர வித்து-பரிசில்கள் வழங்குதல், அங்கத்தவர் களுடைய குடும்பத்தில் யாராவது இறந்தால் அவர்களின் குடும்பத்திற்கு உதவிகள் வழங் குதல் போன்ற பல நலத்திட்டங்களையும் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ





# பேராசிரியர் கைலாசபதி நினைவுதினம்



(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் கைலாசபதி நினைவு தினமும் கலை நிகழ்வுகளும் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப.3.30 மணி க்கு கொக்குவிலில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவை யின் கவிஞர் முருகையன் கேட் போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பாரதி கண்ட தொழி ல்நுட்பம் என்ற தலைப்பில் மட்ட க்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி சிவ. இராஜேந்திரனின் சிறப்புரையும் கைலாசபதியின் நூல் களான அடியும் முடியும், கைலா சபதியின் முன்னுரைகள் ஆகிய வற்றின் நயவுரைகளை ஸ்ரீலேக்கா பேரின்பகுமார், நி.ரஞ்சித் கண்ணா ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். அத னைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சி களும் இடம்பெறும். (இ




# யாழ்ப்பாண பல்கலைக்கழக திட்டமிடல் செயற்பாடுகளுக்காக 8மில்.ஒதுக்கீடு

(யாழப்பாணம்)

யாழ்ப்பாண பல்க லைக்க ழத தின் வளாகங்களை நகரமயமாக் கல் தொடர்பான திட்டமிடல் செயற் பாடுகளுக்காக 8 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக சமுதாய, பிராந்திய திட்டமிடல் கற்கை நெறியின் இளம் திட்டமி டலாளர் சங்கத்தினரால் உலக நகரத்திட்டமிடல் தினத்தை முன் னிட்டு, யாழ். பல்கலைக்கழத்தின் கண்காட்சி நிகழ்வு நேற்று முன்தி னம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ் வாறு தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண பல்கலைக்கழக கழகம், ராமநாதன் வளாகம், சித்தமெடிசின் வளாகம், கிளி நொச்சி வளாகம், மற்றும் வவு னியா வளாகங்களை நகரமயமாக கும் திட்டத்திற்காக இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த பல்கலைக்கழகம் உங்க ளுடையது என்ற எண்ணம் உங களிடம் வரவேண்டும். அது எதிர் கால சந்ததிக்காக நீங்கள் விட்டுச் செல்லும் சொத்து அவற்றை சிறந்த முறையில் பேணுவதுடன் சிறந்த திட்டமிடல் மூலம் அதனை பேண வேண்டும். இதற்கு சிறந்த திட்ட மிடல் உதவும். அப்போது பல்க லைக்கழகம் சிறந்த உதவிகளை வழங்கும்.

மாணவர்கள்கல்விகற்பதோடு மட் டுமல்லாது எதிர்காலத்தை எவ் வாறு கொண்டு செல்லவேண்டும்என் பதை திட்டமிட வேண்டும். மாண வர்களின் எதிர்காலம் அவர் களின் திட்டமிடலில்தான் உள்ளது.(இ-5)

# வீதியிலுள்ள கழிவுகளை அகற்றுமாறு கோரிக்கை

யாழ். இந்துக் கல்லூரிக்கருகில் கே.கே.எஸ் வீதியில் குப்பைகள் கொட்டப்படுவதால் சுகாதாரத்திற்கு பாதகமான நிலை ஏற்பட்டுள்ளது.

நீண்ட நாட்களாக இக் குப்பை கள் அகற்றப்படாத காரணத்தினால் நாளாந்தம் பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகள் எழுந்துள்ளதோடு பிரதான வீதியில் குப்பை மேடொ ன்றும் உருவாகி வருகின்றது.

இக் குப்பைகள் அகற்றப்படா மையால் வீதியால் பயணிப்போர் இவ்விடத்தில் தொடர்ந்தும் குப்பை களை கொட்டி வருகின்றனர்.


இதற்கருகில் பாடசாலை மற் றும் வர்த்தக நிலையங்கள், வீடுகள், தனியார் கல்வி நிலைய ங்கள் என்பன காணப்படுவதால் பல்வேறு சுகாதர சிக்கல்கள் ஏற்படு மென அச்சம் வெளியிடப்பட்டு ள்ளது.

யாழ். மாநகரசபையின் எல்லை க்குட்பட்ட பகுதியிலேயே இது அமை ந்துள்ளது.

பழைய பால், விலங்கு கழிவு கள், குப்பை கூழங்கள், கொட் டப்படுவதால் துர்நாற்றம் வீச ஆரம் பித்துள்ளது.

வாழைக்குற்றிகள், போத்த ல்கள் என்பனவும் தொடர்ந்து போடப்படுவதால் நுளம்பு பெருக க்கூடிய சூழலும் ஏற்பட்டுள்ளது.

நாளாந்தம் இவ். வீதி வழியாக யாழ். மாநகரசபையின் கழிவ கற்றும் வாகனம் வந்து போகின்ற போதும் அதிகாரிகளின் அசமந்தப் போக்கு காரணமாக ஆரோக்கியத் திற்கு பாதக விளைவுகள் ஏற்ப டடுள்ளதாக பிரதேசத்தவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (இ-23)



கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நேற்று முன்தினம் காலை நாவலர் குருபூசை இடம் பெற்றது. கலாசாலையில் உள்ள யோகலிங்கேசுவரர் கோவிலில் இடம்பெற்ற பூசைகளைத் தொடர்ந்து கலாசாலை முகப்பில் உள்ள நாவலர் திருவுருவச் சிலைக்கு பட்டாடை தரித்தல், மாலை அணிவித்தல் ஆகிய நிகழ்வுகள் இடம்பெற்றன.

## திருவாசக விழாவினை முன்னிட்டு பண்ணிசைப் போட்டி இடம்பெறும்

சந்நிதியான் ஆச்சிரமத்தினால் நடத்தப்படும் திருவாசக விழாவினை முன்னிட்டு பண்ணிசைப் போட்டி மற்றும் சமய பாடம் தொடர்பான பொது அறிவு போட்டி எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம் பெறவுள்ளது.

இந்தப் போட்டியில் பங்கு பெற விரும்பும் மாணவர்கள் தாங்கள் கல்வி கற்கும் தரம் 2014 இல் பாட சாலை, பிறந்த திகதி என்பவற்றைக் குறிப்பிட்டு எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் திருவாசகப் போட்டி ஏற்பாட்டுக்குழு சந்நிதியான் ஆச் சிரமம், செல்வச்சந்நிதி, தொண் டைமானாறு என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு ஏற்பாட்டா ளர்கள் கேட்டுள்ளனர்.

மேலும் இந்தப்போட்டியில் வெற்றி பெறும் மாணவர்களுக்கான பரி சில்கள் எதிர்வரும் 02.01.2015 ஆம் திகதி வழங்கப்படும். (இ

## குரலிசைப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

கனடாவிலிருந்து வருகை தரும் சங்கீத மிருதங்க கலாவித்தகர் வர் ணராமேஸ்வரனால் நடத்தப்படும் குரலிசைப்பயிற்சி இன்று காலை 10 மணிக்கு யாழ். செட்டித் தெரு விலு ள்ள சின்மய ஞானவேல் ஆசிர மத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இசை ஆசிரியர் கள், மாணவர்கள் மற்றும் இசை ஆர்வலர்கள் கலந்து கொள்ள முடி யும் என ஏற்பாட்டாளர்கள் அறிவி த்துள்ளனர். (இ

## கரவெட்டி பிரதேச செயலகத்தில்

# 116 பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள்

ஒரு கிராமத்துக்கு ஒரு மில்லி யன் என்ற திட்டத்தின் கீழ் கரவெட்டி பிரதேச செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் 116 பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்ப ட்டன.

கரவெட்டி பிரதேச செயலர் எஸ். சிவசிறி தலைமையில் நேற்று முன் தினம் நடைபெற்ற இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற் றும் சிறு தொழில் முயற்சி அபி விருத்தி அமைச்சர் கே.என் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடமராட்சி ஒருங்கிணைப்பு குழுத்தலைவரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினருமான சில்வேஸ்திரி அலன் ரினும் கலந்து கொண்டனர்.

அங்கு உரை நிகழ்த்திய அமை ச்சர் வெறும் உணர்ச்சிப் பேச்சுக்கள் மூலம் எதையும் பெற்றுத்தரப் போவ தில்லை. அரசுடனான நல்லு றவைப் பேணினாலேயே அபிவிருத்தியும் வாழ்வாதார மேம்பாட்டுக்கான செய ற்றிட்டங்களையும் முன்னெடுக்க முடியும் என அவர் மேலும் தெரி வித்தார். (இ

# பிரிவுபசாரமும் கலை விழாவும்

(பருத்தித்துறை)

வடமராட்சி தெற்கு மேற்கு பிர தேசசபை நிர்வாகப்பிரிவுக்குள் உள்ள வதிரி முன்பள்ளி பரிசளிப்பு விழா வும் பிரிவுபசார விழாவும் கலை நிகழ்வுகளும் நெல்லியடி மெதடிஸ் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை யில் இன்று ஞாயிற்றுக்கிழமை முற் பகல் 9 மணிக்கு விழாத் தலைவர் க.முகுந்தராஜ் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இவ்விழாவிற்கு வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை தவிசாளர் பொ.வியா கேசு பிரதமவிருந்தினராகவும் கௌரவ விருந்தினர்களாக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை செயலாளர் க.கனகதுரை, வடமராட்சி ஆரம்ப பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரிவு உதவி கல்விப்பணிப்பாளர் சி.தில் லைநாதன், நெல்லியடி மெ.மி.த.க பாடசாலை அதிபர் த.தேவராஜா மற்றும் பிரதேசசபையின் உறுப் பினர்கள் உட்பட சிறப்பு விருந்தினர் கள் பலரும் கலந்து கொண்டு சிறப் பிக்கவுள்ளனர். இவ்விழாவின் போது முன்பள்ளி உதவி ஆசிரியர் செல்வி. அ.அன்பரசி கௌரவிக்கப்படவுள் ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிங்கா
## திரை விமர்சனம்



சோலையூர் என்ற கிராமத்தில் மிகப்பெரிய பஞ்சம் வருகிறது. அந்த பஞ்சத்தை போக்கவும், விவசாயத்தினை செழிக்கவும் அந்த ஊரில் ஒரு அணை கட்ட வேண்டும் என கலெக்டர் ரஜினி முடிவு செய்கிறார். ஆனால் ஆங்கிலேய அரசு அதற்கு அனுமதி கொடுக்கவில்லை. அதனால் பதவியை இராஜினாமா செய்துவிட்டு கலெக்டர் ரஜினி,

எஞ்சினியர் ரஜினியாக மாறி தானே சொந்த செலவில் அணை கட்டுகிறார் .அணை கட்டுவதை எப்படியாவது நிறுத்த வேண்டும் என்று முடிவு செய்த ஆங்கிலேய அரசு உள்ளூர் பிரமுகர் ஆர்.சுந்தர்ராஜனை நயவஞ்சகமாக பயன்படுத்துகிறது. அணை கட்டினால் ஊரில் உள்ள நிலம் முழுவதும் மூழ்கிவிடும் என்று சுந்தர்ராஜன் வதந்தியை பரப்புகிறார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த மக்களுக்கு ரஜினி தனது சொந்த நிலத்தை தருவதாக உறுதி கூறுகிறார். ஒரு வழியாக அணை கட்டி முடித்து திறக்கும் தறுவாயில் அணையை திறந்து வைக்க வேண்டுமென்றால் அதற்கு பதிலாக ரஜினியிடம் உள்ள சொத்து முழுவதையும் தரவேண்டும் என்று ஆங்கிலேய அதிகாரி கேட்கிறார். ரஜினியும் சொத்து முழுவதையும் தருகிறார். தங்களுக்கு கொடுத்த நிலங்களையும் சேர்த்து ரஜினி ஆங்கிலேய அதிகாரிக்கு கொடுத்துவிட்டதாக மீண்டும் ஒரு வதந்தி பரவ, கிராம மக்கள் ரஜினி மீது வெறுப்படைந்து ரஜினியை ஊரில் இருந்தே விரட்டி விடுகின்றனர். அவர் கட்டிய கோவிலையும் மூடி விடுகின்றனர். இந்நிலையில் அணை உறுதியாக இருக்கின்றதா? என்று பரிசோதிக்க ஒரு குழுவை அனுப்புகிறது ஆங்கிலேய அரசு.

குழுவை சோதனை செய்யும் தலைமை எஞ்சினியரை மர்ம கும்பல் ஒன்று கொலை செய்துவிடுகிறது. இறப்பதற்கு முன் அந்த எஞ்சினியர் கோவிலை திறந்தால்தான் இந்த ஊரை அழிவில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்று ஊர்பெரியவர் விஜயகுமாரிடம் கூறிவிட்டு இறந்துவிடுகிறார். கோவிலை திறப்பதற்காக ரஜினியின் வாரிசை ஊர் மக்கள் தேடுகிறார்கள்.

சென்னையில் சந்தானத்துடன் சிறுசிறு திருட்டுகள் செய்து வரும் ரஜினியை தேடி கண்டுபிடித்து ஊருக்கு அழைத்து செல்கிறார் அனுஷ்கா. அங்கு தன்னுடைய தாத்தா ரஜினியின் கதையை விஜய்குமார் மூலம் கேட்டு அணையை மீண்டும் திறக்க ரஜினி எடுக்கும் முயற்சிகள்தான் மீதிக்கதை.

சுப்பர் ஸ்டார் ரஜினிக்கு இரு வேடங்கள். நீண்ட இடைவெளிக்கு பின்னர் ரஜினிய்யை பார்த்தாலும், அதே விறுவிறுப்பு, அதே ஸ்டைல், அதே சுறுசுறுப்பு. சிவாஜி, எந்திரன் போலவே நடிப்பில் அசத்துகிறார். ஆங்காங்கே வரும் பஞ்ச் டயலொக்குகளுக்கு தியேட்டரில் விசில் பறக்கிறது.

அனுஷ்கா, சோனக்ஷி சின்ஹா இருவருமே வழக்கமான தமிழ் பட கதாநாயகிகள்தான். பாடல்களுக்கு மட்டும் உதவுகிறார்கள், இருவரில் அனுஷ்கா நடிப்பு ஓகே. சந்தானம், மற்றும் கருணாகரன் கூட்டணி காமெடியில் பின்னி பெடல் எடுக்கிறது. சந்தானத்திடம் இருந்து வெளிவரும் ஒவ்வொரு வசனங்களும் காமெடியின் உச்ச கட்டம். குழப்பமில்லாத மிகத்தெளிவான திரைக்கதை. ஆங்காங்கே திடீர் திருப்பங்கள் என அசத்தியுள்ளார் கே.எஸ்.ரவிகுமார். ஏ.ஆர்.ரஹ்மானின் பின்னணி இசைக்கு இன்னொரு ஒஸ்கார் கொடுக்கலாம். பாடல்களும், படமாக்கப்பட்ட விதமும் முந்தைய ரஜினி படங்களை ஞாபகப்படுத்துகிறது.

மொத்தத்தில் சுப்பர் ஸ்டாரின் லிங்கா, சுப்பர்.





## லிங்கா பார்த்த தனுஷ் மற்றும் அனிருத்!



கே.எஸ்.ரவிக்குமார் இயக்கத்தில் ரஜினி, சோனாக்ஷி சின்ஹா, அனுஷ்கா நடித்து வெளியான படம் 'லிங்கா'. படத்தை பார்த்த அனைவரும் சமூக வலைகளில் தங்களது கருத்துக்களை பகிர்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் தனுஷ்ும் அனிருத்தும் படத்தை பார்த்துவிட்டு அந்த மகிழ்ச்சியை டுவிட்டரில் தெரிவித்துள்ளனர்.

'சுப்பர் ஸ்டார் படத்தை ரசிகர்களுடன் முதல் நாள் முதல் ஷோ பார்ப்பது போல் எதுவும் இருக்காது' என டுவிட் செய்துள்ளனர். மேலும் ரஜினியின் 'லிங்கா' படம் போட்ட டி-ஷர்ட் சகிதம் குறும்புடன் கூடிய ஒரு செல்ஃபியை டுவிட்டர் பக்கத்தில் பகிர்ந்துள்ளனர்.

## இன்று ஐ பட ரசிகர்களுக்கு விருந்து

தமிழ் சினிமாவில் மிகவும் எதிர்ப்பார்ப்பில் இருந்து வரும் படம் ஐ. விக்ரம், எமி ஜாக்சன் இணைந்து நடித்திருக்கும் இப்படத்தை பிரம்மாண்ட இயக்குனர் ஷங்கர் அவர்கள் இயக்கியுள்ளார்.

சமீ பத்தில் இப்படத்தின் டீஸர் வெளியாகி இதுவரை 9 மில்லியன் ரசிகர்கள் யூடியூபில் பார்த்துள்ளனர். டீஸரிலேயே சாதனை படைத்த ஐ படத்தின் டிரைலர் இன்று வெளியாக உள்ளதாக படத்தின் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதோடு டிரைலரின் நேரம் 2 நிமிடம் என்று கூறியுள்ளனர்.



## ரஜினி ஒரு சிறந்த நடிகர்

போன மாதம் நடிகர் கமல்ஹாசன் தன்னுடைய 60 - வது பிறந்த நாளைக் கொண்டாடினர்ர். அது சமயம் நண்பர் ஒருவர் தன்னுடைய முகநூல் பதிவில், தனக்கு பிடித்த கமல் படங்கள் என்று சில படங்களைப் பட்டியலிட்டிருந்தார். அதில் மகாநதி, குணா" போன்ற படங்கள் இடம் பெற்றிருந்தாலும் அவள் அப்படித்தான், இளமை ஊஞ்சலாடுகிறது" போன்ற படங்களும் இடம் பெற்றிருந்தன. பார்க்கப் போனால் ஆரம்ப காலத்தில் ரஜினியும் கமலும் இணைந்து நடித்த பல படங்களில் கமலின் நடிப்பு அறிவுஜீவித்தனமாக இருந்தாலும் (அது அவரின் கதாபாத்திரமாக இருப்பினும்) ரஜினியின் நடிப்பு மிக இயல்பாக இருக்கும். உதாரணத்துக்கு பல படங்கள். "அவள் அப்படித்தான்" படத்தில் கமல் ஹீரோ. ரஜினி ஹீரோ இல்லை. ஆனால் கைதட்டல் என்னவோ ரஜினியின் வெரி கே வல் ஆக்டிங் மற்றும் டயலாக் மாடுலேஷனுக்குத்தான். இளமை ஊஞ்சலாடுகிறது படத்தில் ரஜினிக்கு பாடலே இல்லை. (பெரும்பாலான கமல், ரஜினி இணைந்த படங்களில் ரஜினிக்கு பாடல் இருக்காது) ஆனாலும் மிக கண்ணியமான கதாபாத்திரத்தில் சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தியிருப்பார். "அவர்கள்" படத்தில் கமல் ஹீரோ. ஆனால் ஹீரோயின் சுஜாதாவின் கணவராக வரும் ரஜினியின் சாடிஸ்ட் நடிப்பு பிரமாதமாக இருக்கும். கிட்டத்தட்ட அந்த கேரக்டரின் மீது நமக்கு கடுமையான வெறுப்பு வரும்படி கதாபாத்திரமாக வாழ்ந்திருப்பார். மூன்று முடிச்சு படத்திலோ வேறு களம். கிட்டத்தட்ட வில்லன். தான் அடையநினைத்த ஸ்ரீதேவி, தன் அப்பாவின் மனைவியாக அதாவது ரஜினியின் சித்தியாக வந்து அவரை மகனே என்று அழைக்கும்போதெல்லாம் ரஜினி அடையும் எரிச்சல், நிச்சயம் கைதட்டலுக்கு உரிய ரசிக்கக்கூடிய நடிப்பு.

ஆறிலிருந்து அறுபதுவரை, ஸ்ரீராகவேந்திரா", "எங்கேயோ கேட்ட குரல் போன்ற படங்களில் ஆர்ப்பாட்டமில்லாத அமைதியான ரஜினியின் நடிப்பு "முரட்டுக்காளை" படத்துக்குப் பின் மாறியது. கமர்ஷியல் ஹீரோவாய் மாறி ரசிகர்களின் முரட்டுத்தனமான அன்புக்கு கட்டுப்பட்ட ரஜினி, அதன் பின் தன் நடிப்பு குறித்து ரிஸ்க் எடுக்க விரும்பவில்லை.

மிக நீண்ட இடைவெளிக்குப் பிறகு மணிரத்னத்தின் தளபதி படத்தில் நடித்தார். அந்தப் படம் வெளியாவதற்கு முன்பு ரஜினியின் பேட்டி ஓர் வார இதழில் வெளியானது. அப்போது ரஜினியை நோக்கி கேட்கப்பட்ட கேள்வி, மணிரத்னம் படத்தில் நடிப்பது குறித்து உங்களுக்கு பயமில்லையா ? அப்போது ரஜினி நடித்துக்கொண்டிருந்த மசாலா படங்கள் இந்தக் கேள்வியைக் கேட்க வைத்திருக்கலாம். அதற்கு ரஜினி சொன்ன பதிலில் இருக்கிறது சுவாரஸ்யம். 2 1/2 வயசு குழந்தையையே நடிக்க வெச்சவர் அவர். என்னை நடிக்க வைக்க மாட்டாரா? தளபதிக்கு முன் வெளியான மணிரத்னத்தின் படம் "அஞ்சலி".இன்னும் சொல்லப்போனால் நீண்ட நாட்களுக்குப் பிறகு ரஜினிக்கு அதிக க்ளோசப் ஷாட்டுகள் இருந்தது "தளபதியி"ல்தான்.

அவரும் பிரமாதமாக நடித்திருந்தார். ரஜினி நடித்த கடைசிப்படம் அதுவாகத்தானிருக்கும். அப்புறம் வந்தவை எல்லாம் ரஜினியின் பிம்பங்களுக்கு பாலபிஷேகம் செய்யும் படங்கள். "முள்ளும் மலரும்" படத்தில் பாசமிகு அண்ணனாய் வந்து "இஞ்ஜினீயர் சார்" என்ற காளியின் குரலை மறக்கமுடியாது. திருடனாகவும், பார்பராகவும் இரு வேடங்களில் இப்போது பார்க்கும்போதும் புதிதாய் ரசிக்கத் தோன்றும் "ஜானி" ரஜினியை நாம் இழந்துவிட்டோம்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**அடுத்தவாரம், சிறுவர் உளநலம் பற்றியும், அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் குறித்தசிறுமியின் நிலை என்பவை பற்றி சிரேஷ்ட உளவளத்துணையாளரும், அனுபவம் மிக்க எழுத்தாளருமான திருமதி. கோகிலா மகேந்திரன் அவர்கள் பதிலளிக்கின்றார்.**

## வெண்ணிலா

"நீண்ட நாட்களாகி விட்டது... நான் நிலாவுடன் பேசி, இன்றைக்கு எப்படியாவது நிலாவுடன் நான் கதைக்கவேணும், அண்டைக்கு கேக்கவும் மேடம், 'நேரமில்லை. போய் தூங்குங்கோ! செல்வி, என்று சொல்லி,



மறிச்சுப் போட்டா... இண்டைக்கு எப்படியாவது மேடத்தைக் கேட்டிட்டு போய் ஒருககா கதைக்க வேணும்". மனதுக்குள் நினைத்துக் கொண்டே படுத்தேன்.

"பெரிய மீசை வைத்து கரிபபச்சைக் கலரில சேட்டுப் போட்டு ஒரு ஆள் போலவும், பெரியபல், கொம்பு வைத்து நெருப்புக்கு நடுவில் நின்றாடி, என் கையைப் பிடித்து, இழுத்து, இழுத்து ஐயோ! அம்மா என்னை யாராவது காப்பாத்துங்கோ! அம்மா... "கட்டிலை விட்டு விழுந்தேன். ஓர் பயங்கரக்கனவு! பயம், படபடப்பு என்று உடல் நடுநடுங்க, வியர்வை வெள்ளத்தில் குளித்திருந்தேன்.

விடியற காலையில் ஓடிப் போய்,"மேடம், நிலா இனி எப்பவரும்? என்று கேட்டேன்."வாறமாதம் 15ஆம் திகதிதான் செல்வி இனி நிலா வரும்,

நீங்கள் அப்ப வந்து நிலாவோடை கதையுங்கோ" என்று மேடம் சொன்னா. "மறக்காமல் எனக்கு சொல்லுங்கோ! நான் நிறையக்கதைக்க வேணும்.

ஓமம்மா, நான் சொல்லுவன், நீங்கள் போய் இனறைய நற்சிந்தனையை கரும்பலகையில எழுதுங்கோ" சொல்லிக் கொண்டே சுமங்கலி மேடம் கம்பீரமாக பத்திரிகை படிக்கத் தொடங்கினா. கரும் பலகையில் எழுதத் தொடங்கினேன்.

"சுமங்கலி மேடம், என்னை வீட்டை போக விடுங்கோ". எழுதி முடிக்கும் போதே அழுகைஅழுகையாக வந்தது.

எப்போ பதினைந்தாம் திகதி வரும் என்று பாத்துக் கொண்டிருந்தேன். நிலா வந்தவுடன் என்னென்ன சொல்ல வேண்டும் என்று மனதுக்குள் ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தேன். முக்கியமா அந்தக் கனவைச் சொல்ல வேணும். "முன்னம் சொன்ன தெல்லாம் நிலாமறந்திருக்கக் கூடாது"என்றுமனதுக்குள் வேண்டிக் கொன்டேன். பதினைந்தாம் திகதியும் வந்தது..... நிலாவும் வந்து விட்டது.

• பிரகாசமாக, தன்னுடைய முழு ஒளியையும், தாரை வார்த்துக்கொண்டிருந்தது. வெண்ணிற ஒளிப்பந்தாய், தகதகவென மின்னிக் கொண்டிருந்தது. "வந்துவிட்டாயா? வெண்ணிலா!"என்றுமனம் துள்ளியது. ஓர் ஓரமாய் இருந்த மரக்குத்தியில் உட்கார்ந்தேன். யாரோஅருகில்நின்று என்னை பார்ப்பது போல இருந்தது.

சுத்தி வடிவா தேடிப் பார்த்தன்., ஒருத்தரும் இல்லை, இருந்தாலும் உள்ளுக்கு பயமாகத்தான் இருந்தது. நிமிர்ந்து வெண்ணிலாவைப் பார்த்தேன்.

ஒளிக்கீற்றுக்கள் என் முகத்தை தழுவிக் கொண்டு சென்றன. "என் கண்ணீர்த் துளிகளில் பட்டுத் தெறித்துக் கொண்டு சென்றன. "என் முகத்தை பார்த்து, என் வேதனையைப் புரிந்துகொள்ளும் வெண்ணிலாவைத்தான், நான் இத்தனை நாளாக எதிர்பாத்துக் கொண்டிருக்கின்றேன்.

"நிலாநான் போனமாதம் சொன்னஎல்லாத்தையும் கடவுளிடம் சொல்லி விட்டாயா? வெண்ணிலாவிலும் கறை காண்பார் இவ்வுலகம் என்று எங்கடை ஆறாம் ஆண்டு ரீச்சர் சொன்னது எனக்கு இப்பநினைவிருக்கு. "சொல்லு! உன்னிலும் என்னைப்போல கறைபடிந்து விட்டதா? இல்லை, எங்கடை ஆக்கள் சும்மா சொல்லுகினமா?

"அன்புள்ள நிலாவே! என்னைக் கெட்டுப் போன பிள்ளை என்று சொல்கிறார்களே, நீயும் என்னைப்போல சொந்தங்களால் ஒதுக்கி வைக்கப்பட்டாயா?"

"என்ரை பிரண்டஸ் எல்லோரும் என்னைவிட்டு தூரமாகிவிட்டனரே, உன் சொந்தங்களும் உன்னை விட்டு விலகிவிட்டனரா?"

"மறுபடியும் என் நண்பர்களோடு பட்டம் விட்டு, மணல் வீடுகட்டி, பட்டாம் பூச்சிபிடித்து விளையாடுவதற்கு நீ உதவிசெய்வாயா?"

"எங்களின் வீட்டருகில் இருக்கின்ற குளத்தில் குட்டிக் குட்டிமீன்பிடித்து விளையாடியது மின்மினிப் பூச்சிகளைத் தேடிக் குட்டிப்பானையில் வைத்து மழைகாலத்தில் நான். பறக்கவிட்டது, இவையெல்லாம் எனக்கு மீண்டும் கிடைக்குமா?"

நான் எப்போதுமே என் ரீச்சரிடம் சொல்வேன்,

*"வளர்ந்து, பெரிய பொண்ணாகி, நேர்ஸ் அம்மாவாக வருவேன்என்று, எங்கடை பாடத்திலைவாற நைற்றிங்கேல் மாதிரிவர வேணும்! என்ற என்னுடைய கனவை நான் அடையமுடியாதா? அவ* சொல்லுவா:" செல்வி நீ பெரிய நேர்ஸ் ஆகி எல்லாரையும் கவனமா பாத்துக் கொள்ளுடிவாய! நல்லாயிருப்பாய்! என்று.

"ஆனா எனக்கு மட்டும் என்னவோ மாதிரி இருக்கு. திரும்பத் திரும்ப அண்டைக்கு நடந்த சம்பவம் தான் நினைவு வருது., நினைச்சாலே அந்தரமாவும், அரிகண்டமாவும் இருக்கு! நெருப்புக்குள்ள குதிக்கவேணும் போல, தண்ணிக்குள்ளவிழுந்து எழும்பவேணும் போல, எங்கடைப ள்ளிக்கூட கிரவுண்டில உருண்டு புரளவேணும் போல எனக்கு என்னவோஎல்லாம் தோணுது.

என்னைத்தனியக்கொண்டு வந்து வைத்திருக்கிறார்கள். அம்மா மட்டும் வந்து பாத்திட்டுப்போறா, கூட்டுற அன்ரி என்னை முறைச்சு முறைச்சுப் பாக்கிறா, பக்கத்திலை நின்ற ஒரு அக்காவிட்டை கேட்டவா," உந்தப் பிள்ளை எத்தனை மாசம்?"" அவவின்ரை அளவிலை இப்பவே இப்பிடி ஆகிட்டுது" என்று.... எனக்கொன்றும்புரியவில்லை. "நான் பள்ளிககூடம் போகவேணும்நிலாவே? திரும்பவும்விளையாடவேணும் வீட்டைபோக வேணும் நிலாவே எனக்கு அழுகை அழுகையா வருகுது"

"எங்கடை மேடத் திட்டை எனக்கு பிடிக்காதது என்ன வெனறால், என்னை வீட்டை அனுப்புற தேயில்லை.

நான்என்னதப்புசெய்தேன்?"

"மேடம், என்னைஏன் வீட்டைஅனுப்புறா இல்லை,"

"நீயாவதுமேடத்திட்டை சொல்லி அனுப்பிவைக்கிறியா?"

"எனக்கு இப்பெல்லாம் சத்தியும், வயிற்றைப் பிரட்டலும் அடிக்கடி வந்து கொண்டிருக்கின்றது.

சில வேளை மயக்கமாயும் இருக்கும். விருப்ப



மான சொக்கிலேட்டும் ஐஸ்கிறீமும் ஒருத்த ரும் வாங்கித் தாறதேயில்லை என்னுடைய குட்டி வண்டி பெரிசா வீங்கியிருக்கிறது என்ன வென்று தெரியவலலை.

"நிலா நீசொல்லுநான் ஏன் இப்படிதனியாக இருக்கிறன், என்னுடையவயிறுஏன் இப்படிவீங்கிக் கொண்டிருக்கு!!

"இந்த வயித்தோடை நான் எப்படிப்போவேன். என்னுடைய பள்ளிக்கூட பிரண்ட்ஸ் என்னைப் பாத்து சிரிக்கப் போகினம்"

"அம்ம ாஎனக்கு சாமத்திய வீடு செய்து ஊரில இருக்கிற எல்லாரையும் கூப்பிட்டு கொண்டாடவேண்டும் என்று சொன்னவா? இப்ப அது ஒன்றும் செய்யவுமில்லை என்னைக் கொண்டு வந்துதனிய எங்கேயோ விட்டிருக்கிறா!"

"நிலா!

எனக்கு நல்லா நினைவிருக்கு!"

"ஒருநாள் மழைபெய்து கொண்டிருக்கும் போது, நான் பள்ளிக்கூடம் முடிஞ்சு வீட்டை வந்து கொண் டிருந்தேன்.

எனக்கு மழை என்றாலும் வெயிலென்றாலும் ஐஸ்கிறீம் என்றால் நல்ல விருப்பம். அம்மா கேட்டாலும் வாங்கித் தாறதேயில்லை. எங்கடை வீட்டுக்கு கிட்ட இருக்கிற அண்ணா எனக்கு பக்கத்திலை வந்து, "செல்வி உனக்கு ஐஸ்கிறீம் வாங்கித் தாரதா?" என்று கேட்டார். முன்னமும் ஒருக்கா வாங்கித் தந்தவர். அவர் பெரிய மீசை வைச்சு கறுப்பா இருப்பார்.

அவர் கிட்டவரும் போதே எனக்கு அவரிலை ஏதோ மணமடிச்சது. "நான் ஐஸ் கிறீம் வேணும்" என்று சொன்னன.....,

அவர் "வாங்கித்தாறன் வா"என்று கூட்டிக் கொண்டு போனார். ஆனால் ஒருத்தரும் இல்லாதஅந்த இப்பிலிப்பை மரத்துக்குக்குப் பக்கத்திலை வைச்சு...கன நேரம்....என்னை வீட்டையும் போகவிடவில்லை. நான் அழுதனான் எனனை வீட்டை விடுங்கோ என்று அவர் என்னை விடவேயில்லை........."

அதுக்குப் பிறகுதான் அம்மா ஒருநாள் எனக்கு அடிச்சுப்போட்டு, தலையில் கையாலை அடிச்சு, அடிச்சு அழுதா! நான் அழ அழ என்னை வீட்டையிருந்து கூட்டிக் கொண்டுவந்து சுமங்கலி மேடத்தோடை விட்டுட்டா, பிறகு சுமங்கலி மேடம் என்னை ஆஸ்பத்திரிக்குக் கூட்டிக் கொண்டு போனவா, அதுக்குப்பிறகு பொலிஸாக்கள் வந்து, என்னைப் பற்றி அம்மாட்டையும் சுமங்கலி மேடத் திட்டையும், கனக்கத் தரம் விசாரிச்சவை.

"எனக்கு அந்தச் சம்பவம் இப்பநடக்கிறமாதிரி இருக்கு, நிலாநீஎன்னைக் காப்பாற்றுவாய் தானே?"

"நான் தங்கியிருக் கிற வீட்டுக்குப் புல்லு வெட்ட வருகின்ற அண்ணாவைக் கண்டாலும் பயமாயிருக்கும், அவர் வந்தாலே ஓடி ஒளிச்சிடுவன்",

"கோபம் கோபமா வருது நிலா எனக்கு யாரைப் பார்த்தாலும் பிடிக்கலை, பயமாயிருக்கு, என்ரை படிப்பு எல்லாம் என்ன ஆகப் போகுது, நான் எட்டாம் வகுப்போடை படிப்பை விடவேண்டுமா?

முகம் சிவக்க விம்மி, விம்மியழுதுகொண்டிருந்த செல்வியை நோக்கி தன்னுடைய வெண்ணிற, தூய ஒளியை பரப்பி வீசிக் கொண்டிருந்தது வெண்ணிலா,

அந்தச்சிறுமி தூய்மையானவள் என்று உலகுக்கு தன மௌன ஒளியால் உணர்த்திக் கொண்டிரு ந்தது.

**வாசகர்களிடமிருந்து கேள்விகள், கருத்துக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.**

**தரமானவை துறைசார்ந்த நிபுணர்களின் பதில்களுடன் வலம்புரியில் வெளியாகும்.**


**அனுப்ப வேண்டிய முகவரி:**

**சாந்திகம் ஊடகக்குழு,**
**8, 8/1, கற்பக விநாயகர் ஒழுங்கை,**
**கச்சேரி நல்லூர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படும் கேள்விகளும் கருத்துக்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**E.mail:psych@sltnet.lk**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கருவாச்சி காவியம்

## வைரமுத்து– 20

..அப்ப...

சல்லு சல்லு சல்லுன்னு ஒரு சத்தம். அந்தக்காடு கேக்காத சத்தம். மனசக் கொழச்சு மண்ணு மிதிக்கிற சத்தம்.

ஆள் இல்லாத அனாதிக் காட்ல இது என்னடா கொலுசுச் சத்தம்ன்னு பாத்தா தலையில பருத்திச் சாக்கச் சொமந்து ஒத்தையடிப் பாதையில ஒத்தையில வந்துகிட்டு இருக்கா சொர்ணக்கிளி.

பாத்தான்.

கெழங்கு சுடறதுக்குள்ள மனசு வெந்து போச்சு அவனுக்கு. கொடியில சீல காயறதக் கண்டாலே படக்குன்னு பார்வைய எடுக்க முடியாத பய, புத்திகொதிச்சுப் போயி நிக்கிறான்.

ஏ சொர்ணக்கிளி தலைச் சுமையை ஏறக்கி வச்சுட்டுச் சக்கரவள்ளிக் கெழங்கு தின்டுட்டுப் போறது...?

வேணாம் மாமா பொழுது போயிருச்சு. வீடு போயி சேரணும்.

நீ கெழங்கு தின்டுட்டுப் போறதாயிருந்தா வீட்டு வரைக்கும் ஒன் தலைச் சொமைய நான் தூக்கிட்டு வாரேன்.

நெசமாவா?

பொய்யா சொல்றேன்.

ஒனக்கு கால்வலிச்சா ஒன்னையுந் தூக்கி இடுப்புல வச்சிக்கறேன்.

பாதையில போனவள முன்னுக்கு வந்து மறிச்சு அவ தலச்சொமைய வம்படியா அவனே எறக்கி வைக்கிறான்.

தொட்டும் தொடாம அவள ஒரங்கட்டி ஒதுக்கிறான்.

கங்குகளத் தள்ளி வெந்தும் வேகாம



கெடந்த கெழங்குள்ல ஒண்ண எடுத்து தின்னு சொர்ணம்... தின்னுன்னு அவ கையில திணிக்க, குருத்து வாலை எலையில சுடுசோறு விழுந்த மாதிரி கெழங்குச் சூட்டுல உள்ளங்கை வெந்து அவ யாத்தேன்னு கத்த

இதான் சாக்குன்னு கையப்புடிச்சு உஸ் ஸ்ன்னு அவன் ஊதி விட, அந்த அணுக்குத்தக்க அனுகூலமாக்கிச் சாச்சுட்டான் அவள கம்பங்காட்ல.

குரங்குல இருந்துதான் மனுசன் பொறந்தான்ங்கிறாங்க.

ஆனா மனுசனுக்குள்ளே இருந்து சிங்கம், புலி, கரடி, ஓநாய் இதெல்லாம் பூமியில நித்தம் நித்தம் பொற

ந்துகிட்டேயிருக்கு.

பலது கண்ணுக்குத் தெரியறதில்லை; கணக்குல வாரதில்ல.

ஒரு தெய்வச் செலைய களவாணிப்பய திருடி உருக்கி விற்கிற மாதிரி ஆளில்லாத காட்ல ஒரு சின்

ணப் புள்ளையைச் சீரழிக்கிறான்.

ஒவ்வொரு துணியா உருவி எறியிறான்.

கத்திக் கதையைக் கெடுத்திருவாளோன்னு அவ வாய அடைக்கிறான் தாவணியப் பந்து சுருட்டி.

ஒரு மிருகம் கூடுதய்யா மனுசப் பொம்பளைய.

காடே கதிகலங்குது.

கம்பங்காட்ல வந்து அடைஞ்ச தட்டச் சிட்டுக தானியத்த அள்ளித் தலைக்கு மேல எறிஞ்ச மாதிரி செதறி ஓடுதுக.

காடைக் கதுவாளிக என்னமோ ஏதோன்னு பதறி சொந்த பந்தங்களே சூதானம்ன்னு அடுத்த காடு கேட்க அலறிக் கத்துக.

அங்கங்க ஊறித் திரிஞ்ச பாம்பு பூரான் எல்லாம் சட்டுன்னு சுருண்டு பிரிமணை மாதிரி சுத்திச் செத்தது மாதிரி கெடக்குக சத்தமில்லாம. ஈரக்கொல நடுங்கி விர்றுன்னு வீசுது காத்து.

எல்லாம் முடிஞ்சு போச்சு.

இப்ப நல்லா வெந்திருக்கும்ன்னு கங்குகளக் கிண்டிக் கெழங்குகள் எடுத்து ஊதி ஊதித் திண்டுபிட்டுத் திரும்பிப் பாத்தா. அவ இன்னம் எந்திரிக்கல. காலப் புடிச்சு ஒரு ஆட்டு ஆட்றான். கொலுசு சத்தம் போடுது. அவ அசையல. வாயில அடைச்ச தாவணிய உருவுனா வாய் தொறந்தே கிடக்கு; மூடல.... (தொடரும்)

---

..இரண்டு நாய்கள் தெருவில் நடந்துசென்று கொண்டிருந்தன. முதல் நாய் சொன்னது, என் பெயர் ஸாண்டி, உன் பெயர் என்ன? இரண்டாவது சிறிது இடைவெளி விட்டு பிறகு சொன்னது என் பெயர் no no (எதையும் செய்ய விடாமல் தடுப்பதனால்) ரோஜர் என்று நினைக்கிறேன்.


(சிரிப்பு)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

## கவலைகள் இன்றி வாழ்தல்!

இந்த நாயைப் போலவே, குழந்தைகளும் நமது வார்த்தைகளிலிருந்தும் உடல் மொழியிலிருந்தும் கிரஹித்துக் கொள்ளவும் கற்றுக்கொள்ளவும் தெர்டங்குகிறார்கள். குழந்தைகள் சிறுவயதில் எதையாவது பார்த்து ஆச்சரியப்படும் பொழுது அது தொடர்பாக நாம் ஏற்கனவே சொல்லியிருந்த வார்த்தைகளை அல்லது செயல்களை நினைவு கூர்ந்து அதன் அடிப்படையில் அவர்களது தீர்மானங்களை அமைத்துக்கொள்கிறார்கள். அதனால் குழந்தைகளுடன் இருக்கும் பொழுது எப்பொழுதும் தடை செய்துகொண்டிருப்பதற்குப் பதிலாக இன்னும் கவனத்துடன் அவர்களது அறிவுக் கூர்மையை உயிர்ப்புடன் வைத்திருக்க முயற்சி செய்யுங்கள்.

தாய்மார்கள் இதைத் தொடர்ந்து செய்ய முயற்சி செய்துகொண்டிருக்கிறார்கள். உதாணரத்திற்கு மழை பெய்யும் சமயத்தில் உடனே உள்ளே வந்துவிடுமாறும் இல்லாவிடில் ஜலதோஷம் பிடித்துக்கொள்ளும் என்றும் சொல்வார்கள். இது சிலமுறை திரும்பத் திரும்ப நடக்கும் பொழுது மழையைப் பார்த்தவுடனே குழந்தையின் மனது தானாகவே ஜலதோஷத்துடன்



இசைந்து சென்றுவிடும். அடுத்த முறை சிறது தூறல் வந்தாலே குழந்தை தும்ம ஆரம்பித்துவிடும்.

நான் சொல்கிறேன் உண்மையிலேயே மனிதனுடைய உடல் அறிவுக் கூர்மை மிக்கதும், தானே சரி செய்து கொள்ளக் கூடியதும் தானாகவே நோயிலிருந்து பாதுகாத்துக்கொள்ளும் தன்மையுமுள்ள ஒரு அமைப்பு. ஆனால் எப்படியோ நமது உடலின் உள்ளுறையும் அறிவுக்கூர்மையைவிட நமது முளையை அதிகம் நம்புகிறோம். அங்கேதான் நமது பிரச்சினையும் எல்லாக் கவலைகளும் ஆரம்பமாகின்றன.

ஒரு சின்னக்கதை....

ஒரு தந்தை ஒட்டகம். தன் மகன் ஒட்டகத்திடம் தங்கள் இனத்தின் உடல் அமைப்பு பற்றி விளக்கிக் கொண்டிருந்தது. தந்தை சொன்னது உனக்குத் தெரியுமா? நாம் பாலைவனத்தில் இருக்கும்போது பல நாட்களுக்கு தேவையான தண்ணீர் சேகரித்துக் வைத்துக் கொள்ளத்தான் நமக்குத் திமில் இருக்கிறது. மகன் கேட்டது நமது கண் இமைகள் ஏன்

### ஆன்மீகம் 104

நீளமாக இருக்கின்றன. தந்தை சொன்னது மணற் புயல்களிலிருந்து கண்களை ·காப்பாற்றுவதற்குதான். மகள் கேட்டது: நமது பாதம் ஏன் வீங்கி உப்பளாக இருக்கிறது? தந்தை சொன்னது பாலைவனங்களில் வேகமாக பயணம் செய்வதற்காகத்தான். அதற்கு மகன் சொன்னது தந்தையே இப்பொழுது நாம் இந்த மிருகக் காட்சிசாலையில் என்ன செய்து கொண்டி.ருக்கிறோம்.

(பலத்த சிரிப்பு)

பாருங்கள்; நமது உடல் மிகவும் அற்புதமாக வடிவமைக்கப்படுகிறது. நாம் அதை வெறுமனே அதன் இயல்பான அறிவுக் கூர்மையில் செயற்பட விட்டாலே அது நன்றாக செயற்படும்.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

1011

## அடாது செய்தவர்..

. மரியாதை ராமன் வசித்து வந்த ஊரில் சோமன் என்ற ஒரு பணக்காரன் இருந்தார்.

அவர் மிகவும் பொல்லாதவர், பணத்தாசைப் பிடித்தவர். தன்னிடம் வேலை செய்பவர்களுக்கு சரியான கூலி கொடுக்கமாட்டார்.

ஒருமுறை சோமன் தன் தோட்டத்தில் விளைந்த தேங்காய்களை சந்தையில் விற்று விட்டு, கிடைத்த பத்தாயிரம் ரூபாயுடன் தன்னுடைய மாட்டு வண்டியில் காட்டு வழியாக வீட்டுக்கு வரும் போது தனது பணப்பையைத் தொலைத்துவிட்டார்.

வீட்டுக்கு வந்ததும் வண்டியில் பணப் பையை தேடி பார்த்து கிடைக்காமல் புலம்பி தள்ளினார்.

மாட்டு வண்டி ஓட்டி வந்தவர் முதல் அனைவரையும் கேட்டு பார்த்து கிடைக்காமல் என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தார்.

அப்போ அவரது மனைவியார் 'உங்க பணப்பையை கண்டுபிடித்து கொடுப்பவர்களுக்கு தகுந்த சன்மானம் கொடுக்கிறேன் என்று சொல்லுங்க, கண்டிப்பாக யாராவது கொண்டு வந்து கொடுப்பாங்க' என்றார்.

ஆகா இது நல்ல திட்டமாக இருக்கிறதே என்று நினைத்து அடுத்த நாளே ஊர் முழுவதும் தண்டோரா போட்டு சொல்லிவிட்டார். ஊரு மகளும் பணப்பை கிடைத்தால் கொடுத்து சன்மானம் வாங்கலாம் என்று நினைத்தார்கள்.

அப்படி தேடி பார்த்தும் யாருக்கும் பணப்பை கிடைக்கவில்லை.

இந்த சம்பவம் நடந்து ஒரு வாரத்திற்கு பின்பு அருகில் இருந்த ஊரிலிருந்து அந்த ஊருக்கு ஒரு வழிப் போக்கர் வந்தார்.

அவர் பெயர் பூபாலன். மிகவும் நல்ல குணமுடையவர். ஏழையாக இந்தாலும் கவுரவமாக வாழ பிரியப்படுபவர். தன்னால் முடிந்தவரை அடுத்தவர்களுக்கு உதவுபவர்.

அவர் விவசாயம் செய்த நிலத்தில் நிலத்தடி நீர் கிடைக்காததால் விவசாயம் சரியாக செய்ய முடியவில்லை வேறு தொழில் செய்யவோ தன்னிடம் பணமும் அனுபவமும் இல்லை என்பதால் பக்கத்து ஊருக்கு சென்று ஏதாவது வேலை செய்து சம்பாதித்து பின்னர் தொழில் தொடங்க நினைத்து வந்தார்.

போகிற வழியில் காட்டுப் பாதையில் இருந்த அம்மன் கோயிலுக்கு போய் வேண்டிக் கொண்டார்.


அப்படி காட்டு வழியில் போகும் போது அங்கே ஒரு புறா அடிப்பட்டு கீழே கடந்தது.

அதை பார்த்து இரக்கப்பட்ட பூபாலன் அந்த புறாவை தூக்கிக் கொண்டு அருகில் இருந்த குளத்திற்கு கொண்டு சென்ற தண்ணீரை எடுத்து அந்த புறாவின் வாயில் ஊற்றினார்.

பின்னர் அந்த புறாவை அருகில் இருந்த மரக்கிளையில் வைத்துவிட்டு வந்தார்.

அவர் அப்படி வரும் போது பாதையின் ஓரத்தில் காலில் ஏதோ மாட்டியதை கண்டார், அது ஒரு பை அதில் நிறைய பணமும் இருந்தது. அதை எடுத்தவுடன் பூபாலனுக்கு யர்ரோ பாவம், தன் பணப் பையை விட்டு விட்டு போயிட்டாங்க, அப்படி தொலைத்தவர் மனம் எத்தனை வேதனைப்படுமோ, எனவே விரைவில் அவரை கண்டுபிடித்து கொடுத்து விட வேண்டும் என்று ஊருக்கு விரைந்தார்.

அப்போது ஊருக்குள் சென்ற போது அங்கு இருந்த கடையில் விசாரித்தபோது கடைக்காரர் சோமனைப் பற்றி சொல்லி அவர்தான் தொலைத்தவர், நீங்க இதை கொடுத்தால், கண்டிப்பாக சன்மானம் கொடுப்பார் என்றார்.



உடனேபூபாலனும் சோமன் வீட்டை தேடி பிடித்து சென்று பணப்பை கிடைத்த விபரத்தை சொன்னார். சோமனுக்கு சந்தோசம் தாங்கமுடியவில்லை. உடனே அந்தப் பணப்பையை வாங்கிக் கொண்டார்.

அதேநேரம் அவரது கெட்ட எண்ணமும் வெளிப்படத் தொடங்கியது.

பணப்பை கிடைத்துவிட்டது. பணமும் சரியாக இருந்தது. இப்போ ஏன் இவனுக்கு சன்மானம் கொடுக்க வேண்டும். சன்மானம் கொடுக்காமல் தப்பிக்க என்ன செயயலாம் என்று யோசித்தார் சோமன்.

கெட்ட மனம் கொண்ட சோமன் பூபால்னைப் பார்த்து 'நீ என்னை ஏமாற்றப் பார்க்கிறாய், நான் என்னுடைய பையில் வைர மோதிரம் ஒன்றையும் வைத்திருந்தேன் அது காணவில்லை.

மரியாதையாக கொடுத்து விடு, உன்னை சும்மா விடமாட்டேன்' என்று கத்தினான்.

பூபாலனுக்கு ஒன்றுமே புரியவில்லை.

ஒருவேளை இவர் சொனனது போல் வைர மோதிரம் இருந்து தொலைந்து போயிருக்குமா, நாம் தான் எடுக்க வில்லையே இவரிடம் சன்மானம் வாங்கு வதைவிட பிரச்சினையில் இருந்து தப்பிக்கலாம் என்று யோசித்தார்.

சோமனோ விடாமல் கத்தி ஆர்ப்பாட்டம் செய்தார்.

பூபாலன் பணப்பை கொண்டு வந்த செய்தியை ஊராருக்கு சொன்ன கடைக்காரர், கஞ்சப்பயல் சோமன் அப்படி என்னதான் பரிசு கொடுக்கப் போறான் என்று பார்ப்போம் என அனைவரையும் அழைத்து வந்தார்.

வந்த இடத்தில் பூபாலன் குற்றவாளி போல நிற்பதை கண்ட ஊரார் சோமனை சும்மா விடக் கூடாது, இந்த பிரச்சினையை மரியாதை ராமனிடம்தான் கொண்டு சென்று தீர்ப்பு கேட்க வேண்டும் என்று சொன்னார்கள்.

சிறிது நேரத்தில் சோமன், பூபாலன், ஊர் மக்கள் அனைவரும் மரியாதைராமன் முன்னால் போய் நின்றார்கள்.

சோமன் தான் பணப் பையையும், அதில் இருந்த வைர மோதிரம் தொலைதத கதையையும, பூபாலன தான் பணப்பை கண்டு பிடித்த கதையையும் சொனனார்கள்.

ஏற்கனவே சோமன் அறிவித்த தண்டோரா பற்றி மரியாதை ராமனுக்கு தெரியும்.

அப்போ தண்டோரா போடும் போது வைர மோதிரம் பற்றி ஒன்றும் சொல்லாததும் தெரிந்ததுதான்.

ஆக மொத்தம் சோமன் ஏமாற்றுகிறான் என்பதை புரிந்து கொண்ட மரியாதை ராமன, சோமனுக்கு சரியான தண்டனை கொடுக்க நினைத்து இவ்வாறாக தீர்ப்பு கூறினார்.

'சோமன் தொலைத்த பையில் பணமும், வைர மோதிரமும் இருந்தது என்று அவரே சொல்லியிருக்கிறார்.

இப்போது பூபாலன் கொண்டு வந்த பையில் பணம் மட்டுமே உள்ளது.

ஆக இது சோமனின் பையே இல்லை, வேறு யாரோ தொலைத்த பை. அப்படி தொலைத்தவர் இதுவரை யாரும் புகார் கொடுக்கவில்லை.

அவ்வாறு யாரும் புகார் கொடுக்காத வரை நம்ம ஊரு வழக்குப்படி கிடைத்த பணத்தில் 10 பங்கு அம்மன் கோயிலுக்குக் கொடுத்து விட்டு, மீதியை எடுத்தவரே வைத்துக்கொள்ளலாம்.

ஆக பூபாலன் அந்த பணத்தை தன் சொந்த உபயோகத்துக்கு வைத்துக்கொள்ளலாம், சோமனின் பணம் மற்றும் வைர மோதிரம் கொண்ட பையை கண்டுபிடித்தவுடன் சோமனே சன்மானம் கொடுப்பார்.

சபை கலையலாம்' மரியாதை ராமன் தீர்ப்பு சொன்னதும் சோமனுக்கு இதயமே நின்று போனது போல் ஆகிவிட்டது.

பூபாலன் கிடைத்த பணத்தில் 10 சதவீதம் அம்மன் கோயிலுக்கு கொடுத்துவிட்டு, மீதியை தன் சொந்த ஊருக்கு கொண்டு சென்று தொழில் செய்து நலமாக வாழ்ந்து வந்தார்.

12.2014
14

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1542 - இளவரசி மேரி ஸ்டுவேர்ட் முதலாம் மேரி என்ற பெயரில் ஸ்கொட்லாந்தின் அரசியானாள்.
- 1819 - அலபாமா ஐக்கிய அமெரிக்காவின் 22ஆவது மாநிலமானது.
- 1884 - இலங்கையில் இடம்பெற்ற பெரும் சூறாவளி காரணமாக யாழ்ப்பாணத்தில் மட்டும் பெரும் உயிர்ச் சேதமும் பொருட்சேதமும் ஏற்பட்டன.
- 1899 - யாழ்ப்பாணம் பொது மருத்துவமனையை தனியாரிடமிருந்து இலங்கை அரசாங்கம் பொறுப்பெடுத்துக் கொண்டது.
- 1900 - மாக்ஸ் பிளாங்க் தனது கரும்பொருள் கதிர்வீச்சு பற்றிய கொள்கையை நிறுவினார்.
- 1911 - ரோல்ட் அமுண்ட்சென் தலைமையிலான 5 பேரடங்கிய குழு தென்முனையை அடைந்த முதலாவது மனிதர் என்ற பெயரைப் பெற்றனர்.
- 1918 - பின்லாந்தின் மன்னனாக ஜேர்மனியின் இளவரசன் பிறீட்ரிக் கார்ல் வொன் ஹெஸ்சென் தெரிவு செய்யப்பட்டான்.
- 1939 - நாடுகளின் கூட்டமைப்பிலிருந்து சோவியத் ஒன்றியம் வெளியேற்றப்பட்டது.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பான் தாய்லாந்துடன் கூட்டு ஒப்பந்தம் செய்து கொண்டது.
- 1946 - ஐ.நாவின் தலைமையகத்தை நியூயோர்க் நகரில் அமைக்க முடிவாகியது.
- 1972 - அப்பல்லோ 17: யூஜின் சேர்னன் சந்திரனில் நடந்த கடைசி மனிதர் ஆனார்.
- 2003 - சதாம் உசேன் கைப்பற்றப்பட்ட செய்தியை ஐக்கிய அமெரிக்காவின் அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ் அதிகார பூர்வமாக அறிவித்தார்.
- 2004 - தென்பிரான்சில் வான்வீதி என அழைக்கப்படும் மில்லோ என்ற உலகின் மிகு உயர் பாலம் திறக்கப்பட்டது.

### பிறப்புகள்

- 1503 - நோஸ்ராடாமஸ், சிறந்த குறி சொல்லும் பதிப்பாளர் (இ. 1566)
- 1546 - டைக்கோ பிரா, டேனியப் பிரபு (இ. 1601)
- 1895 - போல் எல்யூவார், பிரெஞ்சுக் கவிஞர் (இ. 1952)
- 1946 - சஞ்சய் காந்தி, இந்திய அரசியல்வாதி (இ. 1980)
- 1953 - விஜய் அமிர்தராஜ் இந்திய டென்னிஸ் வீரர், நடிகர்.

### இறப்புகள்

- 1591 - சிலுவையின் புனித யோவான், எசுப்பானிய மதகுரு புனிதர் (பி. 1542)
- 1799 - ஜார்ஜ் வாஷிங்டன், ஐக்கிய அமெரிக்க நாடுகளின் முதலாவது அரசுத் தலைவர். (பி. 1732)
- 1953 - வி. ஐ. முனுசாமி பிள்ளை, தமிழக அரசியல்வாதி (பி. 1889)
- 1959 - சோமசுந்தர பாரதியார், தமிழறிஞர் (பி. 1879)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

www.mahinda2015.com

# இது, நாம் பிறந்த நாடு, நாம் அனைவரும் வாழும், நம் தாய்நாடு

இம் மண்ணில் வளரும் புல்லும், புழுதியும் என் பாதங்களுக்கு நன்கு பரிச்சியமானவை. அதுபோன்றே, நாம் ஒன்றுபட்டு வாழும் இந்த தேச மக்களின் மனங்களையும் நான் நன்குணர்வேன்.

நம் நாட்டின் அபிமானத்துக்குரிய வரலாற்றுச் சிறப்பினால் தோன்றிய பெருமையையும், இன, மத, பேதமில்லாது, பீறிட்டுப் பாயும் அளவற்ற மனிதாபிமானத்தையும் நான் அறிவேன். அதனால் தான், இப்பொழுது இந்த நாட்டில் இரண்டு இனங்கள் வாழ்வதாக நான் எண்ணுகிறேன். ஒரு இனத்தவர் நாட்டை நேசிப்பவர்கள். மற்றைய இனத்தவர் நாட்டை நேசிக்காதவர்கள். நாட்டை நேசிக்கும் உள்ளங்கள் அளவில்லாதவை. அந்த உள்ளங்களின் நேச உணர்வை நான் அனுபவித்துக் கொண்டிருக்கிறேன். நான் ஒருபோதும் என் நாட்டை சிறிய நாடு என்று கூறியதில்லை.

என் நாட்டை மாபெரும் நாடாக உருவாக்கிடவே செயலாற்றினேன். எனக்கிருப்பது நான் வெளிநாடுகளுக்கோ, கட்சிகளுக்கோ கொடுத்த வாக்குறுதிகள் அல்ல. எனது நாட்டின் மக்களுடன் கொண்ட இணக்கப்பாடு. மக்களுக்கு நாட்டுத் தலைவர் மீதுள்ள புரிந்துணர்வானது, நாட்டுக்கான தீர்வுகளை எடுப்பதற்கு மிக முக்கியமானது. இந்த புரிந்துணர்வு தான் இன்று நம் தாய் மண்ணில் சமாதானத்திற்கு வித்திட்டது. அமைதியை மலரச் செய்தது.

நான், இந்த தேசத்தின் தற்காலிக பொறுப்பாளன் மட்டுமே. என்றாலும், மக்களுடன் எனக்குள்ள இணைப்பானது நாட்கள் அல்லது மாதங்களுக்கு உட்பட்டதல்ல. ஆனால், எனது கரம் பிடித்து, தம் நம்பிக்கையை வெளிக்காட்டும் மக்களினதும், நான் நாடு முழுவதும் செல்கையில், என் கரங்களைப் பற்றிக்கொள்ளும் குழந்தைகளினதும் எதிர்காலத்தைப் பற்றிய பாரிய பொறுப்பு என் கரங்களில் கனக்கிறது.

இப்பொழுது நாம் அனைவரும் இணைந்து, உண்மையான சுதந்திரக் காற்றினை ஐந்து வருடங்களாக சுவாசிக்கின்றோம். நாளுக்கு நாள் வளர்ந்துவரும் நாட்டின் அபிவிருத்தியையும், சமாதானத்தையும் பூரணமாக அனுபவிக்கின்றோம்.

நம் தாய்நாட்டின் தாய்மார்களின் இதயங்களில் அணைந்துபோன தீயினை மீண்டும் மூட்டிவிட நான் ஒருபோதும் அனுமதிக்க மாட்டேன். இலங்கையின் எதிர்காலத்தை பாதுகாப்பான எதிர்காலமாக உருவாக்கும் பாரிய தேவை மக்களுக்குள்ளது. அப் பாரிய பொறுப்பு எனதே.

உங்கள் சனாதிபதி



பாதுகாப்பான தேசம்
வளமான எதிர்காலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## கணேசன் விஜயன்

### (முன்னாள் மிதிவெடி அகற்றும் நிறுவன பணியாளன் Halotrust)

மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும் வட்டுக் கோட்டை பங்குரு வீதியை வதிவிடமாக வும் கொண்ட கணேசன் விஜயன் (12.12.2014) வெள்ளிக்கிழமை இறைபத மடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணேசன் மற் றும் மகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் சரஸ்வதியின் அன்புப் பேரனும், பிரகலாதன், சிறிலசிறி, விஜயசிறி (அவுஸ்திரேலியா), றஜிதசிறி, பிரதீபன், விஜிதசிறி ஆகியோரின் அன்புச் சகோ தரனும், ஜெயந்தினி, விமலன் (அவுஸ்தி ரேலியா) ஆகியோரின் அன்பு மைத்துன ரும், பிரியங்கா, பிரியங்கன் ஆகியோ ரின் மாமனாரும், பிரணவனின் சித் தப்பாவும், தியாகராஜா சுசிலாதேவியின் அன்புப் பெறா மகனும், நவநீதன் (லண் டன்), காயத்திரி, கோபிநாத், பிரசன்னா ஆகியோரின் உடன் பிறவாச் சகோதர னும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2014) ஞாயிற்றுக்கிழமை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ள வும்.

பங்குரு வீதி,
வட்டுக்கோட்டை.

தகவல் : மருமகள் - பிரியங்கா
மருமகன் - பிரியங்கன் 0772385487

(8752)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மகிந்தவின் அட்டூழியங்களை ஒழிக்க மைத்திரிபாலவுக்கு வாக்களியுங்கள்!

## அஸாத் சாலி தெரிவிப்பு



(கொழும்பு)

**ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த நாட்டில் புரிந்துவரும் அராஜகத்தையும் அட்டூழியங்களையும் ஒழித்துக்கட்டி அனைத்து மக்களும் நிம்மதியாகவும் சந்தோசமாகவும் சுபீட்சமாகவும் வாழ எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது எதிரணியின் வேட்பாளார் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஒன்றுபட்டு வாக்களிப்போம் என தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய மாகாண சபை உறுப்பினருமான அஸாத் சாலி தெரிவித்தார்.**

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பொது எதிரணியின் வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்து ஏற்பாடு செய்யப்பட்ட தேர்தல் பிரசாரக் கூட்டம் நேற்று முன தினம் வியாழக்கிழமை அட்டாளைச்சேனை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க வளாகத்தில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு. தேர்தல் காலங்களில் வெற்றி பெறு வதற்காக ஜனாதிபதி விடு தலைப்புலிகளின் கதைகளைப் பேசி மக்கள் வாக்குகளைப் பெறு வதற்காக முயறசிக்கின்றார். மக் களைக் கொன்று குவித்த கருணா அம்மானையும், பிள்ளையானை யும் கூடவே வைத்துக்கொண்டு பொது எதிரணியைச் சேர்ந்த முன் னாள் ஜனாதிபதி சந்திரிகா பண் டாரநாயக்க குமாரதுங்க, எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்ர மசிங்க, முன்னாள் இராணுவத் தளபதியும் ஜன நாயகக் கட்சியின் தலைவருமான சரத் பொன்சேகா மற்றும் பொது எதிரணியின் ஜனா திபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன போன்றோரை புலிகள் என ஜனாதிபதி மகிந்த வர்ணி க்கின்றார். இது எந்தவகையில் நியாயமாகும். ஜனாதிபதி மகிந் தவின் பின்னால் எவ்வித வாக்கு வங்கியுமில்லாத தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க மற்றும் கெட்டகொட போன்றோர் சென்றுள்ளனர். இவர் களை வைத்துக்கொண்டு வீராப்பு வசனங்களை அவர் பேசி வருகி ன்றார். ஆனால், எமது பக்கம் இணைந்த ராஜித சேனாரட்ன, ஹிருணிகா பிரேமச்சந்திர, குண வர்த்தன, மைத்திரிபால சிறிசேன போனறவர்கள் இலட்சக்கணக் கான வாக்குகளைப் பெற்றவர்கள். இதே போல் இன்னும் பலரும் நாளாந்தம் எம்பக்கம் இணைந்து வருகின்றனர்.

தம்புள்ள முதல் அளு த்கம போன்ற பிரதேசங்களிலுள்ள பள்ளிவாசல்களை உடைத்தவர்களைப் பாதுகாக்கும் மகிந்த அரசுக்கு ஆதரவளித்துக் கொண்டிக்கும் முஸ்லிம் தலைவர்கள் இம்முறை நன்கு சிந்தித்து மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## அனோமா பொன்சேகா அரசிற்கு அறிவுரை



எதிர்க்கட்சியினருக்கு வழங்கும் பணத்தை அரசாங்கம் மக்களுக்காக செலவிட்டிருக்கலாம் என ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகாவின் பாரியார் அனோமா பொன்சேகா தெரிவித்துள்ளார்.

பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவாக நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சியினருக்கு நான் ஒரு ஆலோசனை கூற விரும்புகின்றேன்.

தோல்வியை கண்டு அஞ்சி ஆளும் கட்சி எதிர்க்கட்சியினரை தம் பக்கம் இழுத்துக்கொள்ள கோடிக்கணக்கான பணத்தை வாரி இறைக்கின்றது.

ஆளும் கட்சியினர் கொஞ்சம் மூளையைப் பயன்படுத்தியிருந்தால் இவ்வளவு சிரமப்பட வேண்டியிருக்காது.

கட்சி தாவச் செய்ய பணத்தை வழங்குவதனை விடவும் மக்களுக்கு அந்தப் பணத்தை செலவிட்டிருந்தால் தேர்தல்கள் சவாலாக அமைந்திருக்காது.

இந்த அரசாங்கத்தின் கீழ் பெண்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

சமையலறை யுத்தம் மிகவும் கடுமையானது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# தலைவர் சம்பந்தனுக்கும் பஸ்களை வழங்கத்தயார்

## அமைச்சர் குமார் வெல்கம

(கொழும்பு)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கேட்டாலும் நான் பேருந்துகளை வழங்குவதற்கு தயாராக இருக்கின்றேன். ஆனால் அதற்கான கட்டணங்கள் செலுத்தப்படவேண்டும். அநுராதபுரத்தில் நடைபெற்ற ஆளும் கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்துக்கும் நான் பேருந்துகளை வழங்கினேன் என்று போக்குவரத்து அமைச்சர் குமார் வெல்கம தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அமைச்சர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

கேள்வி : ஆளும் கூட்டணியின் பிரசாரக் கூட்டத்துக்கு போக்குவரத்துச் சபையின் பேருந்துகள் வழங்கப்பட்டதால் போக்குவரத்துச் சபையின் வருமானம் குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றதே?

பதில்: நான் பேருந்துகளை பணத்தைப் பெற்றுக்கொண்டே வழங்குகின்றேன். அநுராதபுரத்தில் நடைபெற்ற கூட்டத்துக்கும் நான் பேருந்துகளை அனுப்பினேன். ஆனால் பணத்தைப் பெற்றுக்கொண்டே



அனுப்பினேன். நான் பேருந்துகளை குத்தகை அடிப்படையில் கொள்வனவு செய்துள்ளேன். எனவே பணத்துக்கு பேருந்துகளை வழங்குவேன்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சம்பந்தன் கேட்டாலும் நான் பேருந்துகளை வழங்குவதற்கு தயாராக இருக்கின்றேன். ஆனால் அதற்கான கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்தார். (இ-5)

# பாராளுமன்ற ஆசன வரிசையில் திடீர் மாற்றங்கள் செய்யப்பட்டன

## திஸ்ஸவுக்கு முன்னுரிமை

பாராளுமன்ற உறுப்பினர்களின் கட்சித் தாவல்களைத் தொடர்ந்து பாராளுமன்றத்தில் ஆளும் தரப்பு, எதிர்தரப்பு ஆசன வரிசைகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

பாராளுமன்றம் நேற்றுமுன்தினம் பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தலைமையில் கூடியது.

ஆளும் கட்சியிலிருந்து வெளியேறிய ஜாதிக ஹெல உறுமய உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிர்க்கட்சி ஆசன வரிசையில் ஆசனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன.

அரசாங்கத்துடன் இணைந்து கொண்ட திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு ஆளும் தரப்பில் முன்வரிசையில் ஆசனம் ஒதுக்கப்பட்டிருந்தது.

ஆளும் கட்சியிலிருந்து எதிர்க்கட்சிக்குச் சென்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவர் மாத்திரமே நேற்றுமுன்தினம் சபைக்கு வந்திருந்தனர்.

இந்த ஆசன ஒதுக்கீடுகளுக்கு அமைய ஆளும் கட்சி உறுப்பினர்கள் பலரின் ஆசனங்கள் மாறியிருந்தமையை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

அதேநேரம் புதிதாக நேற்று முன்தினம் பதவியேற்றுக்கொண்ட அமீர் அலிக்கு ஆளும் கட்சியின் பின் வரிசையில் ஆசனம் ஒதுக்கப்பட்டிருந்தது. (இ-5)

# வாரம் ஒரு தகவல்

## சத்தமில்லாத யுத்தம்

**"சரசு உன் வீட்டுக்காரர் எங்கே?"**

**"அரசியல்வாதியானதற்குப்பின் அவர் எங்கே வீட்டில் தங்குகிறார்? எந்த ஊரில் எந்த மேடையில் பேசிக் கொண்டிருக்கிறாரோ?"**

**"பேசட்டும் பரவாயில்லை. ஆனால் சத்தம் போட்டுப் போகச் சொல்லாதே"**

**"ஏன்?"**

**"சத்தம் போட்டுப் பேசுபவர்களுக்கு குரல்வளை பாதிக்கப்படுவதாக டாக்டர்கள் சொல்கிறார்கள்."**

**"அப்படியா?"**

**"ஆமாம். 16 விதமான நோய்கள் குரல்வளையைப் பாதிக்கிறதாம். முக்கியமாக பாதிப்புக்குள்ளாகிறவர்கள் யார் தெரியுமா?"**

**"யார்?"**

**"ஆசிரியர்கள், பாடகர்கள், அரசியல்வாதிகள்"**

**"அப்படியானால் இவர்களெல்லாம் பாடம் நடத்தினாலும் பாடினாலும் பேசினாலும் அதிக சத்தம் போடாமல் இருப்பது நல்லது என்கிறாயா?"**

**"ஆமாம். அதனால் தான் எனது வீட்டுக்காரரிடம் கூடச் சொல்லி வைத்திருக்கின்றேன்."**

**"என்ன சொல்லி வைத்திருக்கின்றாய்."**

**"என்னைத் திட்டுவதென்றால் கூட மெதுவாகத் திட்டுங்கள் என்று சொல்லி வைத்திருக்கின்றேன்."**

**"உங்களுக்குள் சண்டை வருமா?"**

**"என்ன அப்படிக்கேட்டு விட்டாய்? தினமும் சண்டை சச்சரவு தான் இருந்தாலும் பக்கத்து வீட்டுக்குக் கூட கேட்காது."**

**"ஆச்சரியமாக இருக்கிறதே!"**

**"இருந்தாலும், அடுத்த ஜென்மத்திலும் அவரே என் கணவராக வரவேண்டும் என்றுவேண்டிக்கொண்டிருக்கிறேன்" "அப்படியா?"**

**"ஆமாம். போட வேண்டிய சண்டை இன்னும் பாக்கி இருக்கிறது."**

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# போர் வெற்றி இலாபம் தருமா?



விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியாக தோற்கடிக்கப்பட்ட போர், முடிவுக்கு வந்து ஐந்தரை வருடங்களுக்குப் பின்னரும், இலங்கை அரசியலில் அதுவே மிகப்பெரிய முதலீடாக விளங்கி வருகிறது.

ஆளும் கட்சியினர் மட்டுமன்றி, எதிரணியினரும்கூட போர் வெற்றிக்கு உரிமை கோருவதிலும் அதனை பங்குபோட்டுக்கொள்வதிலும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலின்போது, போர் வெற்றியே பிரசாரங்களில் பிரதான இடத்தை வகிக்கப் போகின்றது என்பது இப்போது உறுதியாகிவிட்டது.

கடந்த திங்கட்கிழமை, வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்ட நாளன்று, பல நாளிதழ்களின் முன்பக்கத்தில், ஐந்தரை வருடங்களுக்கு முன்னர் வெளியான முகப்புப் பக்கமே இடம் பெற்றிருந்தது. போர் வெற்றி கொள்ளப்பட்ட மறுநாள், வெளியான நாளிதழின் முகப்புத் தோற்றமே அது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பணம் கொடுத்து அந்த முகப்புத் தோற்றத்தை விளம்பரமாக பிரசுரித்திருந்தது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தேடுவதற்காக அந்த முன்பக்க விளம்பரம் வெளியிடப்பட்டிருந்தது.

போர் முடிந்து ஐந்தரை வருடங்கள் ஆகியுள்ளதால், மீண்டும் போரை நினைவுபடுத்த வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு வந்துள்ளது. அதனாலேயே, ஐந்தரை வருடங்களுக்கு முந்திய நாளிதழின் முகப்புத் தோற்றத்தை வெளியிட வேண்டி வந்தது.

இதுவொன்றே, இந்தத் தேர்தலிலும், போரில் ஈட்டிய வெற்றியை வைத்து அரசாங்கம் பிழைப்பு நடத்தப்போகிறது என்பதை உறுதிப்படுத்தியுள்ளது.

"போரில் வெற்றியை பெற்றுத் தந்தோம், புலிகளின் கையிலிருந்த நாட்டின் ஒருபகுதியை மீண்டும் கைப்பற்றி ஒன்றுபடுத்தினோம். ஆனாலும், நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சிகள் நடக்கின்றன.

உள்நாட்டிலும் வெளிநாடுகளிலிருந்தும் மேற்கொள்ளப்படும் இத்தகைய சூழ்ச்சிகளிலிருந்து நாட்டை காப்பாற்ற வேண்டும். அதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கே வாக்களிக்க வேண்டும். இல்லாவிட்டால், நாடு பிளவுபடுத்தப்பட்டுவிடும். புலிகளின் கையில் போய்விடும்" என்றெல்லாம் அரசதரப்பு பிரசார மேடைகளில் அமைச்சர்களும் ஜனாதிபதியும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் வீராவேசமாக பேசி வருகின்றனர்.

அரசாங்கத்தை பொறுத்தவரையில், போர் வெற்றியை வைத்து அண்மையில் எதிர்கொண்ட தேர்தல்கள் பெரியளவில் வெற்றியாக அமையவில்லை. ஆனாலும், புதியதொரு பிரசார உத்தியை வகுக்க முடியாத நிலையிலிருப்பதால், மீண்டும் போர் வெற்றியை வைத்து அரசியல் செய்யத் தொடங்கியுள்ளது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்தர முன்னணி, போர் வெற்றியை தமது பிரசார நடவடிக்கைகளில் முதன்மைப்படுத்த ஆரம்பித்துள்ள நிலையில், எதிரணியிலுள்ள தரப்புகளும் அதற்கேற்ற வகையில் எதிர்ப் பிரசாரங்களை மேற்கொள்ள வேண்டிய நிலைக்கு உள்ளாகியிருக்கின்றன. விடுதலைப்புலிகளுக்கு எதிரான போருடன் தொடர்புபட்ட சக்திகள் இருதரப்பிலுமே இருக்கின்றன.

இறுதிக் கட்டப் போரை நடத்தி வெற்றியை பெற்றுக்கொண்டது மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம். ஆனால், அதறகு முன்பாக, போரில் வெற்றி பெறுவதற்கான அடித்தளத்தை அமைத்துக்கொடுத்தவர்கள் என்று பார்த்தால், இப்போது எதிரணியிலிருக்கின்ற ஐக்கிய தேசியக் கட்சியும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுமே.

அதுபோல, இறுதிக்கட்ட போருக்கு தலைமை தாங்கி நடத்தி, வெற்றியை பெற்றுக்கொடுத்து, அந்தச் செய்தியை முறைப்படி ஜனாதிபதியிடம் அறிவித்தவர் முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா. கடந்தமுறை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த அவர், இப்போது எதிரணி வேட்பாளருடன் நிற்கிறார்.

மேலும், எதிரணியின் பொது வேட்பாளரான மைத்திரிபால சிறிசேனவும்கூட, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெளிநாடு சென்றிருந்த தருணங்களில் பதில் பாதுகாப்பு அமைச்சராக பணியாற்றியவர். போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட போதுகூட, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெளிநாட்டிலேயே தங்கியிருந்தார். அப்போதுகூட, மைத்திரிபால சிறிசேன பதில் பாதுகாப்பு அமைச்சராக இருந்தவர். அவரும் போரில் பங்கெடுத்தவர்தான்.

அதேவேளை, போரை வெற்றிகொண்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில், முக்கிய பங்காற்றிய ஜாதிக ஹெல உறுமயவும் இப்போது எதிரணியில் நிற்கிறது.

எனவே, விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் வெற்றியை பெற்றுக்கொடுத்தது தாமே என்று அரசாங்கம் பிரசாரம் செய்யத் தொடங்கியுள்ள நிலையில், அதற்கு எதிராக தாமும் அதில் பங்கெடுத்தோம் என்ற குரல்கள் எதிரணித் தரப்பிலிருந்தும் ஒலிக்கத் தொடங்கியுள்ளன. இந்த நிலையில், கடந்த வாரம் ஹோமகமவில் நடந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய பாதுகாப்புச் செயலர் கோட்டபாய ராஜபக்ஷ, போர் வெற்றிக்கு மஹிநத ராஜபக்ஷவை தவிர, வேறெவரும் உரிமை கோரமுடியாது எனத் தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மூளையில் உதித்த திட்டத்தின்படியே போர் வெற்றி கொள்ளப்பட்டது என்றும் அதில் வேறெவரினது பங்களிப்புமில்லை என்றும் அவர் கூறியிருந்தார்.

போருக்கு அரசியல் ரீதியாக தலைமை தாங்கியது, சர்வதேச ரீதியான அழுத்தங்களை எதிர்கொண்டது, சர்வதேச ஆதரவைத் திரட்டியது, போருக்கான வளங்களை ஒன்றுதிரட்டி வழங்கியது. இவை அனைத்தும், போர் வெற்றிக்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆற்றிய பங்களிப்புகளாகும். ஆனால, இவற்றை மட்டும் வைத்துக்கொண்டு ஒரு போரை வென்றுவிட முடியாது. அதுவும், விடுதலைப் புலிகள் என்ற ஒரு பலம்மிக்க இராணுவ அமைப்புக்கு எதிரான போரை, மேற்கூறிய பங்களிப்புகளை மட்டும் வைத்துக்கொண்டு நிச்சயமாக வென்றிருக்க முடியாது.

எனவே, இப்போது எதிரணியில் இருக்கின்றவர்கள் போரை முடித்து வைப்பதற்கு அளித்த பங்களிப்புகளை புறமொதுக்கிவிட முடியாதுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர், 2005 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தினால் திட்டமிட்டு மூனறரை வருடங்களுக்குள் முடித்து வைக்கப்பட்டது என்று கூறமுடியாது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் இறுதி வெற்றிக்கான அடித்தளம், 2002 ஆம் ஆண்டே போடப்பட்டுவிட்டது. அதாவது, விடுதலைப் புலிகள் எப்போது, ரணில் விக்ரமசிங்க அரசாங்கத்துடன் போர்நிறுத்த உடன்பாட்டை கையெழுத்திட்டனரோ, அப்போதே அவர்களின் வீழ்ச்சி தொடங்கிவிட்டது.

2001 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் முன்பாக வைக்கப்பட்டது ஒரு சமாதானத்திட்டம் மட்டுமல்ல, அது அவர்களை வீழ்த்துவதற்கான ஒரு பொறியும்கூட. அதனை கச்சிதமாக வைத்தவர் ரணில் விக்ரமசிங்கவே. அதுமட்டுமன்றி, சர்வதேச வலைப்பின்னல் ஒன்றின் மூலம் விடுதலைப் புலிகளை வெளிநாடுகளில் தடை செய்ய வைத்து, மெல்ல மெல்ல அவர்களின் கழுத்தை இறுக்கத் தொடங்கியிருந்தார்.

அதேவேளை, புலிகளின் வெளிநாட்டு ஆயுத விநியோக மார்க்கங்களை தடைசெய்வதிலும் ரணில் விகரமசிங்க அரசாங்கம் கணிசமான முன்னேற்றத்தை எட்டியிருந்தது. அப்போது ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா குமாரதுங்க, பாதுகாப்பு அமைச்சை ரணில் விக்ரமசிங்க அரசாங்கத்திடமிருந்து பறித்தும் அந்த அரசாங்கத்தை கலைத்தும் விடுத்லைப்புலிகளுக்கு எதிரான போரை, பின்னர் தன் கையில் எடுத்துக்கொண்டார். வெளிப்படையாக அல்லாத- ஆனால், மிகத் தெளிவானதொரு நிழல் போராக உருவெடுத்தது சந்திரிகாவின் காலத்திலேயே.

இந்தக் காலகட்டத்தில் போரை முன்னெடுப்பதற்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டன. விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதனாலேயே, தமது அரசாங்கத்தின் காலத்தில் விடுதலைப் புலிகளின் 75 சதவீத பலம் அழிக்கப்ப்ட்டதாகவும் எஞ்சியிருந்த 25 சதவ்த போரை வென்றதே, மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் என்றும் அண்மையில் உரிமை கோரியிருந்தார் சந்திரிகா குமாரதுங்க. தனது அரசாங்கம் பதவியிலிருந்தபோதே, போர் வெற்றிக்கான அடித்தளம் அமைக்கப்பட்டது என்பது அவரது வாதம். அது உண்மையான கருத்தும்கூட. ஆனால், அவர் கூறும் சதவீதக் கணக்கு எந்தளவுக்கு சரியானது என்று தெரியவில்லை.

சந்திரிகா குமாரதுங்க, அரசாங்கத்தில் இணைந்துகொண்ட ஜாதிக ஹெல உறுமயவும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை நடத்துவதில் உறுதியாக இருந்தது.

மக்கள் விடுதலை முன்னணியுடன் (ஜே.வி.பி.) சேர்ந்து, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை உருவாக்கி, ரணில் விக்ரமசிங்க கையிலிருந்து ஆட்சியை மீண்டும் கைப்பற்ற வழி வகுத்தது ஜாதிக ஹெல உறுமய. இந்த முயற்சியில் ஜாதிக ஹெல உறுமய ஈடுபட்டமைக்கு ஒரே காரணம் போர் நிறுத்த உடனபாட்டை கிழித்தெறிந்துவிட்டு, போரை மீண்டும் ஆரம்பித்து புலிகளை முற்றாக அழிப்பதே. இந்த எழுச்சியின் விளைவாகவே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உருவெடுத்திருந்தார்.

போரை முடித்துவைக்க நடவடிக்கை எடுக்குமாறு தாமே அவருக்கு அழுத்தங்களை கொடுத்ததாக அண்மையில் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் செயலாளர் சம்பிக்க ரணவக்க உரிமை கோரியிருந்தார.

சிங்கள பௌத்த தேசியவாத சக்திகளை ஒன்றுதிரட்டி போரை நிறுத்த வைக்க மேற்கொள்ளப்பட்ட உள்நாட்டு, வெளிநாட்டு முயற்சிகள் அனைத்தையும் தடுத்து நிறுத்தியதில் ஜாதிக ஹெல உறுமயவுக்கு உள்ள பங்கை குறைத்து மதிப்பிட முடியாது.

அதேவேளை, போருக்கு தலைமை தாங்கி, வியூகங்களை வகுத்து வெற்றியை கையில் பெற்றுக் கொடுத்தவர் சரத் பொன்சேகாவே. அவரது தலைமைத்துவம், இலங்கை இராணுவம் வரலாற்று வெற்றியை பெறுவதற்கு காரணமாக இருந்தது. அதனாலேயே, வெறும் அரசியல் தலைமைத்துவத்தினால் போர் வெற்றி கொள்ளப்படவில்லை. இராணுவத்தினரின் அர்ப்பணிப்புடன் தனது போர் வியூகங்களும் போர் வெற்றிக்கான காரணங்கள் என்று சரத் பொன்சேக உரிமை கோரியிருந்தார். அத்துடன், போரின்போது, படையினர் எந்தக் குற்றங்க ளிலும் ஈடுபடவில்லை. போர்க்குற்றச்சாட்டு படையினர் மீது சுமத்தப்படுமானால், அதற்காக தான் மின்சாரக் கதிரையில் அமரவும் தயார் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

ஒரு பக்கத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தன்னை போர்க்குற்றச்சாட்டில் சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தி, மின்சாரக் கதிரையில் அம்ரவைக்க முயற்சிகள் நடப்பதாக புலம்புகிறார்.

இன்னொரு பக்கத்தில் சரத் பொன்சேகாவோ போர்க்குற்றம் சுமத்தப்பட்டால், தான் மின்சாரக் கதிரையில் அமரத் தயார் என்கிறார். ஆக, இப்போது போர் வெற்றிக்கு உரிமை கோரும் போர் மட்டும் நடக்கவில்லை, மின்சாரக் கதிரையில் அமர்வதற்கான போட்டியும் கூட நடக்கிறதா என்ற கேள்வியும் எழுகிறது.

வெற்றி கொள்ளப்பட்ட ஒரு போருக்காக பல தரப்புகளும் உரிமை கொண்டாடுகின்ற நிலையில், போர் வெற்றிக்கான உரிமை முழுவதும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கே என்று கோட்டபாய ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

பதவி ஏற்றவுடனேயே போரை முடிக்க அவர் திட்டமிட்டு செயற்பட்டதாகவும் இந்தியாவின் ஆதரவை பெற்றுக்கொண்டு அதற்கான நடவடிக்கைகளை மஹிந்த ராஜபக்ஷ மேற்கொண்டதாகவும் அவர் கூறியிருக்கிறார். இவையெல்லாமே சிங்கள பௌத்த வாக்காளர்களின் ஆதரவை பெறுவதற்கான முயற்சிகளே.

போர் வெற்றியை முன்னிறுத்தி தமிழர்களிடம் வாக்கு கேட்க முடியாது. சிங்கள மக்களின் வாக்குகளை அள்ளுவதற்காகவே போர் வெற்றியை அரசு மூலதனமாக்கியுள்ளது. இந்தச் சூழலில், சிங்கள மக்களிடையே ஒரு குழப்பம் ஏற்படப்போவது உறுதி. அதாவது, உண்மையில் போரை வெற்றி கொண்டது யார் என்பதே அது:

இந்தக் கேள்விக்கான விடையை தேடுவது பலருக்கும் குழப்பம் நிறைந்ததொரு விடயமாகவே இருக்கும். அதுவும், போருக்கு பின்னர், வாக்களிக்கத் தகுதி பெற்ற இளம் வாக்காளர்களுக்கு இதுவொரு குழப்பம் நிறைந்த கேள்வியாகவே இருக்கும். போர் வெற்றி என்பது இந்தத் தேர்தலில் எந்தத் தரப்புககும் மிகப்பெரியளவில் கைகொடுக்குமா என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

இந்தியாவில் காங்கிரஸ் கட்சி, இன்னமும் நாட்டுக்கு சுதந்திரம் பெற்றுக்கொடுத்தது தாமே என்று கூறியே இன்றுவரை வாக்கு கேட்கிறது. அதுபோலவே, இலங்கையிலும் எத்தனை காலம் சென்றாலும், போர் வெற்றியை வைத்து வாக்கு கேட்கும் பழக்கம் மாறப்போவதில்லை.

அரசியல் கட்சிகள் இவ்வாறு பிரசார உத்தியை பயன்படுத்தினாலும், இதையெல்லாம் எதிர்கால வாக்காளர்கள் பெரியதொரு விடயமாக கருதுவார்களா என்பது சந்தேகமே.

*-கே. சஞ்சயன்-*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.க கூட்டணியின் எதிரணியே புனித பாப்பரசரை வரவேற்குமாம்

## சுஜீவ எம்.பி.நம்பிக்கை

**பரிசுத்த பாப்பரசரின் பைலும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் இருப்பதால் அவர் நிச்சயமாக இலங்கை வருகை தருவார். அவரது வருகையின் போது ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதானமாகக் கொண்ட கூட்டணியின் ஜனாதிபதியே அவரை வரவேற்பது உறுதி என ஐக்கியதேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.**



இந்நாட்டில் சர்வாதிகாரத்தை ஒழித்துக்கட்டுவதற்கும் ஜனநாயகத்தை நிலைப்படுத்துவதற்கும் ஊழல் மோசடிகளை இல்லாதொழிப்பதற்கும் என நாட்டு மக்கள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமது வாக்குகளைப் பயன்படுத்த வேண்டுமென கேட்டுக்கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற அமர்வின்போது கொண்டு வரப்பட்ட விஷேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கட்டளைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அரசாங்கத்தில் இருப்போர் தற்போது எதிர்க்கட்சியின் பக்கம் வந்து கொண்டிருக்கின்றனர். இப்போது எதிர்க்கட்சியின் பலம் அதிகரித்து வருகிறது. அந்த வகையில ஜனாதிபதித் தேர்தல் இடம் பெறுவதற்கு முன்பதாக அமைச்சர் வாசுதேவ நாணயக்கார நல்லதொரு தீர்மானத்திற்கு வருவார் என்று நாம் நம்புகிறோம்.

ஏனெனில் அவர் நேர்மை யானவரும் அதேநேரம் தமது கடமையைச் சரிவரச் செய்பவருமாக இருக்கிறார். அத்துடன் அவர் முதுகெலும்புள்ளவராக செயற்பட வேண்டும் என்பதையே விரும்புகிறோம்.

நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் நாமே வெற்றி பெறுவோம். அதன்பின்னர் எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராவது உறுதியாகும்.

தேர் தலில் யார் வெற்றி பெறறாலும் இங்கு சட்டம் என்பது யாவருக்கும் சமமாக இருக்க வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்களே இன்று அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருக்கின்றனர். ஆனா லும் அரசாங்கத்தில் இருக்கும அமைச்சர்கள் சொலல முடியாத பிரச்சினைகளுக்குள் ளாகியிருக்கின்றனர்.

பரிசுத்த பாப்பரசர் முதலாம் பிரான்சிஸ் நிச்சயமாக இலங்கைக்கு வருகை தருவார்.

அவர் நிச்சய மாக இலங்கைக்கு வருகை தருவார் என்பதற்கும் காரணம் உள்ளது. அதாவது பரிசுத்த பாப்பரசரின் பைலும் ஜனாதிபதி மகிந்தவிடம் இருக்கின்றது. ஆகையினால் அவர் நிச்சயம் வருவார்.

பரிசுத்த பாப்பரசர் இலங்கைக்கு வருகை தரும்போது ஜனவரி மாதம் ஒன்பதாம் திகதி வெற்றி வாகை சூடியிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியை பிரதானமாகக்கொண்ட கூட்டணியின் ஜனாதிபதியே வரவேற்கப்போகிறார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# அரசுடன் இணைந்து கொள்பவர்கள் துரோகிகளாகவே கருதப்பட வேண்டும்

அரசாங்கத்துடன் இணைந்து கொள்பவர்கள் துரோகிகளாகவே கருதப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக்க பத்திரண தெரிவித்துள்ளார். திஸ்ஸ அத்தநாயக்க சுகாதார அமைச்சராக தெரிவு செய்யப்பட்டமை தொடர்பில் ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைக் தெரிவித்தார். எதிர்க்கட்சி யிலிருந்து ஆளும் கட்சியில் இணைந்து கொள்பவர்கள் பதவி, பணம் மற்றும் ஏனைய வரப்பிரசாதங்களை பெற்றுக் கொள்ளும் நோக்கில் இணைந்து கொள்கின்றார்கள்.

இவர்கள் வரலாற்றில் குப்பைத் தொட்டிக்குள் கிடப்பார்கள். ஆளும் கட்சியிலிருந்து எதிர்க்கட்சியில் இணைந்து கொள்பவர்கள் பதவி, வரப்பிரசாதங்கள் உள்ளிட்ட அனைத்தையும் தியாகம் செய்து கொள்கைகளை முன்னிலைப்படுத்துகின்றார்கள். (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்


| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 150 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 350 | 400 |
| தக்காளி | 140 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 30-35 | 40 |
| கோவா | 140 | 150 |
| கரட் | 160 | 200 |
| பூசணி | 40 | 40 |
| புடோல் | 60 | 140 |
| வாழைக்காய் | 60-70 | 100 |
| சின்ன வெங்காயம் | 60-110 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 110 |
| பாகற்காய் | 200 | 350 |
| வெண்டிக்காய் | 100-140 | 150 |
| கருணைக் கிழங்கு | 40-50 | 60 |
| பயற்றங்காய் | 270 | 280 |
| லீக்ஸ் | 230 | 250 |
| பீற்றூட் | — | 160 |
| கறிமிளகாய் | 200 | 350 |
| முருங்கைக்காய் | — | 500 |
| போஞ்சி | 220 | 220 |
| கத்தரிதம்புள்ள | — | 140 |
| கீரை - 1 பிடி | 10-25 | 50 |
| தேசிக்காய் | 50-80 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 |
| இராசவள்ளி | 150 | 150 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 222


மது மதுரமி





அன்ரன் ஜேயூசன்




சதீஸ் சியானி




கனகரத்தினம் கீர்த்தனா




சியாமி சியாமினி

இப்படியானவொரு சீற்பெலிற்றை கண்டு பிடித்தால், 45% விபத்துக்களை ஏற்படாமல் தவிர்க்கலாம்



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார சீர்கேடான முறையில் உணவகத்தின் புறச் சூழலுள்ளது



(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபைக்குட்பட்ட கிளிநகர்-திருநகர் வீதிக்கு அண்மையாக நீண்ட நாட்களாக உணவகம் ஒன்றின் கழிவு நீர் தேங்கி நிற்பதால் துர்நாற்றம் வீசுவதோடு நுளம்பு பெருக்கெடுக்கும் நிலையும் காணப்படுவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

அவ்விடம் கழிவு நீர்தேங்கி நிற்பதால் சுகாதார சீர்கேடு ஏற்பட வாய்ப்புள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

நீண்ட நாட்களாக கழிவு நீர் தேங்கி நிற்பதால் அப்பகுதியிலுள்ள வியாபார நிலையங்களும் தரித்து நிற்கும் முச்சக்கரவண்டி சாரதிகளும் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகுவதாக தெரிவிக்கின்றனர்.

இதேவேளை உருத்திரபுரம், ஜெயந்திநகர் ஆகிய கிராமங்களுக்கு செல்லும் பொது மக்கள் குறித்த பகுதியில் தரித்து நின்றே பேருந்துகளில் பயணத்தை தொடர்கின்றனர்.

இக் கழிவு நீர் தேங்கி நிற்கும் இடத்திற்கு அண்மையாக் கரைச்சி பிரதேச சபையின் அலுவலகம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனவே டெங்கு நோயின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்களும் பயணிகளும் வேண்டுகோள் விடுக்கின்றனர். (2-277)




## மகியங்கனை வாகன விபத்தால்

# மூன்று பிள்ளைகளின் தந்தையின் உயிர் பிரிந்தது;ஒருவர் படுகாயம்

(கிளிநொச்சி)

தம்புள்ள சந்தையில் மரக்கறி வகைகளைக் கொள்வனவு செய்து கொண்டு கிளிநொச்சி நோக்கி பயணித்த கன்டர் ரக வாகனமும் தம்புள்ள நோக்கி பயணித்த இராணுவ பேருந்தும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்ததுடன் மற்றையவர் படுகாயமடைந்த நிலையில் மகியங்கனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். கன்டர் ரக வாகனம் பலத்த சேதத்திற்குள்ளானது.

இவ்விபத்தில் கன்டர் வாகனத்தில் பயணித்த மூன்று பிள்ளைகளின் தந்தையான சந்திரகுமார் பாஸ்கரன் (வயது-42) அவ்விடத்தில் உயிரிழந்ததுடன் உதவியாகச் சென்ற இரு பிள்ளைகளின் தந்தையான இராமசாமி லிங்கேஸ்வரன் (வயது-32) படுகாயமடைந்தவராவார்.


இச்சம்பவம் நேற்று முன்தினமிரவு 7 மணியளவில் மகியங்கனை-மருதுங்கடவல பகுதியில் இடம்பெற்றது.

குறித்த கன்டர் ரக வாகனம் கிளிநொச்சி நோக்கி பயணித்துக் கொண்டிருந்த வேளை அதே பாதையில் எதிரே வேகமாக பயணித்த இராணுவப் பேருந்து நேருக்கு நேர் மோதிக் கொண்டதனாலேயே இவ்விபத்து சம்பவம் நேர்ந்தது. இதன்போது காயமடைந்தவர் மகியங்கனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் அநுராதபுரம் வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

தகவல் அறிந்த கெக்கிராவ பொலிஸார் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு விரைந்து மேலதிக விசாரணையினை மேற்கொண்டனர். (2-254-271)

# சிறந்த சமூக சேவைகளில் ஈடுபட்ட மாற்றுத்திறனாளிகள் கௌரவிப்பு



(கிளிநொச்சி)


வடமாகாணத்திலுள்ள 33 பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்தும் சிறந்த சமூக சேவைகள் செய்த தலா ஒவ்வொரு மாற்றுத்திறனாளி தெரிவு செய்யப்பட்டு கைதடி நவீல்ட் பாடசாலையில் வைத்து அண்மையில் சிறப்பு பரிசில் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

இதேவேளை மாவட்ட ரீதியாக மாற்றுத்திறனாளிகளிடையே நடததப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. இதன்போது மாற்றுத்திறனாளிகள், மாற்றுத்திறனாளிகள் சங்கங்கள் ஆகியன ஒழுங்குசெய்த கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.போதனா வைத்தியசாலை பிரதிப்பணிப்பாளர் கே.நந்தகுமார் கலந்துகொண்டு சிறப்பித்தார். சிறப்பு விருந்தினர்களாக யாழ். தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் ஆ.ரவீந்திரன், கைதடி நவீல்ட் பாடசாலை அதிபர் வி.எஸ். மகேந்திரன், நல்லூர் இந்து தமிழ் கலவன் பாடசாலை அதிபர் ந.சத்தியபாலன், குடும்ப புனர்வாழ்வு நிறுவனத்தின் வட மாகாண இணைப்பாளர் வி.பிறேம்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வட மாகாணத்தின் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் சமூக சேவைகள் அலுவலர்கள எனப் பலரும் பங்குபற்றியிருந்தனர். வட மாகாணத்தின் அனைத்து பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள், மாற்றுத்திறனாளிகள் சங்கங்கள் ஏற்பாட்டாளர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட வாகனங்களில் வரவழைக்கப்பட்டு நிகழ்வுகளில பங்கேற்றிருந்தனர். (2-254)

# வ.மா.சபை உறுப்பினரின் நிதியொதுக்கீட்டில் பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள்



கிளிநொச்சி வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதனின் பிரமாண அடிப்படையில் குறித்தொதுக்கப்பட்ட நிதியிலிருந்து 26 பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை. தவநாதனின் 2014 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட 40 இலட்சம் ரூபா நிதியிலிருந்து 10 இலட்சம் ரூபாவுக்கு இந்த வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதனை தவிர எஞ்சிய தொகை பாடசாலைகள், விளையாட்டுக் கழகங்கள், மக்கள் அமைப்புகள், ஆலயங்கள் என்பவற்றின் முன்னேற்றத்திற்காகவும், உட்கட்டுமான பணிகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் நேற்று முன்தினம் வாழ்வாதார உதவிக்காக தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் தங்களின் தொழில் நடவடிக்கைகளுக்கு அமைய உதவி திட்டங்களை பெற்றுக் கொண்டனர். அதனடிப்படையில் நீர் இறைக்கும் இயந்திரம், நீர் இறைக்கும் மின்சார இயந்திரம், தெளிகருவி, தச்சு தொழில் உபகரணங்கள், வெதுப்பக தொழில் உபகரணங்கள், குளிர்சாதனப்பெட்டி, கணனி, கூடுகளுடன் கோழிகுஞ்சுகள், கறவை மாடு போன்ற வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன. இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன், கண்டாவளை கால்நடை மருத்துவர் கஜரஞ்சன், ஆசிரியர் விஜயகுமார், கிளிநொச்சி விவசாயத் திணைக்கள பாடபோதனாசிரியர் ஜெயராஜா, தொழில் திணைக்கள உத்தியோகத்தர், பயனாளிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (2)

# சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடும் நபர்களை அடையாளப்படுத்துவோரை காட்டிக் கொடுக்கோம்

## கிளிநொச்சி மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

சட்டவிரோத செயல்களில் ஈடுபடுபவர்களை பொதுமக்கள் பொலிஸாருக்கு அடையாளப்படுத்தி தரும் போது, அடையாளப்படுத்தும் பொதுமக்களை பொலிஸார் காட்டிக் கொடுப்பதில்லை என கிளிநொச்சி மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் எட்மன் மகேந்திரா நேற்று முன்தினம் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் தர்மபுரம், பிரமந்தனாறு, பரந்தன், திருநகர், அக்கராயன்குளம், வட்டகச்சி, ஊரியான் போன்ற கிராமங்களில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி, விற்பனை ஆகியன அதிகரித்த நிலையில் காணப்படுகின்றன.

இவ்வாறு சட்டவிரோத செயல்களில் ஈடுபடுபவர்களை பொலிஸாருக்கு தாங்கள் அடையாளப்படுத்தி காட்டும் போது, பொலிஸார் குற்றவாளிகளிடம் இவர்கள் தான் உங்களை அடையாளப்படுத்தினார்கள் என அடையாளப்படுத்தியவர்களை காட்டிக் கொடுப்பதாக பொதுமக்கள் குற்றஞ்சாட்டியிருந்தனர்.

இது தொடர்பில் அவர் தொடர்ந்து கூறுகையில்,

சட்டவிரோத செயல்களில் ஈடுபடுபவர்கள் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுப்பதில் பொலிஸார் அதிக கவனம் செலுத்தி வருகின்றனர்.

சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களை பொதுமக்கள் எங்களுக்கு அடையாளப்படுத்தி தரும் போது, அடையாளப்படுத்தி தருபவர்களை நாங்கள் ஒருபோதும் காட்டிக் கொடுக்க மாட்டோம். அவ்வாறானதொரு சம்பவம் இதுவரையில் இடம்பெற்றிருக்கவில்லை.

கிளிநொச்சி மாவட்டத்தில் சட்டவிரோத நடவடிக்கைகளை குறைக்கும் நோக்குடன் பொலிஸார் சிறப்பாக செயற்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப் பிரச்சினைக்கான தீர்வு பற்றி சிந்திக்க ஜனாதிபதி வேட்பாளர்கள் தயாராக இல்லை

## மாற்று அரசியல் குறித்தே சிந்திக்க வேண்டும் என்கிறது மாக்சிச லெனினிசக் கட்சி

எதிர்வரும் ஜனவரி 8ஆம் திகதி நடைபெற இருக்கும் ஜனாதிபதித் தேர்தல் நாட்டுமக்கள் மீது பலவந்தமாகத் திணிக்கப்பட்டுள்ளள காலத்திற்கு முந்தியதொரு தேர்தலாகும். ஆயிரத்து 50 கோடி ரூபாய்களுக்கு மேல்மக்களது வரிப்பணத்தை விழுங்கி நிற்கும் இத்தேர்தல் மகிந்த ராஜபக்ஷ 3ஆவது தடவையாகவும் நிறைவேற்று அதிகாரத்தை கைப்பற்றித் தமது குடும்ப சர்வாதிகார ஆட்சியையும் தொடர்வதற்காகவே, நடத்தப்படுகிறது.

இத்தேர்தல் மூலம் நாடும் மக்களும் எதிர்நோக்கி நிற்கும் அடிப்படைப்பிரச்சினையான பொருளாதார நெருக்கடிகளுக்கோ அன்றி பிரதான பிரச்சினையாக நீடித்துவரும் தேசிய இனப்பிரச்சினைக்கோ தீர்வு ஏற்படப்போவதில்லை. வழமை போன்றுதான் தேர்தல்கள்மூலம் மக்களை ஏமாற்றி திசை திருப்பி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு தரகு முதலாளித்துவ பேரினவாத ஆளும் வர்க்க சக்திகளுக்கிடையிலான போட்டியாகவே இத்தேர்தல் நடைபெறுகிறதுஎன்ற உண்மையினை எமது புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி சுட்டிக்காட்டுகிறது. அதே வேளை நாட்டின் பொருளாதார அரசியல் சமூகப் பண்பாட்டுத் தளங்களில் மாற்று அரசியல் சிந்தனைகள் உருவாக்கப்படுவதற்கும் முன்னெடுக்கப்படுவதற்கும் மக்கள் சிந்தித்து செயலாற்றவேண்டும் எனவும் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இவ்வாறு ஜனாதிபதித் தேர்தல் பற்றி புதியஜனநாயகமாக்சிசலெனினிசக் கட்சியின் மத்திய குழு சார்பாக பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவ்வறிக்கையில், கடந்த 26 வருடகால நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையின் கீழ் நாட்டின் பொருளாதாரமானது தாராளமயம், தனியார்மயம், உலக மயமாதல் என்பனவற்றின் கீழேயே முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளது.

இதன்மூலம் உள்நாட்டு தரகு முதலாளிகளும் அந்நியப் பல்தேசிய கம்பனிகளுமே வளம் பெற்று வந்துள்ளன. பெரும் பணக்காரர்கள் மென்மேலும் பணக்காரர்களாகி வந்துள்ளனர்.

அதேவேளை உழைக்கும் மக்களின் வாழ்க்கை நிலை கீழ் நோக்கி மோசமடைந்து வந்துள்ளதுடன் அந்நிய ஏகாதிபத்திய பல்தேசிய கம்பனிகளும் பெரு வணிக நிறுவனங்களும் மக்களின் உழைப்பையும் நாட்டின் வளங்களையும்சூறையாடிக் கொள்ளையிட்டு வருகின்றன என அவர் தனது அறிக் கையில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)





தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் ,லண்டன் கிளை முக்கியஸ்தரான ஐ.தி.சம்பந்தன் எழுதிய நீங்காத நினைவுகள் நூல் அண்மையில் யாழ்.இலங்கைவேந்தன் கலைக்கல்லூரியில் யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறைத்தலைவர் பேராசிரியர்.க.தேவராஜா தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா கலந்து கொண்ட அதேவேளை வடமாகாணசபை உறுப்பினர்களான த. சித்தார்த்தன், பா.கஜதீபன் ஆகியோர் கலந்துகொண்டனர். ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் வழங்கியதுடன், வரவேறபுரையை பண்டிதர் க.வேலாயுதபிள்ளை நிகழ்த்தினார். கவிஞர் சோ.பத்மநாதன் நூலுக்கான ஆய்வுரையை நிகழ்த்தியதுடன், வெளியீட்டுரையை கலாநிதி வீரமங்கை யோகரட்ணம நிகழ்த்தியிருந்தார்.

# மகிந்தவை வெளியேற்றுவோம்

பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன வெற்றியீட்டியதன் பின்னர், அலரிமாளிகையை சுற்றி வளைத்து மகிந்த ராஜபக்சவை வெளியேற்றுவோம் என புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

மைத்திரிபாலவிற்கும் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவிற்கும் இடையில் மிக நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது.

ஒருவருக்கு ஒருவர் நல்ல நம்பிக்கையுடன் செயறபடுகின்றனர். எனவே, மைத்திரிபால வெற்றியீட்டினால் ரணிலுக்கு பிரதமர் பதவி வழங்கப்படும் என்றே எதிர் பார்க்கின்றேன்.மைத்திரிபால சிறிசேன ஓர் புரட் சியாளராகவே செயறபட்டு வரு கின்றார்.

ஏகாதிபத்தியவாதத்திற்கு எதிராக போராடப் போவதாக மைத்திரிபால தெரிவிக்கின்றார்.

வெற்றியீட்டியதன் பின்னர் மக்களுடன் இணைந்து அலரி மாளிகையை சுற்றிவளைத்து மகிந்தவை வெளியில் எடுப்பேன் என மைத்திரிபால குறிப்பிடுகின்றார்.

மைத்திரிபாலவின் இந்தக் கருத்து மிகவும் முக்கியமானது. தேர்தலின் பின்னர் மைத்திரிபால மாற்றங்களைச்செய்வார்என நம்புகின்றோம் என விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்று ரணிலுக்கு பிரதமர் பதவி வழங்கப்படுவது குறித்து எழுப்பிய கேள்விக்கு அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-5)

# அரச அதிகாரிகளினால் தொடர்ந்து புறக்கணிக்கப்படும் பெண்களை தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்கள்

யாழ்.மாவட்டத்தில்அரச அதிகாரிகளாலும் அரசியல்வாதிகளாலும் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வரும் பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட 3 ஆயிரம் குடும்பங்களில் வாழ்வாதாரம் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது என்று யாழ். மாவட்ட பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட அமரா ஒன்றியம் தெரிவித்துள்ளது.

உதவி செய்ய வேண்டிய அரச அதிகாரிகள் அவர்களை புறம் தள்ளுகிறார்கள். தஞ்சம் கோரிச் செல்லும் அரசியல்வாதிகள் அவர்களைப் பகடைக்காய்களாக பயன்படுத்துகிறார்கள் என்றும் அவ்வொன்றினையும் குற்றம் சுமத்தியுள்ளது.

யாழ். திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட அமரா ஒன்றியத்தின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்படி அமைப்பின் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் பெண்களைத் தலைமைத்துவமாகக்கொண்டு இயங்கிவரும் குடும்பங்களை ஒன்றிணைக்கும் நடவடிக்கையில் யாழ்.மாவட்ட பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட அமரா ஒன்றியம் செயற்பட்டு வருகின்றது.

இதன்படிவெளிவந்துள்ள பல்வேறு புள்ளிவிபரங்களின் அடிப்படையில் யாழ்.மாவட்டத்தில் மட்டும் பெண்களைத்தலைமைத்துவமாகக்கொண்ட 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் உள்ளன. இக்குடும்பங்கள் அனைத்தும் வாழ்வாதார ரீதியில் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

சமுர்த்தி, பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வழங்கப்படும் சிறு வாழ்வாதார உதவிகள் கூட இக்குடும்பங்களுக்கு வழங்குவதில் பல காரணங்களை முன்வைத்து பாரபட்சம் காட்டப்படுகிறது.

குறிப்பாக ஆளும் அரசியல் கட்சியின் சார்பில் கிராமங்கள் தோறும் உள்ள உறுப்பினர்கள் மூலமே அரசாங்கத்தினால் வழங்கப்படும் உதவித் திட்டங்களுக்கு பயனாளிகள் தெரிவு செய்யப்படுகின்றனர். அவ்வுறுப்பினர்கள் தமது கட்சி, உறவினர்கள் மற்றும் நண்பர்கள் சார்ந்தவர்களுக்கேமுன்னுரிமைவழங்குகிறார்கள்.

உண்மையிலேயே பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு அவ்வுதவிகள் சென்றடைவதில்லை. சுயதொழில் முயற்சி என்று பொருத்தமான உதவிகளை அவர்கள் வழங்குவதில்லை. குறிப்பாக இருப்பதற்கு குடிசை கூட ஒழுங்காக இல்லாதவர்களுக்கு வாழ்வாதார உதவியாக கோழிக்குஞ்சு வழங்கினால் அவர்கள் எவ்வாறு அதனை வளர்க்க முடியும் எனவும் கேள்வி எழுப்பியுள்ளனர். (இ-5)

# 'வைத்தியவள்ளல்' அம்பிகை பாகன்

மக்கள் சேவையே மகேசன் சேவை எனும் முதுமொழிக்கு இலக்கணமாக எம்மிடையே வாழ்ந்து காட்டியவர்களும் வாழ்ந்து காட்டுபவர்களும் உள்ள போதும் அவர்கள் எல்லோரையும் விஞ்சிய விதமாய் மருத்துவத்துறையில் சுமார் நான்கரை தசாப்தங்கள் சேவையாற்றிய ஒரு பிதாமகன் பற்றியதே இக்கட்டுரையாகும்.

இலங்கையின் வடக்கே யாழ். தென்மராட்சியின் சங்கத்தானை எனும் பகுதியில் 30ஆம் திகதி நவம்பர் மாதம் 1940ஆம் ஆண்டு சங்கரப்பிள்ளை அன்னப்பிள்ளை எனும் நற்தம்பதியினரின் மகனாய்ப்பிறந்த நன்மகன் அம்பிகைபாகன் எனும் மருத்துவ வள்ளலின் வாழ்வும் வளமும் பற்றிய மனப்பதிவுகளே இவை. இவர் தனது ஆரம்பக்கல்வியை சாவகச்சேரி இந்துஆரம்பப்பாடசாலையிலும் 1952ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து யாழ்ப்பாணம் ஸ்ரான்லி கல்லூரியிலும் கற்றுத்தேறி 1963ஆம் ஆண்டு கொழும்பு மருத்துவக்கல்லூரிக்கு தெரிவு செய்யப்பட்டார்.

2000 ஆம் ஆண்டின் காலப்பகுதியில் நடைபெற்ற யுத்த உச்சத்தின் போதும் பளை வைத்தியசாலையில் மெழுகுதிரியுடனும் குப்பி விளக்குடனும் இருந்து நோயாளர்களை பார்வையிட்டு சிகிச்சை செய்து பளை பிரதேச மக்களின் மனதில் நீங்கா இடம் பெற்றார். பச்சிலைப்பள்ளி இடப்பெயர்வில் இறுதி மனிதனாக வெளியேறிய பெருமை கொண்டவராக விளங்கினார்.

அதற்கு மேல் நேர்மையின் சிகரச்சான்றாக இவருடைய சேவைக் காலத்தில் 1996-2000 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ். குடா நாட்டு வைத்தியசாலைகளில் மருந்து தட்டுப்பாடு நிலவிய போது பளை வைத்தியசாலையில் போதியளவு மருந்துகள் கையிருப்பில் இருந்தமை குறிப்பிடத்தக்கது. யாழ், சாவகச்சேரி வைத்தியசாலைகளில் குறிப்பிட்ட மருந்துவகைகளுக்கான சிட்டைகள் எழுதி நோயாளர்கள் பளைக்கு வந்து ஐயாவிடம் மருந்து வாங்கிச் சென்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

சூழ்நிலையை காரணம் காட்டாதே, சந்தர்ப்பத்தை உனக்கு ஏற்றதாய் மாற்று எனும் நெப்போலியனின் கருத்துக்கு செயல்வடிவம் கொடுக்கும் வகையில் தன்னுடைய இயலாமையை விலக்கி இன்று தனது 74 வயதிலும் மக்களுக்கு சேவை செய்ய முனையும் மனிதமும் இம் மண்ணில் உலாவுவதை இட்டு நாம் பெருமிதம் கொள்ள வேண்டும். மனப்பூர்வமாக கௌரவிக்க வேண்டும். இதற்கு ஏற்றால் போல் வாழும் காலத்திலேயே இவ்வாறான தன்னலமற்ற சேவையாளர்களை கௌரவிப்பதற்கு தென்மராட்சியில் சமூகநலன் நோக்கிய குழுமம் ஒன்றினால் இன்று அதாவது 14.12.2014 ஞாயிற்றுக்கிழமை அம்பிகைபாகன் எனும் இந்த அவதாரபுருசருக்கு தென்மராட்சி மண்ணில் கலாசார மண்டபத்தில் விழா எடுத்து வைத்தியவள்ளல் எனும் விருதினை வழங்கவுள்ளமை போற்றுதற்குரிய நற்பணியாகும் என்றால் அதற்கு மாற்றுக்கருத்து இருக்க முடியாது. அம்முயற்சியின் காரணகர்த்தாக்களை நாமும் நன்றி உணர்வுடன் பாராட்டுகின்றோம்.

தி.அபராஜிதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிகள் ஆக்கிரமிக்கப்படுவதை தடுத்து நிறுத்த தமிழ் மக்கள் தத்தமது காணிகளில் குடியேற வேண்டும்

## ஆனந்தன் எம்.பி. வேண்டுகோள்

(குருமன்காடு)

**காணிகள் ஆக்கிரமிக்கப்படுவதை தடுத்து நிறுத்த தமிழ் மக்கள் தமது காணிகளில் மீளவும் குடியேற வேண்டும். இப்போது குடியேறியுள்ளவர்கள் ஏனையவர்களையும் குடியேறுமாறு ஊக்குவிக்க வேண்டும் என த.தே.கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**



வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பட்டிக்குடியிருப்பு மற்றும் மருதோடை அ.த.க. பாடசாலைகளினதும், அக்கிராமங்களின் அபிவிருத்திச் சங்கங்களினதும் வேண்டுகோளுக்கமைய அக்கிராமங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட போரால் கடுமையாக பாதிக்கப்பட்டு வறுமை கோட்டின் கீழ் வாழும் பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு, வவுனியா ஆகிய இரு மாவட்டங்களினதும் எல்லைப் பகுதிகளை உள்ளடக்கி வெலிஓயா எனும் அங்கீகரிக்கப்படாத தனிச் சிங்கள பிரதேச செயலாளர் பிரிவை ஆளும் அரசு உருவாக்கியுள்ளது.

முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களின் எல்லைக் கிராமங்களில் பட்டிக்குடியிருப்பு உட்பட பல தமிழ் கிராமங்களும் உள்ளமையால், தமிழ் மக்களின் பூர்வீக காணிகள் சிங்கள மக்களால் அடாததாக கைப்பற்றப்பட்டு சிங்கள குடியேற்றங்கள் அதிதீவிரமாக நடைபெற்று வரும் ஆபத்தான சூழலுக்குள் தமிழ் கிராமங்கள் பலவும் சிக்கியுள்ளன.

கடந்த கால போர்ச்சூழல்கள் காரணமாக இங்கிருந்து இடம்பெயர்ந்து இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும், நாட்டுக்கு வெளியேயும் வசிக்கும் தமிழ் மக்கள் மீளவும் தத்தமது பூர்வீக காணிகளில் குடியேறாமல் அவற்றை பராமரிப்பின்றி கைவிட்டுள்ளமையே இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கை சிங்கள மக்களுக்கு வசதியாக அமைகின்றது.

எனவே காணிகள் ஆக்கிரமிக்கப்படுவதை தடுத்து நிறுத்துவதற்காக எமது மக்கள் தமது காணிகளில் மீளவும் குடியேற வேண்டும். இப்போது குடியேறியுள்ளவர்கள் ஏனையவர்களையும் குடியேறுமாறு ஊக்குவிக்க வேண்டும்.

குறிப்பாக புலம்பெயர்ந்து வாழ்பவர்கள் தமக்கு உரித்துடைய காணிகளில் தமது உறவினர்களையாவது குடியமர்த்தி அவற்றை பராமரிக்க வேண்டும்.

கடந்த கால போர்ச்சூழல்கள் காரணமாக காணிகளுக்கு காணி உரித்து பத்திரங்களை பெற்றுக் கொள்ள முடியாத சூழல் இருந்தது. காணிகளில் மீளவும் குடியேறி அவற்றை பராமரிக்கும்போது காணி உரித்து பத்திரங்களை பெற்றுக் கொள்ள முடியும்.

இன்றுள்ளதைப்போன்று அன்று கனரக வாகன வசதிகள் இருக்கவில்லை. உங்கள் பெற்றோர்கள் கைவேலை செய்து வியர்வை சிந்தி காடு வெட்டியே இந்த கிராமங்களை தோற்றுவித்தார்கள். கஷ்டப்பட்டு துபபுரவு செய்யப்பட்ட காணிகளை சிங்கள குடியேற்றங்கள் உருவாக்குவதற்கு நாம் அனுமதிக்க முடியாது.

எனவே வவுனியா வடக்கு என்று மட்டுமல்ல, வடக்கின் பல பகுதிகளிலும் தமிழ் மக்கள் தமக்கு உரித்துடைய காணிகளில் மீளவும் குடியேறி அக் காணிகள் ஆக்கிரமிக்கப்படுவதை தடுத்து நிறுத்த உதவ வேண்டும்எனவும்ஆனந்தன்எம்பி வேண்டுகோள் விடுத்துள்ளார். (2-250)






கிளிநொச்சி உருத்திரபுரம் சூழாவடியில் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் இலவச கண் பரிசோதனை நடத்தப்பட்டு குறைந்த கட்டணத்தில் மூக்குக்கண்ணாடிகள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன. இப்பிரிவிற்குட்பட்ட பொலிஸ் அதிகாரிகள் உட்பட பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (படம்:-சிவநகர் செய்தியாளர்)

## வீதி புனரமைக்கப்படாமையால் போக்குவரத்து சேவை இடம்பெறுவதில்லை-மக்கள் குற்றச்சாட்டு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட விவசாயக் கிராமங்களுக்கான போக்குவரத்து வசதிகள் எவையும் இதுவரை ஏற்படுத்தப்படாமையினால் சுமார் ஆயிரத்திற்கும் அதிகமான குடும்பங்களைச் சேர்ந்தோர் தமது அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக அம் மக்களால் தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் புத்துவெட்டுவான், ஐயன் குளம், பழைய முறிகண்டி, தேறாங்கண்டல் உள்ளிட்ட கிராமங்களுக்கான போக்குவரத்து வசதிகள் இன்மை மற்றும் பிரதான வீதி புனரமைக்கப்படாமை போன்றவற்றால் தினமும் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டு வருவதாக இக்கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக ஏ-9 வீதியின் கொக்காவில் சந்தியில் இருந்து துணுக்காய் ஆலங்குளம் சந்தி வரைக்குமான சுமார் 21 கிலோ மீற்றர் நீளமான வீதியில் பத்து கிலோ மீற்றர் வீதி மட்டுமே தற்பொழுது புனரமைக்கப்பட்டுள்ளது.

இவ் வீதியின் மிகுதி பகுதி இன்னமும் புனரமைக்கப்படாமையால் பாரிய குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது. வீதி புனரமைப்பு செய்யப்படாமையைக் காரணம் காட்டி எந்தவித போக்குவரத்துச் சேவைகளும் இடம்பெறுவதில்லை.

அத்துடன் குறித்த கிராமங்களில் வாழும் மக்கள் தமது தேவைகளை நிறைவு செய்து கொள்ள வேண்டுமாயின் சுமார் இருபது கிலோ மீற்றர் தூரத்திற்கு அப்பாலுள்ள கிளிநொச்சிக்கு அல்லது மல்லாவிக்குச் செல்ல வேண்டியுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

மேலும் இப்பிரதேசத்தில் உயர்தரப் பாடசாலைகள் இன்மையால் இக்கிராமங்களில் வாழும் மாணவர்களும் தினமும் காலையிலும் மாலையிலும் இரு வழிப் பயணமாக சுமார் 40 கிலோ மீற்றர் பயணித்து தமது பிள்ளைகள் கல்வியைத் தொடர வேண்டிய அவல நிலை காணப்படுவதாக பெற்றோரால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இவ்வாறு புத்துவெட்டு வான் கிராம அலுவலர் பிரிவில் 120 குடும்பங்களைச் சேர்ந்த 253 பேரும் பழைய முறிகண்டி கிராம அலுவலர் பிரிவில் 80 குடும்பங்களைச் சேர்ந்த 146 பேரும் ஐயன் குளம் கிராம அலுவலர் பிரிவில் 361 குடும்பங்களைச் சேர்ந்த 718 பேரும் தேறாங் கண்டல்பகுதியில்449 குடும்பங்களும் பாதிப்புக்களை எதிர் கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2)

# காடுகளில் பயன்தரும் மரங்களை தறிப்பவர்களை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்

## பொதுமக்கள் கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட யூனியன் குளம், அக்கராயன் குளம் மற்றும் நாலாம் கட்டை ஆகிய கிராமங்களிலும் பூநகரி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட முக்கொம்பன் கிராமத்திலும் உள்ள காடுகளில் பயன் தரும் மரங்கள் சட்டவிரோதமான முறையில் தறிக்கப்பட்டு வாகனங்களில் ஏற்றிச் செல்லப்படுவதாக அப்பகுதி வாழ் மக்களால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

மேற்படி கிராமங்களை அண்டிய காடுகளில் கிளிநொச்சி வனவளத் திணைக்களம் மற்றும் பொலிஸாரின் உதவியுடன் கனகபுரத்தில் அமைந்துள்ள தனியாருக்குச் சொந்தமான மரக்காலை உரிமையாளர் ஒருவரினால் பயன்தரும் மரங்கள் அனுமதி பெறப்படாமல் தறிக்கப்பட்டு வாகனங்களில் ஏற்றிச் செல்லப்படுவதாக அம் மக்களால் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை மேற்குறித்த கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் தமது வீட்டுத் தேவையின் நிமிர்த்தம் ஓரிரு மரங்களை காடுகளில் சென்று தறிக்கின்ற வேளை அவர்களை கைது செய்வதற்கு வனவளத் திணைக்களத்தினரும் பொலிஸாரும் முனைவதாக அம்மக்கள்தெரிவிக்கின்றனர்.

வனவளத் திணைக்களத்தினரிடம் அனுமதி பெறப்படாது மரங்களைத் தறிப்பது குற்றமாகும்.

அதேநேரம் வியாபார நோக்கத்திற்காக மேற்குறித்த காடுகளில் பெருமளவான மரங்களை தறித்து கொண்டு செல்கின்றபோது அதனை வனவளத் திணைக்களத்தினரும் பொலிஸாரும் ஏன் கட்டுப்படுத்த முன்வரவில்லையென பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

வடமாகாண விவசாய அமைச்சினால் கார்த்திகை மாதம் மரநடுகை மாதம் என பிரகடனப்படுத்தப்பட்டு மரங்கள் நாடளாவிய ரீதியில் விநியோகிக்கப்பட்டு வீடுகள், அலுவலகங்கள், வைத்தியசாலைகள் என பல்வேறு இடங்களில் நடுகை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

எனவே அனுமதி பெறப்படாது மரங்கள் காடுகளில் வெட்டப்படுவதை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து அவர்களை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டுமென அப்பகுதி வாழ் மக்களால் கோரிக்கை விடப்படுகின்றது. (2-277)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாக்கு மூன்று அங்குல நீளம்தான். ஆனால் அது ஆறு அடி மனிதனையும் கொன்று விடும் ஆற்றல் கொண்டது. - யப்பான் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## உஷ்! வாய்மூடி மௌனமாக இருங்கள்

## மௌனம் கலக நாஸ்தி

*24.11.2014 அன்று வெளிவந்த ஆசிரியர் தலையங்கம் சமகாலத் தேவை கருதி மீளவும் இவ்விடத்தில் ஞாபகப்படுத்தப்படுகிறது...*

2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என்ற அறிவித்தல் வெளியாகியுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவும் மைத்திரிபால சிறிசேனவும் போட்டியிடுவது உறுதியாயிற்று. பக்கவாத்தியங்களாக இன்னும் ஒரு சிலர் தேர்தல் களத்தில் குதித்து சுருதி வாசித்தாலும் மகிந்தவும் மைத்திரியுமே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இருபெரும் பாகவதர்கள் என்பது உறுதி.

இந்நிலையில் இருவரில் எங்களுக்கு நல்லவர் யாரென்று கேட்டால், காவேரிதான் சிங்காரி; சிங்காரிதான் காவேரி என்று கூறுவதைவிட வேறெதுவுமில்லை.

எதுவாயினும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன? என்பதை அறிவதில் தமிழ் மக்கள் மட்டுமன்றி சிங்கள மக்களும் மிகுந்த ஆர்வத்தோடு இருப்பர்.

இச்சந்தர்ப்பத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுக்கப் போகும் முடிவு என்ன? என்பது பற்றி நமக்குத் தெரியாதாயினும் கூட்டமைப்பு எடுக்க வேண்டிய முடிவு என்ன? என்பதை தமிழ் மக்கள் மிகத் தெளிவாகப் புரிந்து வைத்துள்ளனர்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஜனாதிபதித் தேர்தலில் யார் வெற்றி பெற்றாலும் எங்கள் நிலைமை ஒன்றுதான் என்பதில் மாற்றுக் கருத்துக்கிடமில்லை.

மகிந்த மோதகம் என்றால் மைத்திரி கொழுக்கட்டை அவ்வளவுதான். தோற்றங்கள் வேறே அன்றி உள்ளீடு ஒன்றுதான் என்பதை நாம் காலாகாலமாக அனுபவத்தில் உணர்ந்துள்ளோம்.

எனினும் இத்தகைய நிலைமைகளை உணர்ந்து கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவெடுத்ததாக கடந்த கால தேர்தல் அனுபவங்கள் நமக்கு அமையவில்லை.

எனவே, மிக விரைவில் நடக்கப் போகும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகநுட்பமாக- இராஜதந்திரத்துடன் முடிவெடுத்து அதனை அறிவிக்க வேண்டும்.

தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு இடங்கொடாமல், எவரது விருந்துக்கும் இசையாமல் தமிழ் மக்களின் நலனை மையப்படுத்தி தீர்மானம் எடுப்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலையாய கடமையாகும்.

அத்தகையதொரு தீர்மானத்தை எடுப்பதாக இருந்தால், கூட்டமைப்பு மௌனமாக இருப்பதை தவிர வேறு எந்த முடிவும் உயர்வானதாக இருக்க முடியாது.

ஆம்! எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யார் வெற்றி பெறுகிறாரோ அவரோடு எங்கள் பிரச்சினை குறித்துப் பேசுவோம். நாங்கள் யாரையும் ஆதரிக்கவுமில்லை; எதிர்க்கவுமில்லை. ஏனெனில் நீங்கள் சிங்களவர்கள். உங்களுக்கு சிங்களவரின் நலனைத் தவிர வேறு எதுவும் கிடையாது.

தமிழ் மக்களைத் துன்பப்படுத்தியவர்கள் நீங்கள். ஆகையால் ஜனாதிபதித் தேர்தல் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மௌனமாகவே இருக்க விரும்புகிறது.

மௌனம் கலக நாஸ்தி என்ற பழமொழியின் பொருள் தெரிந்த நாம், உங்களில் யாரேனும் போட்டி இடுங்கள். குத்தி முறியுங்கள். நாங்கள் பக்கம்சார மாட்டோம். அதேநேரம் தமிழ் மக்கள் மிகவும் புத்தி சாலித்தனமானவர்கள். அவர்கள் எதுசரியென்று நினைக்கிறார்களோ! அதற்கேற்றால் போல் அவர்கள் முடிவெடுப்பார்கள்.

அந்த முடிவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலையிடாது என, முடிவெடுத்து அறிவிப்பதை விட மிக உன்னதமான தீர்மானம் வேறெதுவுமாக இருக்காது. ஆகையால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த முடிவையெடுக்குமென முழுமையாக நம்புவோம்.

மாறாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முடிவு இதைவிட வேறுவிதமாக அமையுமாயின் அதற்குள் பல பரிமாற்றங்கள் நடந்துள்ளன என்றே பொருள் கொள்ளல் வேண்டும்.

# எண்ணெய்க் கலப்பு குடிநீரில் பார உலோகம் கண்டுபிடிப்பு

## ஆய்வுத் தகவல்கள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பகுதியில் எண்ணெய் கலப்புள்ள குடிநீரில் பார உலோகங்கள் இருப்பது ஆய்வுகளில் உறுதி செய்யப்பட்டுள்ளது. இதற்கு விரைவான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக வட மாகாண நீழ்வழங்கல் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

வட மாகாண முதலமைச்சர் தலைமையில் சுன்னாகம் பிரதேச சபையில் இரண்டு வாரங்களுக்கு முன்னர் கழிவு எண்ணெய் தொடர்பான பிரச்சினை கலந்துரையாடப்பட்டு இது தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்ள 18 பேர் கொண்ட ஒரு குழு உருவாக்கப்பட்டது.

இக்குழு பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் களநிலை மாற்றங்களை அவதானித்து வாராந்த கூட்டத்தில் எமக்கு தெரியப்படுத்துவார்கள். இந்த வாராந்த கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

அதில் தற்போது அப்பகுதியில் பாதிக்கப்பட்ட கிணறுகளின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதாக கூறியுள்ளார்கள். அப்பிரதேச மக்களுக்கு உடனடி தீர்வாக நீர் வழங்கலை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளோம்.

பாதிக்கப்பட்ட இடங்களில் உள்ள அனைத்து சிற்றுண்டிச்சாலைகளும் பயன்படுத்துகின்ற கிணறுகளை உடனடியாக பரிசோதனை செய்வதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு எண்ணெய்த்தொற்று இருந்தால் உடனடியாக தண்ணீர் பெறுவதற்கான மாற்று ஏற்பாடு செய்யப்படவுள்ளது.

மத்திய அரசாங்க சுற்றாடல் அதிகார சபைக்கு தெரியப்படுத்தியுள்ளோம்.

ஆசிய அபிவிருத்தி வங்கி ஊடாக ஆய்வு, சுத்திகரிப்பு, மேலதிக பல திட்டங்களுக்கு என 390 மில்லி யன் அமெரிக்க டொலர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம்.

ஆய்வு ரீதியாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மேலதிகமாக நிபுணர்கள் கொண்ட குழு ஒன்றை அமைப்பதற்கு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். அதை ஏற்றுக் கொண்டு அடுத்து வருகின்ற அமைச்சரவை கூட்டத்தில் இது தொடர்பாக ஒரு முடிவு எடுப்பதாக உள்ளேன்.

இது உடனடியாக தீர்க்கப்படக்கூடிய பிரச்சினை இல்லை. நீண்டகால நோக்கத்தில் தீர்க்கப்படவேண்டிய விடயம். ஆனால் இது போன்ற பாதிப்புக்கள் ஏற்படுத்துகின்ற திட்டங்கள் எமது பிரதேசத்தில் இனி நடைபெறகூடாது என்று அவர் தெரிவித்தார். (எ-4)


# ஒளிவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.சங்கானை வண்ணத்துப்பூச்சி சர்வதேச பாடசாலை, பண்டத்தரிப்பு மலரும் மொட்டுக்கள் பாலர் பராமரிப்பு நிலையம் ஆகிய ஆங்கில மொழி மூல பாலர் பாடசாலைகளின் ஒளிவிழாவும் முன்பள்ளிக் கல்வியை நிறைவு செய்து 2015 ஆண்டு பாடசாலைக்கு செல்லவுள்ள மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிக்கு பிரான்பற்று அருளமுதீஸ்வரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் கே.சர்வேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (இ

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை



### நல்லூரான் திருவடி

சாதனை செய்தபேர்கள்
சாகார் உலகிலெனக்
காதலுடன் சொன்னானெடி -கிளியே!
கலங்காத வீரனெடி.
சுவாமி யோகநாதன்
சொன்னதிருப் பாடல்பத்தும்
பூமியிற் சொன்னாலெடி - கிளியே!
பொல்லாங்கு தீருமெடி

# "கணக்கு பார்த்து பழிதீர்ப்பதை விடுத்து நல்ல நடத்தைகள் வழியாக பழிகளைக் குறைப்பதில் நாம் உலகை வளர்ப்போம்"

இனறு நமக்கு பைபிளின் யோவான 1:6-8,19-28 நற்செய்தியிலிருந்து தரப்படுகின்றது. இன்று திருவருகைக் காலத்தின் மூன்றாவது ஞாயிறாகும். திருவருகைக்காலம் ஆண்டவர் வருகைக்கு நம்மை ஆயத்தப்படுத்தும் காலம். அந்த அமைதியின் மன்னர் நம்மோடுதான் இருக்கிறார். அவரை வரவேற்க நாம் தயாராகும் காலம். அடுத்தவர்மீது நாம் கொண்டுள்ள அன்பில் வளர்ந்து இறை விசுவாசத்தை ஆழப்படுத்தி, இறைவனின் வாக்குறுதிகளில் நம்பிக்கையை உறுதிப்படுத்தவும், தூய ஆவியாரின் கொடைகளுக்கு இதயங்களைத் திறக்கவும் கிறிஸ்து பிறப்பு விழாவிற்கு எம்மை தயார் செய்ய இந்த திருவருகைக் காலம் உதவ வேண்டும்.


### பரமபிதா காட்டிய பாதை

இத்திருவருகைக் காலத்தில், இதயங்களிலும், குடும்பங்களிலும், இல்லங்களிலும் செப உணர்வைப் போற்றி நாம் வளர்க்க வேண்டும். இக்காலத்தில் நாம் நம் உள்ளக் கோவில்களைத் தயார்படுத்தி மகிழ்ச்சியோடு நாம் கடவுளுக்கு நன்றி கூறவேண்டும். நம்மைக் காண்பவர்கள் நாம் மகிழ்ச்சியாக இருப்பதுகண்டு தாமும் மகிழவேண்டும்.

'மனிதராய்ப் பிறந்தவர்களுள் திருமுழுக்கு யோவானைவிடப் பெரியவர் எவரும் தோன்றியதில்லை" என்று இயேசுவால் புகழப்பட்டவர் திருமுழுக்கு யோவான். பாலை நிலத்தில் ஒலித்த யோவானின் குரலைக் கேட்க மக்கள் ஓடிச் சென்றனர். மக்களை வரவழைத்து, அவர்களுக்கு நம்பிக்கையையும், நற்செய்தியையும் கூறிய யோவான், மதத் தலைவர்களையும் உரோமைய அரசையும் வன்மையாகக் கண்டித்தார். இதனால் கதி கலங்கிய மதத்தலைவர்களும், ஏரோதும் அவரைச் சிறையில் அடைத்தனர். யோவானின் உடல் சிறையில் அடைபட்டிருந்தாலும், அவர் மனம் தனது மக்களின் விடுதலையைப் பற்றியே எண்ணிக் கொண்டிருந்தது. அந்த விடுதலை, இயேசுவின் வழியே வருமா என்ற கேள்வியே இன்றைய நற்செய்தியினூடாகக் கேட்கப்படுகிறது. 'வரவிருப்பவர் நீர்தாமா? அல்லது வேறு ஒருவரை எதிர்பார்க்க வேண்டுமா? "இந்தக் கேள்வியும், இதற்கு இயேசு தந்த பதிலும் தெளிவான பல வாழ்க்கைப் பாடங்களையும் நமக்குத் தருகின்றன. பலிக்கான உலகின் செம்மறிதானே என்று மக்களுக்கு சுட்டிக்காட்டிய இயேசு, அதற்குப் பின்னர் முழு வீச்சில் பணியில் இறங்கியிருப்பார். மதத் தலைவர்களையும், உரோமை அரசையும் இந்நேரம் கதிகலங்கச் செய்தி ப்பார் என்பது அப்போது யோவானின் எதிர்பார்ப்பாக இருந்தது.

யோவானின் எதிர்பார்ப்புகளும், பணி வாழ்வு பற்றிய தனது கண்ணோட்டமும் வேறுபட்டவை என்பதைச் சொல்ல இயேசு தயங்கவில்லை. யோவான் எதிர்பார்த்த புரட்சி, ஆள்பவர்களை விரட்டி அடித்து, ஆட்சியைப் பிடித்து, மக்கள் வாழ்வை மாற்றுவது என்ற வரிசையில் அமைந்திருந்தது. இயேசுவின் புரட்சி இதற்கு நேர்மாறான, தலைகீழான புரட்சி. இந்தப் புரட்சி மக்கள் வாழ்வை மாற்றுவதிலிருந்து ஆரம்பிக்கிறது. இந்த புரட்சியைக் குறித்து இன்றைய முதல் வாசகத்தில் இறைவாக்கினர் எசாயாவும் கூறியுள்ளார்.

திடன் கொள்ளுங்கள், அஞ்சாதிருங்கள்: இதோ, உங்கள் கடவுள் பழிதீர்க்க வருவார் அநீதிக்குப் பழிவாங்கும் கடவுளாகவந்து உங்களை விடுவிப்பார் என்று எசாயா முழங்குகிறார். இறைவன் எப்படி பழிதீர்ப்பார் என்றால் அப்போது பார்வையற்றோரின் கண்கள் பார்க்கும், காது கேளாதோரின் செவிகள் கேட்கும். காலூனமுற்றோர் மான்போல் துள்ளிக்குதிப்பர். வாய்பேசாதோர் மகிழ்ந்து பாடுவர் ... அவர்கள் முகம் என்றும் மகிழ்ச்சியால் மலர்ந்திருக்கும். துன்பமும் துயரமும் பறந்தோடும். பழிதீர்ப்பது என்பதற்கு இறைவன் தரும் இலக்கணம் இது தான். அதாவது பழியை, குறையைத தீர்ப்பது என்றே இயேசு பொருள கொள்கிறார் இல்லையா?




**ம.பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**


கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்பது இன்றைய உலகில் பலரது பழிதீர்க்கும் கொள்கையாக இருக்கிறது. இதற்கு நேர்மாறாக, பழியைத் குறைக்கும்வழிகளும் உலகில் உண்டு. கண் களையும், மனதையும் திறந்து இவற்றைப் பார்க்க நாம் பழக வேண்டும் என்று இயேசு இன்றைய நற்செய்தி யில் நமக்கு அழைப்பு விடுக்கிறார். இயேசு காட்டும் வழியில் பழியைக் குறைக்க நாம் முயற்சி எடுப்போம் நம்மிடையே. கணக்குப் பார்த்து பழிதீர்க்கும் உலகை விட, நல்ல நடத்தைகள வழியாக, பழிகளை குறைப்பதில் நாம் உலகம் வளர்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாதன் லயனின் சுழலில் சிக்கி ஆஸியிடம் வாங்கியது இந்தியா







நாதன் லயனின் சுழலில் சிக்கி சின்னா பின்னமானது இந்தியா. அடிலெய்டில் நடந்த முதல் டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 48 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இந்திய-அவுஸ்திரேலிய அணிகள் மோதும் முதல் டெஸ்ட் போட்டி அடிலெய்டில் நடைபெற்றது. அவுஸ்திரேலியா முதல் இன்னிங்சில் 7 விக்கெட் இழப்புக்கு 517 ஓட்டங்கள் குவித்து 'டிக்ளேர்' செய்தது. இந்திய அணி முதல் இன்னிங்சில் 444 ஓட்டங்கள எடுத்தது.

73 ஓட்டங்கள் முன்னிலையில் 2ஆவது இன்னிங்சை விளையாடிய அவுஸ்திரேலியா 4ஆவது நாள் ஆட்டத்தின் முடிவில் 5 விக்கெட் இழப்புக்கு 290 ஓட்டங்கள் எடுத்து இருந்தது. வோர்னர் மீண்டும் சதம் அடித்தார். கரண்சர்மா 2 விக்கெட்டுகளை கைப்பற்றினார். நேற்று 5ஆவது மற்றும் கடைசிநாள் ஆட்டம் நடந்தது.

அவுஸ்திரேலிய அணி 290 ஓட்டங்களுடன் டிக்ளேர் செய்தது. இதனால் இந்தியாவுக்கு 364 ஓட்ட இலக்கு (98 ஓவர்) நிர்ணயிக்கப்பட்டது. இந்தியாவுக்கு தொடக்கமே அதிர்ச்சிகரமாக இருந்தது. ஜான்சன் ஓவரில் தொடக்க ஜோடி பிரிந்தது. தவான் 9 ஓட்டங்களில் விகெட் கீப்பர் ஹாடினிடம் 'கேட்ச்' கொடுத்து வெளியேறினார். அப்போது ஸ்கோர் 16ஆக இருந்தது.

அடுத்து களம்இறங்கிய புஜாராவும் நீண்ட நேரம் களத்தில் இருக்க வில்லை. லயன் பந்தில் அவர் 21 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார். ஸ்கோர 57ஆக இருந்தது. 3 ஆவது விக்கெட்டுக்கு முரளி விஜய்யுடன், கப்டன் விராட் கோலி ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி நம்பிகையுடன் ஆடியது. குறிப்பாக கோலி நேர்த்தியான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இந்த ஜோடியின் பொறுப்பான ஆட்டத்தால் இந்திய அணி வெற்றி பெறும் என்று எதிர்பார்ப்பு நிலவியது.

இருவரும் அதிரடியாக ஆடி தாங்கள் சதத்தை நோக்கி நெருங்கி வந்தனர். முதலில் கோலி தனது சதத்தை பூர்த்தி செய்தார். அடுத்து சதத்தை பூர்த்தி செய்வார் என்று எதிர்பார்க்கப்பட்ட விஜய் 99 ஓட்டங்களில் துரதிர்ஷ்டவசமாக 99 ஓட்டங்களில் அவுட்டானார்.

பின்னர் வந்த வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழக்க கோலி மட்டும் நம்பிக்கை தரும் வகையில் ஆடி வந்தார். இந்த நிலையில் லயன் பந்தை தூக்கியடிக்க ஆசைப்பட்டு டீப் மிட்விக்கெட் திசையில் நின்றிருந்த மார்ஷிடம் கேட்ச் கோடுத்து 141 ஓட்டங்களில் கோலி அவுட்டானார். அதன் பின் வந்த வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டங்களில் அவுட்டாகி அரங்கு திரும்ப இந்திய அணி 315 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. அவுஸ்திரேலிய அணி 48 ஓட்டங்கள வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.


அவுஸ்திரேலிய அணி தரப்பில் முதல் இன்னிங்சில் 5 விக்கெட்டுகளை வீழ்த்திய சுழற்பந்து வீச்சாளர் நாதன் லயன், இரண்டாவது இன்னிங்சிலும் 7 விக்கெட்டுகளை வீழ்த்தி அசத்தினார். இந்த வெற்றியின் மூலம் ஹியூக்ஸ் மறைவு அவுஸ்திரேலிய வீரர்களின் விளையாட்டு திறமையை பாதிக்கவில்லை என்பது நிரூபணமாகியுள்ளது குறிப்பிடத்தக்கது. இப் போட்டியின் ஆட்ட நாயகனாக அவுஸ்திரேலிய அணியின் நாதன் லயன் தெரிவானார். (க)

## இன்றைய போட்டி

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் காகில்ஸ் வெற்றிக் கிண்ண எவ் ஏ கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன. இதில் வடமராட்சி லீக்கிற்கான போட்டிகள் இடம்பெற்று வருகின்றன. சீரற்ற காலநிலை காரணமாக இடம்பெறாதிருந்த போட்டிகளின் முதல் சுற்று இன்று மீண்டும் ஆரம்பமாகின்றது. இதில் இன்று இடம்பெறும் போட்டியில் பொம்மர்ஸ் விளையாட்டுக்கழகமும் கலைமதி விளையாட்டுக் கழ்கத்திற்குமிடையிலான போட்டி இமையாணன் மத்தி விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது. (க-23)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## நியூசிலாந்து வெற்றி



பாகிஸ்தான் அணிக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் நியூசிலாந்து அணி 4 விக்கெட்டுகளினால் வெற்றி பெற்றுள்ளது.

இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டி சார்ஜாவில் நேற்று முன்தினம் பகல்-இரவு ஆட்டமாக நடந்தது.

முதலில் விளையாடிய பாகிஸ்தான் அணி 48.3 ஓவரில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 252 ஓட்டங்களை எடுத்தது.

தொடக்க வீரர் ஹபீஸ் 76 ஓட்டங்களும், அணித்தலைவர் மிஸ்பா உல்ஹக் 47 ஓட்டங்களும் எடுத்தனர்.

நியூசிலாந்து அணி சார்பாக ஹென்றி 4 விக்கெட்டுகளும், மெக்லகன் 3 விக்கெட்டுகளும், மிலின் 1 விக்கெட்டும் எடுத்தனர்.

253 என்ற வெற்றி இலக்குடன் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 46 ஓவரில் 60 விக்கெட்டுகளை இழந்து 255 ஓட்டங்களை பெற்றது. இதன்மூலம் 4 விக்கெட்டுகளால் வெற்றியை தனதாக்கியது.

வில்லியம்சன் ஆட்டமிழக்காமல் 70 ஓட்டங்களையும் டேவிச் 58 ஓட்டங்களும், பிரவுலின் 47 ஓட்டங்களும் எடுத்தனர். சொகைல் 3 விக்கெட்டுகளும், அப்ரிடி 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார்கள்.

இந்த வெற்றி மூலம் 5 போட்டிகொண்ட தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் உள்ளது, முதல் ஆட்டத்தில் பாகிஸ்தான் வெற்றி பெற்று இருந்தது. இப்போட்டியில் ஆட்ட நாயகராக நியூசிலாந்து கப்டன் வில்லியம்ஸ் தெரிவானார். (க)

## சங்கா சதம்

## இங்கிலாந்து அணியை வீழ்த்தி தொடரை வென்றது இலங்கை



இங்கிலாந்துக்கு எதிரான 6 ஆவது ஒருநாள் போட்டியில் இலங்கை அணி 90 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 6-வது ஒருநாள் கிரிக்கெட் போட்டி பல்லேகலேயில் நேற்று நடைபெற்றது. நாணயச்சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

சங்ககராவின் அசத்தல் சதத்தால் இலங்கை நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 7 விக்கெட் இழப்பிற்கு 292 ஓட்டங்கள் குவித்தது.

சங்க கராவுக்கு துணையாக டில்சான் 68 ஓட்டங்கள் எடுத்தார். இங்கிலாந்தைச் சேர்ந்த பின், வோக்ஸ், ஜோர்டான் ஆகியேர் தலா 2 விக்கெட்டுக்கள் வீழ்த்தினார் கள்.

பின்னர், 293 ஓடடங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் இங்கிலாந்து துடுப்பாட்டத்தை தொடங்கியது. அணித்தலைவர் குக் ஒரு ஓட்டத்திலும், மொயீன் அலி 34 ஓட்டங்களிலும், டெய்லர் 10 ஓட்டங்களிலும் அரங்கு திரும்பினார்கள். கடந்த போட்டியில் சதம் அடித்த ரூட் 55 ஓட்டங்கள் எடுத்து ஆட்டம் இழந்தார்.

அதன்பின் இங்கிலாந்து விக்கெட்டுக்கள் சரிய ஆரம்பித்தது. இதனால் இங்கிலாந்து 41.3 ஓவரிலே 202 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டையும் இழந்தது.

இந்த வெற்றியின் மூலம் இலங்கை 7 போட்டிகள் கொண்ட தொடரை 4-2 எனும் கணக்கில் கைப்பற்றியுள்ளது. இலங்கை தரப்பில் லக்மல் 4 விக்கெட்டும், துசனநாயக 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார்கள்.

இப் போட்டியின் ஆட்டநாயகனாக இலங்கை அணியின் குமார் சங்கக்கார தெரிவானார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாட மாளிகை...

தரமான அபிவிருத்தியை நாட்டுக்குப் பெற்றுக் கொடுப்பேன் எனவும் அவர் உறுதி யளித்தார்.

கொழும்பு - கிருலப்பனையில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்படி விடயங்களைக் கூறினார். அவர மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனக்குக் கிடைத்த மூன்றிலிரண்டு பெரும்பான்மையைக் கொண்டு நாட்டுக்கு பிரயோசனமான 17ஆவது திருத்தச் சட்டத்தை நீக்கி 18ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார். 2005ஆம் ஆண்டு அப்பாவி மகிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்கு நாம் வீதியிலேயே போராடி வெற்றியைப் பெற்றுக் கொடுத்தோம். அதன் பின்னர் 2009ஆம் ஆண்டில் விடுத லைப்புலிகள் இயக்கம் இல்லாது ஒழிக்கப்பட்ட போது பிரபாகரனைக் கொன்ற சந்தோஷத்தில் கட்சி பேதங்களை மறந்து அனைவரும் வீதியில் இறங்கி பாற்சோறு பகிர்ந்து சாப்பிட்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை மா மன் னனே என்று மக்கள் கோஷமிட்டனர். இதற்க மையவே ஜனாதிபதி மகிந்தவுக்கு தான் அரசன் ஆகவேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. இதனாலேயே 18ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இதனை சாதக மாகப் பயன்படுத்திக்கொண்டு ஊழல் மிக்க குடும்ப ஆட்சியை ஜனாதிபதி மகிந்த நடத்தி வருகின்றார். நாட்டில் நீதி செத்துவிட்டது. எனவே, நான் ஜனாதிபதியானதும் நாட்டில் ஊழல் மோசடியற்ற நீதியான ஆட்சியை நடத்து வேன் என்றார். (எ-11)

## புதிய ஆலோசகர்...

காணாமல் போனவர்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு ஆலோசனை வழங்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடந்த ஜூலை மாதம் 5 வெளிநாட்டு நிபுணர்கள் குழுவை நியமித்தார்.

ஆலோசனை குழுவின் தலைவராக சேர் டெஸ்மன்ட் டி சில்வா நியமிக்கப்பட்ட துடன் சேர் ஜெப்றி நீஸ், பேராசிரியர் டேவிட் கருரென், அவுதாஸ் கவ்சால், அஹமர் பிலால் சூபி ஆகியோர் அதில் அங்கம் வகிக்கின்றனர்.

இந்த நிலையில், ஜப்பான் நிபுணர் ஒரு வர் தற்போது நியமிக்கப்பட்டுள்ளதால், ஆலோ சனை குழுவின் அங்கத்தினர்களின் எண் ணிக்கை 6 ஆக அதிகரித்துள்ளது. (எ-11)

## காணி...

யினை பொதுத் தேவைக்கென சுவீக ரிக்க முடியுமென குறிப்பிடப்பட்டுள்ளதனா லும் இதற்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

அவ்வாறு இக்காணி சுவீகரிப்பிற்கு எதி ராக நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டாலும் நீண்டகாலத்திற்கு வழக்கு இழுபட்டு இறுதி யில் அரசிற்கு ஆதரவான தன்மையுடன்தான் தீர்ப்பு வருகின்றது.

மனிதவுரிமை ஆணைக்குழுவினை பொறுத்தவரையில் இவ் விடயத்தில் தலை யிட முடியாத நிலையே காணப்படுகின்றது என்றார். (எ-4)

## இந்துக்களை...

வடிகளில் வீழ்ந்து வணங்கி மன்றா டுவது நியாயமா? என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் கேள்வி எழுப்பினார்.

நம் நாட்டில் இந்து, இஸ்லாமிய, கத்தோ லிக்க மதங்களை பின்பற்றும் மக்களுக்கு எதிராக தீவிரவாதத்தை வளர்த்து விட்டு, பௌத்த சகோதரர்களுடன் நமக்கு இருக்கி ன்ற நல்லுறவை கெடுக்கும் தீவிரவாதிக ளுக்கு ஆசீர்வாதம் வழங்கி விட்டு, இப் போது வெங்கடாசலபதியின் அருளை கோரு வது நியாயமாகுமா? எனவும் அவர் கேள்வி யெழுப்பினார்.

கொழும்பு கிருலப்பனையில் நடைபெற்ற பொது எதிரணியின் தேர்தல் பிரசார கூட்ட த்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையி லேயே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழு ப்பினார்.

பொது வேட்பாளர் மைத்திரிபால சிறி சேன, எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரம சிங்க, எம்.பிக்கள் எரான் விக்கிரமரட்ன, ரோசி சேனாநாயக்க ஆகியோர் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் தொடர்ந்து உரை யாற்றிய மனோ கணேசன் தமதுரையில் மேலும் கூறியதாவது,

தகர்த்தெறியப்பட்ட எத்தனையோ அம் மன், சிவன், முருகன், விஷ்ணு, விநாயகர் ஆலயங்களின் பட்டியல் எங்களிடம் உண்டு. சமகாலத்தில் தம்புள்ளையிலும், கொழும்பு கொள்ளுப்பிட்டியிலும், வடக்கில் மயிலிட்டி யிலும் தகர்த்தெறியப்பட்டு காணாமல் போன ஆலய விபரங்களும் எம்மிடம் உண்டு. இவற்றை சிங்கள மக்கள் செய்வதில்லை. ஏனெனில் இந்த ஆலயங்களில் அவர்களும் வந்து வணங்குகிறார்கள். இவற்றை யார் செய்வது என்பது ஒரு பகிரங்க இரகசியம்.

எங்கள் எதிரணி கன்னி பிரச்சார கூட்டம் இம்முறை கண்டியில் நடந்தது. கடந்த 2010ம் வருட ஜனாதிபதி தேர்தல் கூட்டமும் இங்குதான் நடந்தது. கடந்த முறையை விட இம்முறை இரண்டு மடங்கு கூட்டம் வந் ததை நான் என் சொந்த கண்களால் பார்த் தேன். நாங்கள் ஒரு பஸ்ஸில் கூட ஆட்களை ஏற்றி வரவில்லை. அது கூட்டப்பபட்ட கூட்டம் அல்ல. தானாக கூடிய கூட்டம். அரசு கட்சி யின் கன்னிக்கூட்டம் அனுராதபுரத்தில் நடைபெற்றபோது, சுமார் 900 இபோச பஸ்களில் கூட்டம் கூட்டி வரப்பட்டது.

இன்று தமிழர்களின் நிகழ்ச்சி நிரலில் தனிநாடு என்ற நோக்கம் இல்லை என்று கூட்டமைப்பின் தலைவரே திரும்ப, திரும்ப சொல்லிவிட்டார். எமது நிகழ்ச்சி நிரலில் இன்று ஆயுதத்திற்கும் இடமில்லை. பின்னர் ஏன் சும்மா பூச்சாண்டி காட்டுகிறீர்கள்? தேர்தல் தொடர்பில் ... முடிவு செய்யவே இல்லை. அதற்குள் நீங்கள் புலி சாயம் பூசுகிறீர்கள்.

இந்நாட்டில் தமிழர்களும், முஸ்லிம்க ளும், சிங்கள மக்களுடன் சமத்துவத்துடன் கூடிய ஐக்கியத்துடன் வாழவே விரும்புகி றார்கள். ஆனால், இந்த அரசாங்கம் இதை விரும்பவில்லை. தமது தேர்தல் தேவைக ளுக்காக, இனவாதத்தையும், மதவாதத்தை யும் கிளப்பி விட்டு அதில் அரசியல் இலாபம் தேடும் முயற்சியில் அரசாங்கம் இறங்கியு ள்ளது. எங்களுக்கு எதிராக இனவாதம் பேசுகிறீர்கள். பிறகு எங்கள் கந்தனுக்கு காவடி தூக்கி, வெங்கடாசலபதிக்கு நமஸ் காரம் செய்கிறீர்கள். என்ன இது? எங்கள் இந்து கடவுள் என்ன? இங்கு அரசாங்க த்தில் இடம்பெற்றுள்ள ஒரு இந்து அரசியல் வாதி அமைச்சரா? இந்நாட்டிலே தொடர்ந்து நிகழ் ந்து வரும் இந்த கொடும்போக்குக்கு இனி மேல் நாம் முடிவு கட்டுவோம் என்றார். (எ-11)

# 5 ஆவது முறையாகவும் உலகக்கிண்ண தொடரில் மஹேல மற்றும் சஹிட் அப்ரிடி



உலகக் கிண்ண போட்டித் தொடர் ஒன்றில் ஐந்தாவது முறையாக மஹேல ஜயவர்த் தன, சஹிட் அப்ரிடி போன்ற அனுபவமிக்க வீரர்கள் விளையாடுவதாக ஐசிசி தெரிவித் துள்ளது.

2015ஆம் ஆண்டுக்கான உலக கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடர் பெப்ரவரி 14ஆம் திகதி தொடககம் மார்ச் 29ஆம் திகதி வரை, அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து நாடுகளில் நடைபெறவுள்ளது.


இந்த உலகக் கிண்ணத்தில் விளையா டும் மிகுந்த அனுபவம் வாய்ந்த வீரர்கள் ஜெய வர்த்தன, அபரிடி இருவரும் ஐந்தாவது முறை யாகவும் விளையாடுவதாக சர்வதேச கிரிக் கெட் சபை (ஐ.சி.சி) தெரிவித்துள்ளது.

இலங்கை அணியின் முன்னாள் அணித தலைவர் ஜெயவர்த்தனவும், பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் அப்ரிடியும் இந்த உலக கிண்ணத்துக்கான 30 பேர் கொண்ட அணியில் இடம்பெற்றுள்ளனர். இருவரும் 15 பேர் கொணட அணியிலும் இடம்பெறுவார்கள்.

இதன்மூலம் அவர்கள் ஐந்தாவது தடவை யாக உலக கிண்ணத்தில் விளையாடும் பெருமையை பெறுவார்கள்.

1999ஆம் ஆண்டு உலக கிண்ணத்தில இருந்து அவர்கள் தொடர்ந்து (2003, 2007, 2011) விளையாடி வருகிறார்கள். இதில் ஒரு முறைகூட இருவரும் தங்கள் அணிக்காக கிண்ணத்தை பெற்றுக் கொடுக்கவில்லை. இந்த முறை இருவரும் உலக கிண்ணத்தை பெற்றுக் கொடுக்கும் ஆர்வத்தில் உள்ளனர்.

பாகிஸ்தானை சேர்ந்த ஜாவிட் மியான் டாட், டெண்டுல்கர் ஆகியோர்தான் அதிகப



ட்சமாக 6 உலக கிண்ணத்தில் விளையாடி உள்ளனர். மியான்டாட் 1975, 1979, 1983, 1987, 1992, 1996 ஆகிய உலக கிண்ணத் திலும், டெண்டுல்கர் 1992, 1996, 1999, 2003, 2007, 2011 ஆகிய உலக கிண்ணத் திலும் விளையாடியுள்ளனர்.

இதில் 1992இல் பாகிஸ்தானும், 2011இல் இந்தியாவும் உலக கிண்ணத்தை வென்று இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## முஸ்லிம்...

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பேச் சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

முஸ்லிம் அமைச்சர் ஒருவருக்கு 100 ஏக் கர் காணி,

அரசாங்கத்தில் முக்கிய அமைச்சு பத வியை வகித்து வரும் முஸ்லிம் அமைச்சர் ஒருவருக்கு புத்தளம், வண்ணாத்துவில்லு பிரதேசத்தில் 100 ஏக்கர் காணியை வழங்கு மாறு அரசாங்கத்தின் உயர் அதிகாரி ஒரு வர் கடிதம் மூலம் காணி அமைச்சுக்கு உத் தரவிட்டுள்ளார்.

மேற்படி 100 ஏக்கர் காணியை சம்பந்தப் பட்ட அமைச்சர் தனது உறவினர்களுக்கு ஏற் கெனவே பகிர்ந்தளித்திருந்ததுடன் பொது மக்களின் எதிர்ப்பு காரணமாக அதனை அரசாங்கம் மீண்டும் கையகப்படுத்தியது.

இந்த நிலையில், அந்த காணியை மீண் டும் அமைச்சருக்கே வழங்குமாறு உத்தர விடப்பட்டுள்ளது. (எ-11)

## ஜூன் மாதமளவில்...

இதனடிப்படையில் நடப்பு நாடாளுமன்றம ஏப்ரல் மாத இறுதியில் கலைக்கப்பட உள்ளது.

ஜனாதிபதியாக மீண்டும் பதவியேற்றால், நாடாளுமன்றத்தை ஏப்ரல் மாதம் கலைக்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள் ளதாக அரசாங்கத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களாக பதவி வகிக்கும் புதியவர்களுக்கு ஓய்வூதியம் கிடை க்க வேண்டுமாயின் அவர்கள் 5 ஆண்டுகள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக பதவி வகித் திருக்க வேண்டும்.

இதனடிப்படையில் 5 வருடம் எதிர்வரும் ஏப்ரல் மாதமே பூர்த்தியாகிறது.

இதனால், முன்கூட்டியே நாடாளுமன்ற த்தை கலைக்கும் எண்ணம் இல்லை என அந்த பேச்சாளர் மேலும் கூறியுள்ளார்.

அதேவேளை எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன ஜனா திபதியாக தெரிவானால், தற்போதைய நாடா ளுமன்றத்தை அரசியல் அமைப்புச் சபை யாக மாற்றி, அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தங்களை செய்து, நிறைவேற்று அதி காரம் கொண்ட ஜனாதிபதி பதவியை ஒழிப் பதாக ஏற்கெனவே வாக்குறுதி வழங்கியு ள்ளார்.

இதனால், ஏப்ரல் மாதம் வரை நாடாளு மன்றம் கலைக்கப்பட மாட்டாது என்பது எதிர்க் கட்சித் தரப்பில் இருந்தும் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. (எ-11)

## கத்தோலிக்க...

ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற்று ஐந்து நாட்களுக்குப் பின்னர், புனித பாப்பரசர் பிரான்சிஸின் இலங்கைக்கான பயணம் திட்டமிடப்பட்டுள்ள நிலையில், இது குறித்து ஆயர்கள் மாநாட்டில் கடுமையான வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றுள்ளன.

... தேர்தல் எதிர்வரும் ஜனவரி மாதம் 8ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலை யில், ஜனவரி மாதம் 13ஆம் திகதி புனித பாப்ப ரசர் மூன்று நாள் பயணத்தை மேற்கொண்டு இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இந்நிலையில் தேர்தலுக்குப் பின்னர் வன்முறைகள் இடம்பெற வாய்ப்புகள் உள்ள தால், புனித பாப்பரசரின் இந்தப் பயணத்தை ஒத்திவைக்க வேண்டும் என்று கத்தோலிக்க திருச்சபையின் ஒரு பகுதியினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.


ஆனால், ஜனாதிபதித் தேர்தலில் போட்டி யிடும் இரண்டு பிரதான வேட்பாளர்களும் வன்முறைகளற்ற தேர்தல் இடம்பெறும் என்று தனக்கு உறுதி அளித்துள்ளதாக கத்தோலிக்கத் திருச்சபையின் கொழும்பு மறை மாவட்ட ஆயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கொழும்பு மறை மாவ ட்ட ஆயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் மேலும் குறிப்பிடுகையில், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இரண்டு பிரதான வேட்பாளர்க ளின் வாக்குறுதியின் மீது நாங்கள் நம்பி க்கை வைக்க வேண்டும்.

இந்தத் தேர்தலில் எவர் வெற்றி பெற்றா லும் சரி, எவர் தோல்வியுற்றாலும் சரி, இவ் விருவரும் புனித பாப்பரசரை விமான நிலை யத்தில் வரவேற்க வேண்டும் என்று ஆயர் கள் இவ்விரு வேட்பாளர்களிடம் கேட்டுக் கொண்டுள்ளனர்.

அதேவேளை, ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியுற்றால் என்ன நடக்கும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் ஆயர்கள் கேட்ட போது, வெற்றி பெற்றவரிடம் எவ்வித தயக்கமுமின்றி பதவியை ஒப்படைப்பேன் என்று அவர் பதிலளித்தார் என்று மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மரண அறிவித்தல்

## S.C. இராமகிருஷ்ணன்

(ஓய்வுபெற்ற நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

துன்னாலையை பிறப்பிடமாகவும் சாமியன் அரசடியை வசிப்பிடமாகவும் கொண்ட S.C.இராமகிருஷ்ணன் அவர்கள் நேற்று (13.12.2014) சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் செல்லையா - ஞானம்பிகை தம்பதியரின் அன்பு மகனும், சுசீலாதேவியின் அன்புக் கணவரும், தேவகி, நித்யா, அகிலா ஆகியோரின் பாசமிகு தந்தையும், விமலின் அன்பு மாமனாரும், பிரியனின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சிவமோகன், தில்லைநாதன், கந்தசாமி மற்றும் சுப்பிரமணியம், இரத்தினசோதி, நவரட்ணம், அருள்முகவரதன், நாகபூசணி, செம்மனச்செல்வதி, ஜெயலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14.12.2014) ஞாயிற்றுக்கிழமை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சோனப்பு இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாமியன் அரசடி,கரவெட்டி.

(சி-9375)

தகவல் : குடும்பத்தினர்
0777038156


புதிய கல்வியாண்டு
ஆரம்பத்தை முன்னிட்டு
விசேட தள்ளுபடியான விற்பனை



பாடசாலை மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகள், பயிற்சிப் புத்தகங்கள் மற்றும் அனைத்து கல்விசார் உபகரணங்களும் விசேட விலைக்கழிவுடன் விற்பனையாகின்றன.

டிசம்பர் 07ம் திகதியிலிருந்து ஜனவரி மாத வரையான அனைத்து ஞாயிற்றுக்கிழமைகளிலும் வாடிக்கையாளர் சேவை வழங்கப்படும்.

ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P-021 222 5542

(C-9372)



கலையின் உயரம் வாழ்வின் சிகரம்.

தொழில்முறைக் கலைஞராவதற்கு இதோ! ACT4 நிறுவனத்தின் ஓர் அரிய வாய்ப்பு. அரங்க ஆற்றுகைக் கலைக்கூடாக சமூக விருத்திக்குப் பங்களிக்க முனைப்புள்ள கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 19 வயது முதல் 35 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் இணைவதற்கு இடமுண்டு.

வேலைத்திட்டத்தின் அடைவு

- தேர்ச்சியுடைய வளவாளர்களின் பயிற்சி.
- நாடக அரங்கக் கலை நிகழ்வுகளில் பங்கேற்பு.
- கொடுப்பனவுகளுடன் கலைப்பணியாற்றுதல்.
- பயிற்றப்பட்ட உயர்நிலைக் கலைஞராக உருவாதல்.

பயிற்சிக்காலத்தில் உணவு, தங்குமிடம், போக்குவரத்து வசதிகள் உண்டு. தன்னம்பிக்கையும், ஆர்வமும் உடையவர்கள் இன்றே இணையலாம்.

15.12.2014 அன்று பி.ப. 2.00 மணியளவில் கிளிநொச்சி கருணா நிலையத்தில் தெரிவு இடம்பெறும். மட்டுப்படுத்தப்பட்ட அங்கத்தவர்களுக்கே இடமுண்டு.
உடனடியாகத் தொடர்புகொண்டு உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

தொ.பே.இல. : 0717871301 / 077178145

Act4

(C-9354)


## றோ தலைவ...

யகத்தின் தலைவர் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டமைக்கான காரணம் தெளிவாக தெரியவரவில்லை.

எவ்வாறாயினும் இலங்கையில் ஏற்பட டுள்ள சூடான அரசியல் நிலைமையில் அவர் தனது சேவையை திருப்தியளிக்கும் வகையில் செய்யவில்லை என்ற காரணத்தினால் டெல்லிக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருக்கலாம் என பாதுகாப்பு வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகரின்கொழும்பு விஜயத்தின் பின்னர் இந்த இடமாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும் இது வழமையான இடமாற்றம் என இராஜதந்திர தரப்புகள் தெரிவிக்கின்றன. (எ-11)

# மரண அறிவித்தல்



அமரர்

## விஸ்வலிங்கம் சுப்பிரமணியம்

2-ம் வட்டாரம் முள்ளியவளையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வலிங்கம் சுப்பிரமணியம் அவர்கள் 12.12.2014 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கம்மாவின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற விஸ்வலிங்கம் - தெய்வானை அம்மா தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற நாகமுத்து - கற்பகம் தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பொன்னம்மா, பொன்னம்பலம் மற்றும் இரத்தினசிங்கம், காலஞ்சென்ற வள்ளிநாயகி, செந்தில்வேல் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சிவராசா, சிவராணி, சிவயோகேஸ்வரி, சிவபாலன் (டென்மார்க்), தில்லைநாதன் (டென்மார்க்), பத்மநாதன் (லண்டன்), பாஸ்கரன், பிரபாகரன் (லண்டன்), ஈஸ்வரன் தனேஸ்வரி (லண்டன்); கிருஸ்ணகுமார் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், செல்வராணி, செல்வவிநாயகம், கேசலநாதன், புஸ்பமலர் (டென்மார்க்), தேவசேனாம்பிகை (டென்மார்க்), சுதாமதி (லண்டன்), நாகராணி, கலைச்செல்வி (லண்டன்), மதிவதனி, தர்மராசா (லண்டன்), பிரபாநந்தி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முள்ளியவளை கற்பூரப்புல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

2-ம் வட்டாரம்,
முள்ளியவளை.

தகவல் :
குடும்பத்தினர்
0779133046

(சி-9370)


SPEED LANKA EXPRESS

வெளிநாடுகளுக்கான
தபால் பொதி விநியோக சேவை



- உள்நாட்டு, வெளிநாட்டு துரித தபால் பொதிகள் சேவை
- உங்கள் இல்லங்களில் இருந்தவாறே அனுப்பும் வசதி
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
- சர்வதேச விமான பயண சீட்டுகளை பெற்றுக்கொள்ளலாம்

Speed Lanka Express (Pvt) Ltd.
135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே - 0772931062, 0776217926
www.speedlanka.net

(சி-9332)



சிங்கர் தளபாட கண்காட்சியும்
மலிவு விற்பனையும்

அனைத்து தளபாடங்களுக்கும்
விசேட விலைக் கழிவுகளும்,
இலகு தவணை கொடுப்பனவு
முறையும்.

இடம்:- பிறேம் பிளாஷா மானிப்பாய்.
(HNB Bank அருகாமை)
காலம்:- 2014 Dec 15- 30 வரை






சோபா செற்
மேசைகள்
அலுமாரிகள்
கட்டில்கள், மெத்தைகள்
அலுவலக தளபாடங்கள்
கணினி, தொலைக்காட்சி மேசைகள்

விநியோகம் இலவசம்

கையிருப்பு உள்ளவரை மட்டுமே!...

தொ.பே: 021 510 0280
021 225 5343

(சி-9368)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.12.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.